மலர்: 58 இதழ்: 11 நவம்பர்: 2015 விலை: ரூ.15

# திருக்கோயில்

இந்து சமய அறநிலையத்துறை வெளியீடு



அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி, மருதமலை



வேலூர் மாவட்டம் குடியாத்தம் அருள்மிகு செல்லப்பிநாயகர் திருக்கோயிலில் 26.10.2015 அன்று நடைபெற்ற திருக்குடமுழுக்கில் கலந்துகொண்ட பக்தர்கள்.




சென்னை மயிலாப்பூர் அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயிலில் நடைபெற்ற நவராத்திரிப் பெருவிழாவில் கொலுக்காட்சி.



# வெற்றி நிச்சயம்

"நமது இலட்சியம் உயர்வானது!
நமது பார்வை தெளிவானது!
நமது வெற்றி முடிவானது!"

- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
புரட்சித் தலைவி **அம்மா** அவர்கள்




**அன்பார்ந்த வாசகப் பெருமக்களுக்கு,**

**வணக்கம்**

மனிதன் தோன்றிய நாள்தொட்டு அமைதி என்ற ஒன்றைக் காலம் காலமாகத் தேடி அலைவதை நாம் அறிகிறோம். சிலர் இந்த உலகத்தில் அமைதி வேண்டும் என்று தேடினர். அடுத்த உலகம் ஒன்று இருப்பதாக நினைந்து இவ்வுலகில் வாழ்வதைவிடுத்து பிற உலகை நாடுவதிலேயே காலத்தைச் செலவழித்தனர். அடுத்த உலகத்தில் மட்டுமே அமைதி என நாடினர் சிலர். இன்னும் சிலர் இவ்விரண்டிலும் அமைதி நாடினர். ஆக மொத்தத்தில் அமைதியான வாழ்க்கையைப் பெரும்பாலும் விரும்புகின்றனர். இதையும் கடந்து சிலர் புகழ் ஒன்றிற்காகவே வாழ்கிறவர்களும் உள்ளனர்.

அமைதியான உலகம் அமைவதற்கு வேற்றுமை என்பது இருக்கும்வரை இது சாத்தியமில்லை. மனிதனுக்கு மனிதன் வேற்றுமை தவிர்த்தாலும், மனஇயல் வேற்றுமை இருந்தே தீரும். உலகியல் தேவைகள் கிடைத்தவுடன் மனம் அமைதியாகிவிடும் என்று கருதுகிறோம். இது சாத்தியமில்லை 'அரிது பெற்றிடினும் பெற்றதில்விருப்பம் அறப் பெறாதன விரும்பும் உயிர்கள்' இவ்வுண்மையை முன்னோர்கள் நன்றாகவே உணர்ந்துள்ளனர். எதைப் பெற்றாலும் பெற்றவுடன் கிடைக்காத பிற பொருளை இந்த மனம் விரும்பிக்கொண்டே இருக்கும்.

மானிடர்களிடையே இந்த விருப்பங்களை நிறைவேற்றுவதிலும் வேறுபாடுகள் உள்ளன என்கின்றனர். ஆணவம், கன்மம், மாயை ஆகிய மூன்றனுள் தலையாயதாக ஆணவம் உள்ளது. உயிர்களின் தகுதிக்கேற்றவாறு ஆட்டுவிக்கிறது. அதற்காகத்தான் இதனை அழுக்கு என்றனர். ஆணவமயமாக நின்று அழிந்த சூரபத்மன் இதற்கு எடுத்துக்காட்டாக அமைவதை ஒவ்வோர் ஆண்டும் முருகப்பெருமானின் சூரசம்காரத்தை விழாவெடுத்துக் கொண்டாடுகிறோம். ஆணவம் அழிந்ததை விளக்கும் விதமாக முருகப்பெருமானின் 'கந்தசஷ்டி' கட்டுரை விளக்கி நிற்கிறது. இம்மாத இதழில் பாடல்பெற்ற தலங்களின் வரிசையில் இராமேசுவரத்தின் பெருமையும் மங்களாசாசனம் செய்யப்பட்ட திருக்கோயில்களின் வரிசையில் 'திருநாராயணபுரம்' என்னும் கட்டுரையும் இடம்பெற்றுள்ளன.

'உலகமென்பது உயர்ந்தோர் மேற்றே' என்பது தொல்காப்பியம். ஆகவே, உயர்ந்தோர்களால் சிறப்பாக கொள்ளப்பட்ட நூல்தான் புராணங்கள். இவைதான் ஆன்மிகத்தின் அடித்தளமிட்ட வரலாறாகும். திருவருளால் திருத்தலங்கள்தோறும் பயணித்த அருளாளர்கள் தாம் கண்ட அனுபவத்தை புராணங்களோடு இயைபுடுத்தி அருள்திறத்தோடு உதித்த ஆன்மிக கருத்துகளைத் தொடர்ந்து பகிர்ந்து வருகின்றனர். அனைத்துக் கட்டுரைகளும் பக்தர்களுக்கு ஆற்றுப்படுத்தும் விதமாக அமையப்பெற்றுள்ளன.

நல்ல கருத்துகளை நாளும் பகிர்ந்து அனைவரும் நலம்பெற திருக்கோயில்களுக்குச் சென்று தீபாவளித் திருநாளில் திருவிளக்கை வணங்கி நல்வாழ்வு பெறுவோமாக.

வாழ்த்துகள்.

**ஆணையர்**

# திருக்கோயில்

திங்கள் இதழ்
நிறுவிய ஆண்டு: 1958
திருவள்ளுவர் ஆண்டு: 2046
மன்மத வருடம்
ஐப்பசி – கார்த்திகை
நவம்பர் – 2015
மலர்: 58 இதழ்: 11



சிறப்பாசிரியர் (ம) வெளியிடுவோர்
முனைவர் **மா. வீர சண்முக மணி**, இ.ஆ.ப.
ஆணையர்
இந்து சமய அறநிலையத் துறை
நுங்கம்பாக்கம், சென்னை - 600 034.

ஆசிரியர்
முனைவர் **ஜெ. சசிக்குமார்**

ஆணையர் அலுவலகம்
இந்து சமய அறநிலையத் துறை
119, உத்தமர் காந்தி சாலை
நுங்கம்பாக்கம், சென்னை - 600 034.
தொலைபேசி எண்: 28334811/12/13
www.tnhrce.org
thirukkoil@tnhrce.org
தொலைநகலி எண்: 044 - 28334816



சந்தா விபரம்
தனி இதழின் விலை ரூ. 15
ஓராண்டுச் சந்தா ரூ.175
பத்து ஆண்டுச் சந்தா ரூ. 1700
ஆயுட்காலச் சந்தா ரூ. 2500
ஆயுட்காலம் - 15 ஆண்டுகள் மட்டும்
இதற்கான பணவிடையை / வங்கி வரைவோலையை
Commissioner, HR&CE Dept.,
Chennai-34. என்ற முகவரிக்கு அனுப்பவும்.


தங்கள் பகுதி திருக்கோயில்களில் நடைபெறும் குடமுழுக்கு, விழாக்கள் மற்றும் ஆண்டு விழாவாக நடைபெறும் சிறப்பு பூஜைகள் குறித்த தகவல்களை மின்னஞ்சலில் ஒரு மாதத்திற்கு முன்பே தெரிவித்தால் இம்மாத நிகழ்வாக இலவசமாக வெளியிடப்படும்.

## இதழின் உள்ளே...


1. **கண்ணாடி அறை**
   சின்மயானந்தர் 5
2. **தமிழர் பண்பாடு** 7
3. **மூன்று, ஆயிரம், கோடி**
   வெ. இராமமூர்த்தி 11
4. **அரக்கனை விழுங்கிய விநாயகர்-!**
   பொள்ளாச்சி சிவமணியன் 14
5. **வாழ்வை வளமாக்கும் பாரியூர் கொண்டத்து காளியம்மன்**
   மேவானிகோபாலன் 16
6. **பாண்டுரங்கா! பண்டரிநாதா!!**
   வெள்ளித்திருப்பூர் சுபாசு 20
7. **திருநாராயணபுரம்**
   வேணுகோபால நாயகர் 22
8. **கவலைகள் போக்கும் கந்தசஷ்டி விரதம்**
   சம்பத்குமார் 24
9. **சங்கத் தமிழில் முருகன்**
   முனைவர் மா.கி. இரமணன் 28
10. **நன்னெறி காட்டிடும் திருஇராமேச்சுரம்**
   சுபாசு 32
11. **புன்னை வனத்தில் அருள்பாலிக்கும் அன்னை கோமதி**
   ச. முத்துச்சாமி 34
12. **வனம் உயிரினங்களின் வரம்**
   வெ. சுந்தரம் 38
13. **பிரார்த்தனை**
   சிதம்பரம் ரவிச்சந்திரன் 40
14. **உணர்வும் நெறியும்**
   முனைவர் ஜெ. தமிழ்ச்செல்வி 42
15. **ஆனாய நாயனார்**
   சிவ. சண்முகதிரவியம் 44
16. **திருப்பூவணம்**
   அமுதா 48


பக்திக்கதை, கட்டுரை, ஆன்மிகக் குறிப்புகள், அருளாளர்களின் சுவையான வாழ்வு நிகழ்வுகள், வாசகர் கடிதங்கள் முதலியவை வரவேற்கப்படுகின்றன.

அலைபேசி எண்களுடன் தெளிவான முகவரியோடு தபால் மூலம் அனுப்பவும்.

கட்டுரைகளைக் கணினியில் தட்டச்சு செய்து அனுப்பவும். தொடர்புடைய படங்கள் இருப்பின் குறுந்தகட்டில் அல்லது மின்-அஞ்சலில் அனுப்பலாம்.

# கண்ணாடி அறை

*சின்மயானந்தர்*



மணிபாலர் என்ற வல்லமை மிக்க மன்னர் மகத நாட்டை ஆண்டு வந்தார். இந்தியா முழுவதிலும் அவரது புகழ் பரவியிருந்தது. இந்த சிறந்த மன்னருக்குப் பற்பல நிறங்கள் என்றால் மிகவும் விருப்பம். எனவே, ரோஜா நிறத்திலும், கத்தரிப்பூ நிறத்திலும், சிவப்பு நிறத்திலும், ஆரஞ்சு நிறத்திலும், புள்ளி போட்ட பொன்நிறத்திலும், துளிர்ப்பச்சை நிறத்திலும் மிகப்பல ஆடைகளை அணிந்துகொண்டு தன்னை அழகு பார்ப்பதில் மகிழ்ந்திருந்தார். நிறங்களின் மீது அவருக்கிருந்த நுண்ணிய ருசியானது, சிறிதளவே வேறுபட்டிருந்தாலும் ஒரே நிறத்தில் கிடைக்கக்கூடிய இருதி சாயங்களைப் பாகுபடுத்தக் கூடிய திறமையைப் பெற்றிருந்தார். அவருடைய அழகிய அறை நடுநாயகமாக இருந்து அனைவரையும் கவர்ந்திழுத்தது. மணிபாலர் அரண்மனையை விட்டுச் செல்வதற்கு முன் ஒவ்வொரு முறையும் இந்தக் கண்ணாடி அறைக்கு விஜயம் செய்வதை குறிக்கோளாகக் கொண்டிருந்தார். அச்சமயங்களில் அவர் கண்ணாடி முன் நின்று அதில் பிரதிபலிக்கப்பட்ட தனது கம்பீரத்தையும், இளமைத் தோற்றத்திலிருந்த அழகையும் கண்டு ஆழ்ந்து போனார்.

மிருகங்களிடம் அதிகமான ஆர்வம் கொண்டிருந்த இந்த மன்னர் மிகச் சிறந்த மிருக சாலையை அமைத்திருந்தார். அங்கிருந்த பிரியமுள்ள பிராணிகளிடையே பெரிய உருவமும் பயங்கரத் தோற்றமும் கொண்ட செல்ல அல்சேஷன் நாய் ஒன்று இருந்தது. இந்த அல்சேஷனைப் பற்றிய நினைவு தம் மனத்தில் எழுந்த மாத்திரத்திலேயே அதைத் தன்னிடம் அழைத்து வருமாறு பணித்து விடுவார் மன்னர். பின்னர் அதைக் கொஞ்சி, வெண்ணெய் பிஸ்கட்டுகளாலும், சாக்லேட் துண்டங்களாலும் அதன் வயிற்றை நிரப்புவார். இந்த நாயும் அவர் தரும் உயர்தர பிஸ்கட்டுகளையும், சாக்லேட்டுகளையும் உண்டுவிட்டு வேறு எந்தவிதமான தின்பண்டங்கள் அளிக்கப்பட்டாலும் அவற்றை நுகர்ந்துகூடப் பார்க்காமல் இருந்தது.

ஒருநாள் காலை அவரது நாட்டில் செல்வச் சீமான்களால் நிறுவப்பட்ட புதிதான மிகப்பெரிய பஞ்சாலையை திறந்து வைப்பதற்காக தன்னை மிகவும் அழகாக அலங்கரித்துக் கொண்டு ஆடை உடுத்தியிருந்தார் மன்னர். இந்நிகழ்ச்சிக்காக அவர், கத்தரிப்பூ நிறத்தில் சிகப்பும் பொன்னும் கலந்த மேலங்கிகளைப் பெற்ற ஆடையினை உடுத்த நினைத்திருந்தார். அவர கிரீடமானது மிகவும் விசேஷமான, விலைமதிப்பற்ற கற்களால் அமைக்கப் பட்டது. தேர் ஒன்று காத்து நின்றது. மிக அழகாக உடை உடுத்தியிருந்த மன்னர் வழக்கம் போலவே கண்ணாடி அறையில் நுழைந்து சுவர்களை அலங்கரித்த கண்ணாடிகளில் தெரிந்த பற்பல பிம்பங்களைக் கண்டு மனநிறைவு பெற்று அங்கிருந்து வெளியேறினார். அவ்வறைக்கு வெளியே நின்றுகொண்டிருந்த செல்ல அல்சேஷன்

நாய் "அவ்வறையில் என்னதான் இருக்கும்" என்று தெரிந்துகொள்ள விரும்பியது. எண்ணத்தைச் செயலாக்கியது. அடடா அறையில் நுழைந்ததும் அதன் முன் பல்லாயிரக்கணக்கான அல்சேஷன் நாய்கள் அதைப் போலவே வீறாப்புடனும் அதிசயத்துடனும் தன்னைப் பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டது. இப்பொழுது அது தனக்குத்தானே "இதுதான் மர்மமா? நான்தான் செல்வம் என்று இதுநாள் வரை நினைத்திருந்தேனே. என்னுடைய வீரத்தைப் பற்றியும் மதிப்பைப் பற்றியும் இவற்றிற்குத் தெரிவிக்கவே மன்னர் தினமும் இங்கு வந்து செல்கிறார் என்பதை இப்பொழுது தெரிந்து கொண்டேன்." பொறாமையால் பீடிக்கப்பட்ட அந்த நாய் உறுமிக்கொண்டே தனது பற்களை நறநறவென்று கடிக்க ஆரம்பித்தது. ஆனால் தன்னைப் போன்றே வேகத்துடனும் குரோதத்துடனும் மற்ற நாய்கள் தன்னைப் போலவே உறுமி, பற்களைக் கடித்தது ஆச்சரியம் தரும் விஷயமாக இருந்தது. இப்பிராணிகளின் மீது தனக்கிருந்த குரோதத்தை இதற்கு மேலும் கட்டுப்படுத்த முடியாமல் அவற்றின் மீது பாய்ந்து அவற்றைத் தாக்க ஆரம்பித்தது.

பஞ்சாலையை வெற்றிகரமாகத் திறந்து வைத்து விட்டதால், மாலையில் சந்தோஷத்தால் ததும்பிக் கொண்டிருந்த மனதைக் கொண்ட மன்னர் அரண்மனைக்குத் திரும்பினார். மற்றும் ஒரு முறை அவர் கண்ணாடி அறைக்குள் நுழைந்தார். அங்கு தரையிலிருந்த மூன்று அடி உயரம் வரை சுற்றியிருந்த எல்லாக் கண்ணாடிகளுமே உடைந்திருப்பதைக் கண்டார். கண்ணாடிகளின் மீது இரத்தம் சிதறித் தெறித்திருந்தது. மன்னரின் கோபம் உச்சத்தை எட்டியது. முள்ளின் மீதமர்ந்தது போலிருந்தது அவருக்கு. இந்தச் சேஷ்டைக்குக் காரணம் யாராக இருக்க முடியும் என்று அவருக்கு யாரும்கூறத் தேவையிருக்கவில்லை. திரும்பிப் பார்த்த அவர், கண்களில் அறையின் மூலையில் எல்லாப் பற்களையும் இழந்து வீரம் நிறைந்த தனது அருமை அல்சேஷன் நாயைக் கண்டார். கண்ணாடி அறையில் ஏற்பட்ட துக்க சம்பவத்திற்கு யார் காரணம் என்று அவருக்கு விளங்கிவிட்டது. தலையெழுத்து தவறிவிட்டதால் தனது அறிவீனத்தால் தான்கண்ட பிம்பங்கள் அனைத்தையும் சந்தோஷத்துடன் அனுபவிக்காமல் தன்னுடைய கற்பனைக்குத் தன்னையே பலியாக்கிக் கொண்டிருந்தது அல்சேஷன் நாய்.

நாம் வாழும் இவ்வுலகமும் கதையில் வரும் கண்ணாடி அறை போலத்தான். பரம்பொருள் தத்துவத்தைத் தவிரவேறல்லாத நாம்தான் கதையின் மன்னர். ஆனால் அறிவீனத்தால் மதிமயங்கி உலகம் தரும் துன்பங்களையும் துயரங்களையும் கஷ்டப்பட்டு அனுபவிக்கின்றோம். உலகம் காட்டும் நம்முடைய பற்பல பிம்பங்களைக் கண்டு சந்தோஷப்படாமல், அந்த நாய் போல நாம் காணும் பிம்பங்களின் கொடூரத்தையும், துயரத்தையும், துன்பத்தையும் அனுபவிக்கின்றோம். பரம்பொருளுடன் நாமும் ஒன்று என்பதை நாம் அறிந்துகொள்ள வேண்டும். அப்பொழுது கண்ணாடி அறை நமக்கு சந்தோஷத்தையும் இன்பத்தையும் தரும் பொருளாக விளங்கும். ஆனால் அறிவீனத்தினால் அந்த நாயைப் போன்று நாமும் இந்தக் கண்ணாடி அறைக்குள் நுழைந்தால் நமக்கு வாய்க்கும் துயரத்தை அனுபவிக்க வேண்டியதுதான். கண்ணாடி அறைக்குள் ஒரு நாயைப் போலல்லாமல் ஒரு கடவுளைப் போல நுழைய வேண்டும்.

❖❖❖

## குருட்டு நம்பிக்கை

அமெரிக்க பெரியவர் ஒருவர் தன் வீட்டில் தினமும் மாலை வேளையில் பக்தி பாடல்களை இசையுடன் மனமுருகப் பாடி வருவது வழக்கம். அக்கம்பக்கத்திலுள்ள சிறுவர் சிறுமியரும் அவருடன் பஜனையில் பங்குகொண்டு இன்புறுவர்.

உற்சாகம் மிகுந்த சிறுவன் ஒருவன் ஒரு நாள் பஜனை முடிந்தவுடன் பெரியவரை அணுகி "கடவுளை நாம் தினமும் பக்தியுடன் தொழுது வருகிறோம். ஆனால் அவர் நமக்குக் காட்சி அருளவில்லை. சிலர் நம்மை "குருட்டு நம்பிக்கை" கொண்டவர்கள் என்று கேலியும் செய்கிறார்கள். கண்களுக்குப் புலப்படாத கடவுளை நாம் எப்படி நம்புவது?" என்று துணிச்சலாகக் கேட்டான்.

மதிநுட்பம் மிகுந்த அப்பெரியவர், பையன் விடுத்த வினாவிற்கு பதில் ஏதும் பகராமல், சிரித்துக்கொண்டு, "போடா போக்கிரிப் பயலே" என்று சொல்லிக்கொண்டு அச்சிறுவன் தலையில் ஒரு குட்டு குட்டி அனுப்பிவிட்டார். அடுத்த நாள் பஜனைக்கு வந்த அச்சிறுவன் அப்பெரியவரிடம் "தாத்தா! நேற்று நான் கேட்ட கேள்விக்கு தாங்கள் விடை அளிக்கவில்லையே என்று சொன்னான். "நான்தான் நேற்றே உனக்கு உடனேயே பதில் கொடுத்துவிட்டேனே" என்றார் பெரியவர். "பதில் ஏதும் பகராமல் தாங்கள் என் தலையில் ஒரு குட்டுதானே குட்டினீர்கள்" என்று சிறுவன் கூற, பெரியவர் தொடர்ந்தார். "குட்டுதான் பதில். குட்டு உனக்கு சிறிது வலியை கொடுத்திருக்கும் அல்லவா? ஆனால் அந்த வலியை நீ கண்ணால் காண வில்லையே. நானும் பார்க்கவில்லை. வலி இருப்பதாக எப்படி நம்புவது? கண்ணால்தான் ஒருவரும் பார்க்க முடியவில்லையே?

❖❖❖

# தமிழர் பண்பாடு

பண்பாடு என்று பேசுகிறோம். ஆனால் அதன் பொருளை அறிவது அருமை. பண்படுத்திய நிலம் என்று சொல்வது போலப் பண்பட்ட மனம் என்றால் பண்பட்ட மனிதப் பாங்கு என்றும் பேசலாம். இங்கே உள்ளத்தில் சிறப்புநிலை தோன்றி னாலும், அது தனி மனிதனின் சிறப்பாக இருந்தால் பண்பாடென நாம் பேசுவதில்லை. ஒரு நாட்டின் பண்பாடு ஓர் இனத்தின் பண்பாடு என்றே பேசி வருகிறோம்; இப்படி குறிப்பிட்ட மக்கட் கூட்டத்தில் பண்பாடென நாம் பேசுவது அக்கூட்டத்திலுள்ள ஒவ்வொருவருடைய பண்பாடாகவும்தான் அது வெளிப்பட வேண்டும். இதனாலேதான் மதக் கொள்கையிலும் வேறு பண்பாடு என்று வற்புறுத்த வேண்டும்.

நாகரிகம் உணவிலும் உடையிலும் இதுபோன்ற பிற வாழ்க்கையின் ஆரவாரங்களிலும் தோன்றும் ஒன்றாகும். நகரத்தின் ஆரவாரந்தானே நாகரிகம்; பண்பாட்டையும் நாகரிகம் என்று சொல்லும் இடமும் உண்டு. 'பெயக்கண்டும் நஞ்சுண்டமைவர் நயத்தக்க நாகரிகம் வேண்டுபவர்' என்ற குறளில் பகைவர் மனமும் நோவாதபடி வாழும் கண்ணோட்டம் நிறைந்த பண்பாட்டையன்றோ வள்ளுவர் நாகரிகம் என்கிறார். ஆனால் பெரும்பாலும் சிறந்த வாழ்க்கைக்கு அடிப்படையாக அமைகின்ற உள்ளப் பாங்கின் வெளிப்பாட்டையே பண்பாடு என்கிறோம். அந்த வெளிப்பாடு கலையுணர்வாகவும், நடை உடை பாவனைகளாகவும் தோன்றும். அப்பண்பா டில்லாதவனைக் காட்டுமிராண்டி என்கிறோம். வாழ்வின் பலபல போக்குகள் அமைந்த பலவேறு நிலைகளையும் இந்தப் பண்பாடென்பது குறிக்கும். உடலைப் பற்றிய நன்னிலை, மனத்தைப் பற்றிய தூய்மைநிலை, பேச்சின் இனிமை இவையெல்லாம் பண்பாட்டில் அடங்கும்.

'திரிகரணங்கள்' என்று சமய சாத்திரங்கள் பேசும் மனமொழிமெய் என்பவற்றின் அமைதியே இங்கே சுட்டப்படுகின்றது. பிறரை முட்டி வருத்தாத நிலையில் இவற்றின் அமைதியைத் தமிழர்கள் மனத்தைப் பற்றிய உண்மை என்றும், உடலைப்



பற்றிய மெய்மை என்றும், பேச்சினைப் பற்றிய வாய்மை என்றும் பண்பாட்டு நோக்கத்தில் பேசிய தோடு இவை அடிப்படையில் ஒன்றாக விளங்கு வதையும் தங்கள் பெருவழக்கில் சுட்டி வந்தார்கள். முன்னே கூறியதுபோல இவை மக்கட் கூட்டத்தின் சிறப்பியல்பாகவும், தனி மக்களின் சிறப்பியல்பாகவும் விளங்கும்போதே பண்பாடு எனப் பேசுகின்றோம்.

இவை ஓவியம் முதலிய கலைப் பொருள்களாக வடிவெடுத்து நிற்பதும் உண்டு. ஓவியங்களும் சிற்பங்களும் பழைய பண்பாட்டின் நுட்பத்தை நமக்கு விளக்குகின்றன. ஒவ்வொரு மக்கட் கூட்டமும் வாழ்க்கையில் புருஷார்த்தங்களாகப் பல பலவற்றைக் கொண்டு வாழக் காண்கிறோம். எனவே இவற்றின் வேறுபாட்டாலும் பண்பாட்டின் வேறு பாட்டை நாம் அதில் அறிய முடிகிறது. ஒரு வகையில் பண்பாடு நம் மனநிலையைக் குறிப்ப தென்றாலும், அங்கேயும் நம் மனப்பாங்கு பல நிலையில் அமையக் காண்கிறோம். கலை முதலியன போன்றவை அகத்து மனத்தே எழுந்து புறத்தே வெளிப்படுவன. ஆதலினால் அவற்றை 'அகப்புற நிலை' எனலாம். இனி அகநிலையாகவே இருக்கின்ற புருஷார்த்தக் கொள்கை முதலியவையும் இங்கே ஆராயத்தக்கவை. எல்லாவற்றிற்கும் அடிப்படையான அகத்துக்கும் அகமான ஆன்மீக வாழ்வு என்ற நிலையும் உண்டு. இதனை 'அகத்திலே அகம்' என்று கூறலாம். இந்தப் பண்பாட்டின் கூறுகளில் உண்மை பேசுவது என்பது போன்றவை எல்லாப் பண்பாடுகளிலும் விளங்கும் பொதுநிலை ஆகலாம்; வேறு சில கூறுகள் ஒவ்வொரு கூட்டத்திற்கோ, நாட்டிற்கோ சிறப்பாக அமையலாம். ஆன்மீகத்தை வற்புறுத்துவது இந்தியப் பண்பாட்டின் சிறப்பு நிலையாகும்.

நம்முடைய இந்தியப் பண்பாடு புறக்கோலத்தின் அழகையும் அமைதியையும் காணும்போதும் அதனோடு அமைந்துவிடாது. அந்தப் புறநிலைக்கும் அடிப்படையாகத் தோன்றுகிற ஓர் அகநிலை அமைதியை அகக் கண்ணால் காண முயல்கிறது. நம்முடைய கலைகளையெல்லாம் இந்தக் கண் கொண்டுதான் பார்க்க முயல்கிறோம். கூத்தப் பெருமானின் புறக்கோலம் பல கோடுகளின் அமைதியாக விளங்கினாலும், புன்முறுவலும், அழகும், மிடுக்கும் உள்ள வடிவம் அழகாகத் தோன்றினாலும், அவற்றை மட்டும் கண்டதோடு நாம் நிற்பதில்லை. அவற்றை எல்லோரும் காணக் கூடும். ஆதலின் அவற்றைப் பற்றி நாம் பேசுவதும் இல்லை. அவற்றிற்கு அப்பாற்பட்ட ஒரு கடவுள்நிலை, அவன் ஆட எல்லாம் ஆடும் என்ற உண்மையின் விளக்கம் என்ற இவற்றையெல்லாமே நாம் கண்டு மகிழ்கிறோம். அப்படிக் காணும்போது அவ்வடிவத் தின் ஒவ்வொரு கூறும் ஒவ்வோர் ஆழ்ந்த கருத்தின்



அடையாளமாக விளங்கக் காண்கிறோம். உடுக்கை படைப்பினைக் குறிக்கிறது. எரியழல் அழிவைக் காட்டுகிறது என்றெல்லாம் பேசுகிறோம்.

இப்படித்தான் சிற்பங்களும், கோயில்களைக் காணும்போதும், படிபடி நிலைகளால் படிப்படியாக உயர்ந்து சென்று கடவுள் நிலையில் ஒன்றுபட்டு முடிகின்ற அண்டத்தின் நுட்பத்தையே அங்கே விளக்கமாகக் காண்கிறோம்.

நம்முடைய இலக்கியங்களிலும் இந்த உண் மையே விளங்குகிறது. பலவகைச் செய்யுளுறுப்புக் களும் முடிவாக ஒன்றை நோக்கி நிற்கின்றன. நம் முடைய உள்ளம் காப்பியப் பேரின்பச் சுவையாக மாறி நிற்பதற்கு இதில் வரும் ஒவ்வொன்றும் துணை செய்கின்றன. 'தொனியே பாட்டின் உயிர்நிலை' என்று கூறுவதும் இதனாலேயே ஆம்.

வேதப் பாடங்களில் பகலவன் தோன்றலாம்; அவனுடைய அழகும் ஆற்றலும் விளங்கலாம். ஆனால் அந்தப் புறக் கோலத்தின் அழகோடு ஒன்றித்து விளங்கும் கடவுள் நிலையும் அங்கே பாவலர் கண்ணுக்குப் படுகிறது. அதனால் பகலவனையே எல்லாமாகப் பாடும் போக்கும் அங்குண்டு.

சங்கப் பாடல்களிலும் இந்த நிலையைக் காண்கிறோம். அகப்பாடல்கள் என்று அனைத்திலும் உயிர்நிலையாக விளங்குகின்ற அன்புநெறியை வளர்க்கும் பாடல்களில் வருபவர்கள் ஓர் ஆணும் பெண்ணுமாய் இருக்கலாம். அங்கே அவர்களின் நடையைப் பார்க்கலாம், உடையைப் பார்க்கலாம். ஆனால் புலவன் நமக்கு அங்கே விளக்குறுத்துவது மனிதத் தன்மைக்கே உயிர்நிலையாக விளங்குகின்ற அன்பின் விளக்கத்தையே ஆம். அந்த அன்பின் விளக்கத்தைப் பல்வேறு கோணங்களிலிருந்து காண்கின்ற காட்சியே அவற்றின் சிறப்பு.

இந்த உண்மையை பக்திவெள்ளம் பெருகின காலத்தில் தொண்டர்கள் உணர்ந்துகொண்டார்கள். 'அன்பே சிவம்' என்பது திருமூலர் துணிவு. இந்தத் துணிவோடு அகப்பாட்டு என்கின்ற பெயர்ப் பொருத்தத்தை நாம் அணுக வேண்டும். அதனை ஆராய்ந்த நாயன்மார்களும் ஆழ்வார்களும் தாம் அனுபவித்த கடவுள் இன்பத்தை நமக்கு விளக்க வரும்போது, இத்தகைய அகப் பாடல்களாகவே பாடிக் காட்டுகிறார்கள். ஆண்டவனே காதலனாக தொண்டர்கள் காலியாகப் பாடுகின்ற பாட்டையெல்லாம் வெறுங்காதற் கதைகள் என்று கொள்வதற்கில்லை. காதற் கதையையும் தாண்டி விளங்கும் கடவுள் இன்ப அன்பின் காட்சியே அங்கெல்லாம் காண்கிறோம்.

இப்படிக் கடவுள் விளக்கமாக எல்லாம் முடியும்போது நம்முயிர் மட்டுமின்றி நம் உள்ளமும் உடலும் ஆண்டவன் கோயில்களாகச் சிறந்து தோன்றுகின்றன. அப்போது உடலை வெறுக்கின்ற பேச்சோ, இழக்கின்ற பேச்சோ இல்லை.

இங்கே 'எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும் கண்ணென்ப வாழும் உயிர்க்கு' என்ற குறள் நினைவிற்கு வருகின்றது. நம்முடைய கல்வி உள்ளிருக்கும் சில ஆற்றல்களை வெளிப்படுத்தும் வகையாக அமைகிறது. எழு பிறவியிலும் தொடர்ந்து வளர்ந்து வரும் ஆற்றல்கள் ஒவ்வொருவரின் சிறப்பியல்புகளாக வெளியாகின்றன. நம்முடைய விஞ்ஞானப் போக்குள்ள அறிவு இவ்வாறு கல்வியால் வளர்கின்றது. இவையெல்லாம் அளந்தறிந்து அறிய முயலும் முயற்சியே ஆம். இந்த அளவைக்கெல்லாம் அடிப்படை எண்கள்தாம். எனவே இத்தகைய அறிவின் பெருக்கத்தைத்தான் 'எண்' என்கிறார் வள்ளுவர் என்று கொள்ளுதல் கூடும். இந்த விஞ்ஞான அடிப்படையின் மேலே எழுப்பப்படுகிற நாகரிகக் கோட்டைகள் எல்லாம் இந்த எண்ணின் விளக்கமேயெனலாம்.

ஆனால் இப்படி அளந்தறிய முடியாது நிற்கின்ற ஓர் உளப்பாங்கும் உண்டு. அது முன்னைய கல்விபோல உள்ளேயிருந்து வெளியே ஈர்க்கப்படுவதல்ல. பலப்பல கல்விகளாலும், அந்தக் கல்விகளால் உயர ஓங்கும் நாகரிகத்தாலும், உள்ளம் பண்படுகிறது. கல்விச் சூழ்நிலை முதலியவற்றின் பயனாக மாறி நிற்கும் மக்கட் கூட்டத்தின் நிலையில் ஒவ்வொருவனும் அப்பொது நிலையை ஒப்பப்பெறும் உள்ளுணர்வு நிலையும் அதன் விளக்கமுமே பண்பாடு.

அந்தப் பண்பட்ட நிலையே கலையின் உயிர்நிலை; கலைக்கு இரண்டு நிலைகள் உண்டு. கலையைக் கலைஞன் முதலில் தன் உள்ளக்காட்சியாகக் காண்கிறான். அங்கே அது அவனுக்கே உரிய தற்கிழமைப் பொருளாக விளங்குகிறது. பின்னே ஓவியமாகவும், சிற்பமாவும், இசையாகவும், பாவாகவும், பிறர் எல்லாரும் அனுபவிக்கக்கூடிய நிலையை அடைகிறது. அப்போது அது பிறிதின் கிழமையாய்ப் பிறர்க்கும் உரியதாகிறது. அவனுடைமை என்பது நீங்கிப் பொதுவுடைமையாகிறது. இந்த இரண்டு நிலையும் கவிஞன் செய்து அமைக்கும் செய்யுளாம் கலைக்கே உண்டு. அதனாலேயே அதற்குச் 'செய்யுட்கிழமை' என்று பழைய இலக்கணத்தில் பெயருண்டு. இந்தக் கலைப் போக்கைத்தான் எழுத்தென்கிறார் வள்ளுவர் என்று கூற இடம் உண்டு.

'கட்புலனாகக் கடவுளைக் காட்டும் சட்டம்' போன்றது எழுத்தென்று பழைய இலக்கண நூல்கள் கூறுகின்றன. எண்ணால் காண முடியாத கடவுளைக் காட்டும் அடையாளமாக விக்கிரகங்கள் இருக்கின்றன. அதுபோலக் கண்ணாலே பார்க்க முடியாத ஒலியின் அடையாளமாகக் கண்ணால் பார்க்கும் வரிவெழுத்துக்கள் விளங்குகின்றன. இப்படி அடையாளமாக வேறொன்றைக் குறித்து நிற்பவற்றையே எழுத்து என வழங்குவது மரபு. ஓவியம் முதலிய கலைகளும் மேலே விளக்கியபடி வேறொன்றைக் குறிக்கும் அடையாளங்களாக விளங்குவதால், எழுத்தென்றும் கூறத்தக்கவையே. எழுத்தென்பதற்கு ஓவியம் என்ற பொருளும் உண்டு. இங்கே நாம் விளக்கியபடி பார்த்தால் எண்ணோ நாகரிகத்தில் முடிவதையும் எழுத்தோ பண்பாட்டில் முடிவதையும் காணலாம்.

இதுவரையிலும் கலை முதலியன பண்பாட்டின் விளக்கமாக அகப்புற நிலையில் அமைவதைக் கண்டோம். சமூக நிறுவனங்களின் ஒழுக்க நெறியும் பண்பாட்டின் விளக்கமே ஆகும். தமிழ்நாட்டில் ஒழுக்கத்தை வற்புறுத்தும் நூல்கள் இலக்கியமாகவும் சிறந்து விளங்குகின்றன. வள்ளுவர் காலத்திலிருந்து புதிய ஆத்திச்சூடி பாடிய பாரதி காலம், பாரதிதாசன் காலம் வரையிலும் நீதி நூல்களுக்கு ஓர் ஏற்றம் உண்டு. நம்முடைய குழந்தைகள் முதலில் படிக்கும் செய்யுள் நூல்கள் ஆத்திச்சூடியும், கொன்றை வேந்தனும், வெற்றி வேற்கையும், நல்வழியும், நீதி வெண்பாவும், நீதிநெறி விளக்கமுமே ஆம். பழைய இலக்கியங்களைப் படிக்கும்போது பதினெண்கீழ்க் கணக்கு நூல்களைப் படித்து இன்புறுகிறார்கள்.

திருக்குறள் தமிழரது வேதமாக விளங்குகிறது. இது ஒரு தலைசிறந்த அறநூல். நாலும், இரண்டும் சொல்லுக்குறுதி என்ற பழமொழி நாலடியாரையும் திருக்குறளையும் சுட்டிக்காட்டுகிறது. காப்பியம் எழுத வருகின்றவர்கள் எல்லாம் திருக்குறளை இலக்கணமாக வைத்துக்கொண்டு இலக்கியம் எழுதுகிறார்கள்.



கடவுள் வேதத்தைப் பாடினான் என்று சொல்லும் போதெல்லாம், நால்வர்க்கு அறம் உரைத்தான் என்றே பாடுகின்றார்கள். அருளை வற்புறுத்த வந்த அப்பர் பெருமான் கடவுளைத் 'தயாமூலதன்மமே' என்ற அறவடிவமாகவே கண்டு புகழ்கின்றார். இதனால் தமிழ்ப் பண்பாட்டில் அறத்திற்கு இருக்கும் ஏற்றம் நன்கு விளங்கும். அறத்தையே கடவுளாகக் காண்கின்ற காட்சியில் திளைத்துத்தான் திருவள்ளுவர் தம் அறநூலைச் செய்தாரோ என்று நாம் வியக்க வேண்டியிருக்கிறது.

புருஷார்த்தங்களும் பண்பாட்டின் விளக்கம் என்று கண்டோம். அறம் பொருள் இன்பம் வீடு எனப் புருஷார்த்தங்கள் நான்கு. ஆனால் தொல்காப்பியரோ இன்பமும் பொருளும் அறமும் என்று மூன்று புருஷார்த்தங்களையே கூறுகிறார். வள்ளுவரும் இந்த மூன்றையே விளக்குகிறார். இவர்கள் மோட்சத்தைப் புறக்கணிப்பவர்கள் அல்லர்; மோட்சதர்மத்தையும் அறத்திலேயே அடக்கிக் கூறுபவர்கள். 'யான்', 'எனது' என்கின்ற தன்னலத்தைத் துறந்து நின்று குடும்பத்தோடும், சமுதாயத்தோடும் பின்னர் உலகோடும், முடிவாக எல்லாம் ஆகிய கடவுளோடும் ஒன்றித்து நிற்கின்ற பெருவாழ்வை வற்புறுத்துகின்றார்கள். ஆகையால் இவர்கள் நோக்கத்தில் மோட்சத்துக்கும் மற்றைய மூன்றுக்கும் முரண்பாடு இல்லை. அறமும் இத் தகைய முழுவாழ்வையே வளர்க்கின்றது; பொருளும் குறைவிலா நிறைவான மக்களையே வளர்க்கின்றது; அகப்பாட்டின் நுட்பத்தை ஆழ்வார்கள் வழியில் - நாயன்மார்கள் வழியில் காணும்போது இன்ப வாழ்வே பேரின்ப வாழ்வாக விளங்குகின்ற உண்மை வெளியாகின்றது; எல்லாம் முடிவில் அறம் ஒன்றின் கூறுகளாகவே தமிழர்கள் கண்டார்கள். இந்த உண்மை அவர்கள் கூறும் அறநூல்களை விரிவாக ஆராய்ந்தால் நன்கு புலனாகும்.

இங்குக் கூறியது தமிழ்ப் பண்பாட்டின் சிறப்பியல்பு என்று கொள்ளலாம். ஆனால் தமிழர்கள் உலகத்திலிருந்து தம்மை வேறுபடுத்திக் கொள்ளும் நோக்கத்தில் திரியவில்லை; 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற நம்பிக்கையில், 'மக்கள் எங்கிருந்தாலும் அவர்கள் கூறிய உண்மையில் எல்லாம் தாம் வாழ்ந்த தமிழ் வாழ்வின் நுட்பத்தைக் கண்டு மகிழ்ந்தார்கள். இதனாலே இந்திய ஒருமைப்பாட்டிலும் 'யாதாலும் நாடாமால் ஊராமால்' என்னும் உலக ஒருமைப்பாட்டிலும் எளிதில் நம்பி வாழ்ந்தும், 'திரைக்கடல் ஓடி'த் தம் பண்பாட்டை உலகப் பண்பாடாக வளர்த்து வந்தார்கள். இந்த உலக நோக்கினால் அல்லவா சேக்கிழார், 'உலகெல்லாம்' என்று முதலிலும் இடையிலும் முடிவிலும் பாடி மகிழ்கின்றார்; சம்பந்தரும் 'ஞாலம் நின்புகழே மிக வேண்டும்' என்று பாடுகின்றார்; 'அப்பாலும் அடிசார்ந்தார் அடியார்க்கும் அடியேன்' என்று தம் காலத்திற்கும் தம் நாட்டிற்கும் அப்பாற் பட்டவர்கள் கால்களிலும் விழுகின்றார் சுந்தரர்; 'உலகெங்கும் மேவிய தேவாலயந்தோறும் மேவிய பெருமாளே' என்று பாடுகின்றார் அருணகிரிநாதர்; ஆன்ம நேய ஒருமைப்பாட்டினால் விளையும் சமரச சன்மார்க்கத்தினைப் பாடுகிறார் இராமலிங்கர்.

தமிழர் இலக்கியத்தையும், தமிழர் கலைகளையும் தமிழர் வரலாற்றையும் ஆராயும்போது இங்கே நாம் சுருக்கமாக விளக்கிய தமிழர் பண்பாடு விரிந்து பரந்து விளங்குவதைக் காணலாம்.

❖❖❖

## கிரகங்கள் தெய்வங்கள்

| | | |
|---|---|---|
| சூரியன் | - | அக்னி, ருத்ரன் |
| சந்திரன் | - | வருணன், அம்பாள் |
| செவ்வாய் | - | பூமாதேவி, முருகன் |
| புதன் | - | விஷ்ணு |
| வியாழன் | - | இந்திரன், பிரம்மன் |
| சுக்கிரன் | - | இந்திராணி |
| சனி | - | இயமன் |
| ராகு | - | காளி, துர்க்கை |
| கேது | - | சித்ர குப்தர், பிரம்மன் |



# மூன்று, ஆயிரம், கோடி

வெ. இராமமூர்த்தி

**அறத்தின் நாயகன் இராமனின் தம்பி, இராம பக்தன் பரதன். பரதனின் பண்பு நலன்கள், தியாகம், புகழ், இராமன் பாதுகையே அரசாண்ட அற்புதம் அளவிற்கரியன. பரதனைப் பாராட்டி, மூன்று, ஆயிரம், எண்ணில் கோடி இராமர்களும் உனக்கு இணையாக மாட்டார்கள் என்ற புகழுரையே இத்தலைப்பு. பரதனின் புகழே பாரத நாட்டின் புகழ்.**

நடையில் நின்றுயர் நாயகன் இராமனுக்கு தந்தை தசரதன் மணிமுடி சூட்ட அவையில் மொழிந்தபோது அயோத்தி நாடே மகிழ்ந்தது. இவ்விழாச் செய்தியை அறிந்த பரதனின் தாய் கைகேயியின் பணிப்பெண், "இன்னல் செய் இராவணன் இழைத்த தீமைபோல் துன்ன அருங் கொடுமனக் கூனி. மந்தரை கைகேயிடம் கூறினாள். உடனே என்மகன் இராமனுக்கு அரசு பட்டமா என்றகம் மகிழ்ந்து மணிமாலையைப் பரிசளித்தாள். அதைக் கோபமாக, மண்ணிலே வீசி எறிந்து, கைகேயின் தூய மனத்தைக் கொஞ்சம் கொஞ்மாக, வஞ்சக மொழியால், 'பரதனே அரசாளும்படி மாற்றி அமைத்தாள். தசரச மன்னனும், புலம்பி அழுது,

பிறகு வேறு வழியின்றி பரதன் நாடாளவும், இராமன் பதினான்கு ஆண்டு காட்டிற்குச் செல்லவும் வரங்கொடுத்தான். மணிமுடி சூட புனலாடி வரும் இராமனிடம் ஆழிசூழ் உலகம் எல்லாம் பரதனே ஆள நீ போய் தாழ் இருஞ் சடைகள் தாங்கித் தாங்க அருந்தவம் மேற்கொண்டு

'பூழி வெங் கானம் நண்ணிப் புண்ணியத் துறைகள் ஆடி
ஏழ் இரண்டு ஆண்டின் வா என்று இயம்பினன் அரசன்'

என்றான்.

அப்பொழுது மனம் மகிழ்ந்த இராமனின் தோற்றப் பொலிவு
"அப்பொழுது அலர்ந்த செந்தாமரையினை வென்றது அம்மா"

என்று பேசுவார் புகழ்க் கம்பர்.

மேகம் தவழும் மலையைப் போன்ற இராமன், வெண் சாமரை வீசாமல், வெண் கொற்றக் குடை இல்லாமல்

"விதி முன் செல்ல தருமம் பின் இரங்கி ஏக வருவதைப் பார்த்த, சுற்றத்தார், தேவரொடும், தொழநின்ற அன்புத் தாய் கோசலை, அதிர்ச்சியுற்று, முடிசூடி, படையோடு வராமல் தனியே வரும் காரணத்தை வினவினாள். கோசலை இராமனோ..

"உன் அன்பிற்குரிய சிறந்த மகனும்,
என் அன்புத் தம்பியும்,
குறையற்ற குணம் நிறைந்த பரதனை
மாமுடி சூட்டிக் கொள்கின்றான்"

என பதில் உரைத்தான்.

முடிசூடவில்லை என்றால் சினம் கொள்வது தாய்ப் பாசத்தின் இயல்பு. ஆனால் அவ்வாறு செய்யாமல் இராமன், பரதன், இலக்குவன், சத்ருக்கனன் என்ற நான்கு புதல்வர்களில் வேற்றுமை காட்டாது அன்பு செலுத்தும் கோசலை மூத்தவனே முடிசூட வேண்டும் என்ற முறைமைக்கு மாறாக இருப்பினும், பரதன் உன்னைக் காட்டிலும் மூன்று மடங்கு நிறைந்த குணங்களை உடையவன் என்று புகழாரம் சூட்டுகின்றாள். மும்மையின் நிறை குணத்தவன் நின்னிலும் நல்லனால் குறைவு இலன் எனக் கூறினாள். என்னே கோசலையின் அன்பு!

## ஆயிரம் இராமர்

செட்டரும் குணத்து இராமன், சேவகன் தம்பி இலக்குவன், சீர்மிகு சீதை உடனோடு தந்தை சொல்மிக்க மந்திரம் இல்லை என்று காட்டிற்கு ஏகினான். நாடே அழுதது. கங்கைக் கரையில் தாயினும் உயிர்க்கு நல்ல, கங்கைக் கரைத் தலைவன், வேடன் குகன் இராமனைக் காண, அன்பின் உயரமாகிய தேனையும், அன்பின் ஆழமான மீனையும் திருத்தி கையுறையாகக் கொண்டு உணவு அருந்தும்படி வேண்டுகின்றான். அண்ணலும் அமிழ்தம் என அரவணைத்து "நின்னொடும் ஐவர் ஆனோம்" என்று வேடர்குலக் குகனை தன் சகோதரனாக ஏற்கின்றார்.

தயரதச் சக்கரவர்த்தி இராமன் கானகம் சென்ற செய்தி அறிந்து வானகம் சென்றான். கேகய நாட்டிலிருந்து வந்த பரதன், தாயிடமிருந்து தந்தை இறந்ததுவும், பரதனுக்கு பட்டம் சூட்ட இருப்பதைக் கேள்வியுற்று, பொங்கி எழுந்து, இராமனுக்கு அஞ்சி







"பண்புடையோர்களில் முதல்வனாக இராமன் மரபினோர் புகழை எல்லாம் தன் புகழ் ஆக்கிக் கொண்டான். காரணம் தன்னலமற்ற தியாகம். இராமன் வருவதை இழந்தான். ஆனால் பரதனோ தன்னிடம் உள்ளதையே இழந்தான்."

தன் தாயைக் கொல்லாமல் விடுத்தான். முடிசூடவிருந்த மன்னர் அவையில், தாங்க ஒண்ணாத் துயரில் காட்டிலிருந்து அண்ணன் இராமனை அழைத்துவந்து, மணிமுடியை இராமனுக்கே, பழைய நெறிப்படி சூட்டப் போவதைக் காண்பீராக என்று, வசிட்டன், சுமந்திரன் சேனையோடு காட்டுக்கு அழைத்துவரப் புறப்பட்டான். காட்டிலும் விடாமல் போர்க் கோலம் பூண்டு வருவதாக! பகைவர்களை அழிப்பேன்! என்ற வீர உரை ஆற்றினான் ஈர நெஞ்சினன்.

அஞ்சன வண்ணன் என் ஆருயிர் நாயகன் ஆளாமே
வஞ்சனையால் அரசெய்திய மன்னரும் வந்தாரே,
செஞ்சரம் என்பன தீ உமிழ்கின்றன செல்லாவோ
உஞ்சு இவர் போய்விடின் நாய்க்குகன் என்றுஎனை
ஓதாரோ.

பரதனின் தவக் கோலம், நகை இழந்த முகம், கல் கனியக் கனிகின்ற துயர். இவைகளைப் பார்த்து எண்ணம் மாறுகின்றது. துன்பத்திற்கு ஒரு முடிவு இல்லை என்று திசை நோக்கித் தொழும் பரதனை, "எம்பெருமான் பின் பிறந்தார் இழைப்பரோ பிழைப்"பென்று பரதனை கண்ணீரால் வணங்கினான். வந்த காரணம் வினவ, பரதனோ, 'தாயின் சொற்படி நான் அரசாளாமல், என் அண்ணனே ஆள, இராமனை அயோத்திக்கு அழைத்துச் செல்ல இவ்விடம் வந்ததாக இயம்பினான். குகன் தான் பரதனைத் தவறாக பகைமை பாராட்டியதற்கு வருந்தி, உவகை பூண்டு பரதனது திருவடித் தாமரைகளில் வீழ்ந்து வணங்கினான். பரதனை நோக்கி,

தாய் உரைகொண்டு தாதை உதவிய தரணி தன்னை
தீவினை என்ன நீத்து சிந்தனை முகத்தில் தேக்கி
போயினை என்றபோழ்து புகழினோய் தன்மை கண்டால்
ஆயிரம் இராமர் நின்கேழ் ஆவரோ தெரியின் அம்மா.

இதுவரை நண்பனாக, சகோதரனாக, இறை வனாகப் போற்றிய இராமனைவிட ஆயிரம் மடங்கு உயர்ந்தவனாக ஆயிரம் இராமரில் சிறந்தவனாகப் பாராட்டினான். பண்புடையோர்களில் முதல்வனாக இராமன் மரபினோர் புகழை எல்லாம் தன் புகழ் ஆக்கிக் கொண்டான். காரணம் தன்னலமற்றத் தியாகம். இராமன் வருவதை இழந்தான். ஆனால் பரதனோ தன்னிடம் உள்ளதையே இழந்தான். என்னே இராம பக்தி!

ஆயிரத்தோடு நிற்கவில்லை. கோடி, பல கோடி என்று உயர்ந்துகொண்டே போகிறது. நந்திக் கிராமத்தில் தியாகச் செம்மல் பரதன் இராமபிரானுடைய மிதியடிகளை வழிபட்டு வாழ்ந்து வந்தான்.

இராமபிரான் காட்டிற்குச் சென்று பதினான்கு ஆண்டுகள் நிரம்பிவிட்டன. வந்து சேரவேண்டிய நாள் இதுவேயாகும் என்று சோதிடர் உரைப்ப, இனி ஒரு கணம்கூட வாழாமல் தீயில் விழுந்து உயிர்விடத் துணிந்தான். தீப்பாயும் செய்தி கோசலைக்குத் தெரிந்து, அயோத்தியிலிருந்து பதறி, வயிற்றில் அடித்துக்கொண்டு தீப்பாய்வதைத் தடுக்கின்றாள். பரதனிடம், நீ இறப்பாயானால் உலகம் இறக்கும். இது விதியின் செயல். ஒப்பற்ற அறமும் நெருப்பில் விழும். யுகம் புரண்டாலும் உனது சிறப்புப் பெயருமோ? பல கோடி இராமர்கள் ஒன்று கூடினாலும் உனக்கு ஒப்பாவார்களோ?

எண்ணில் கோடி இராமர்கள் என்னினும்
அண்ணல் நின்அருளுக்கு அருகு ஆவரோ
புண்ணியம் எனும் நின்உயிர் போயினால்
மண்ணும் வானும் உயிர்களும் வாழுமோ?

❖❖❖



# அரக்கனை விழுங்கிய விநாயகர்!

பொள்ளாச்சி சிவமணியன்

அபுனைவரிஷி கோத்திரத்தின் தலைவரான துவஷ்டாச்சாரியின் மகளைச் சூரியபகவான் திருமணம் செய்துவாழ்ந்தார். இந்நிகழ்வு நான்கு யுகங்கட்கு முன்னர் நடந்தது. பின்னர் சூரிய பகவானுக்கு மனு, எமன், யமுனை என்ற மூவர் பிறந்தனர். சூரியனின் வேறு மனைவி சாயாதேவிக்குப் பிறந்தவர் சனிபகவான். எமன் சனியைத் தண்டாயுதத்தால் அடித்ததில் ஒரு கால் மெல்ல நடக்க வேண்டியிருந்தது. சனி பகவானுக்கு எமன் மேல் கோபமாக இருந்தது. சமயம் பார்த்துப் பிடிக்க வேண்டும் என்றிருந்தார். ஒரு திருவிழா நாளன்று எமதர்மராஜன் தனது சபையில் மிடுக்காக அமர்ந்திருந்தான். சபையில் எமனைச் சுற்றி வீணை, போன்ற இசைக் கருவிகள் இசைந்தவண்ணமிருந்தன. எமனுக்கு முன்னால் ஊர்வசி, ரம்பை, திலோத்தமை இன்னும் தேவகன்னிப் பெண்கள் ஆடல், பாடல்களில் ஈடுபட்டிருந்தனர். ஆடலின்போது திலோத்தமையின் மேலாடை பிரிந்து கீழே விழுந்தது. எமன் அந்தக் காட்சியைக் கண்டான். ஆடை நழுவிய திலோத்தமை கன்னியர்களின் தங்கும் அறைக்கு மேலாடையை அணைத்தவாறு ஓடினாள்.

அதைக் கண்ட எமன் காமம் உற்றான். திலோத்தமையின் பின்புறம் ஓடினான் காமப்பெருக்கில் அவசரமாக ஓடியதில் காமம் தலைக்கேறி உஷ்ணமானது. கண்கள் சிவப்பாக தோற்றமானது. மூக்கில் உஷ்ணம் பெற்று எமனின் இந்திரியம் வெளியேறியது. எமன் திலோத்தமையை நினைத்து சோர்வாக அங்கு தரையில் படுத்துவிட்டான். "திலோத்தமையின்பால் ஒரு மகனை பிறப்பிக்க நினைத்தேனே எல்லாம் வீணானது. என் உடல் உஷ்ணத்தால் தகிக்கிறது. அந்த என் வீரியம் உஷ்ணத்தால் என்ன ஆகிறதோ' என வருந்திப் படுத்தவன் நினைவிழந்தான். கீழே தரையில் சிதறிய எமனின் வீரிய அணுக்கள் உஷ்ணத்தால் ஒரு பெரிய உருவமானது. அரக்கருபமானது. அனல் தகிக்கும் சூரன்! அனலாசூரன் நான்! எனக் கத்தினான் அரக்கன்.

இந்நிகழ்வைக் கண்ட சனி 'நாம் பிடித்தது எமனுக்கு நடந்துவிட்டது' என

> "அனலாசூரனே பூலோகத்தில் பலவற்றை அழித்தாய், தேவலோகத்திற்கும் வந்துள்ளாய், என் வயிற்றுக்குள்ளே பார் அருகே வந்து எல்லா உலகங்களும் உள்ளது!" என்றார் விநாயகர்.



நகைத்தான் சனி. அனலாசூரன் பூமியில் மக்களையழித்தான். யாவற்றையும் அழித்தான். தந்தை எமனை விட்டுவிட்டான். பின்னர் அனலாசூரன் தேவலோகம் நோக்கி வான மண்டலத்தில் மேலே உயர்ந்துகொண்டே போனான். இதையறிந்த தேவர்கள் பயந்து காணாமல் ஒளிந்தனர். தேவர்கள் உடனே முன்பின் யாவும் உணர்ந்தனர். பின்னர், பின்பு பயந்தவர்களைப் பார்த்து, 'நீங்கள் விநாயகப் பெருமானைத் தியானித்து வணங்கவும். அப்போது அவர் நன்மை செய்வார். இந்தச் சூரனை அழிக்கும் வழி அவரிடம்தான் உள்ளது!" என்றனர். உடனே தேவர்களும் வணங்க, விநாயகர் காட்சி தந்தார்.

அனலாசூரன் தேவர்களிடம் ஓடிவந்தான். பிரம்மச்சரிய உருவை மாற்றி விநாயக ரூபமெடுத்தார். சற்று பெரிய உருவாக.

"நீங்கள் யாவரும் அஞ்சவேண்டாம்" எனத் தேவர்களுக்கு ஆறுதல் சொன்னார் விநாயகப் பெருமான்!

"அனலாசூரனே பூலோகத்தில் பலவற்றை அழித்தாய். தேவலோகத்திற்கும் வந்துள்ளாய். என் வயிற்றுக்குள்ளே பார் அருகே வந்து எல்லா உலகங்களும் உள்ளது!" என்றார் விநாயகர். அருகே வந்த அனலாசூரனை உருவம் சிறிதாக்கி விழுங்கிவிட்டார். விநாயகர் வயிறு சூடாகி எரிந்தது. தேவர்கள், "அரக்கன் அழிந்தான்" என ஆர்ப்பரித்து மகிழ்ந்தனர். உடனே விநாயகர் வயிற்றின்மேல் குளிர்நீரை ஊற்றினார். மற்றவர்களின் வயிறும் எரிந்தது.

தேவேந்திரன் ஆணைப்படி வருணன் குளிர்நீர் தெளித்தான். சந்திரனும் குளிர் கிரணங்களை மழையாகப் பொழிந்தான். பிரம்மாவின் கட்டளைப்படி சித்தி, புத்தி இருவரும் குளிர்வித்தனர். திருமாலும், கடல் நீரால் குளிர்வித்தார். யாவரின் முயற்சிகளும் பலனாகவில்லை. இறுதியில் ஆயிரக்கணக்கான முனிவர்கள் விநாயகரின் பாதம் முதல் தலை வரை அருகம்புற்களால் உடலை மறைத்தனர். உடலெங்கும் அருகம்புல் பட்டதால் விநாயகரின் வயிற்று வெப்பம் இல்லாது போனது. விநாயகரின் வயிறு குளிர்ந்தது. அனைவருக்கும் வயிறு குளிர்ந்தது. "நீங்கள் யாவரும் அருகினால் என்னைப் பூஜிக்க நல்லருளைப் பெற்று மகிழ்வீர்" என விநாயகர் கூறி மறைந்தார்.

❖❖❖



படங்கள் - கட்டுரை:
பவானிகோபாலன்

# வாழ்வை வளமாக்கும் பாரியூர் கொண்டத்து காளியம்மன்

பக்தர்கள் அனைவராலும் 'பாரியூர் அம்மன்' என்று பெருமிதத்தோடு அழைக்கப்படும் கொண்டத்துக் காளியானது, சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தொன்மை வாய்ந்த தலமிது!

இந்தக் காளியம்மன் திருக்கோயிலின் இராஜ கோபுரத்தின் வாயிலாக உள்ளே சென்றால், நான்கு பக்கங்களிலும் உயர்ந்த மதில்கள் சூழ்ந்த பரந்த வெளி காணப்படுகின்றது. இதன் மையப் பகுதியில் இந்த பாரியூர் அம்மனின் கற்கோயில் மண்டபம் உள்ளது. இந்த மண்டபத்தில் வழவழப்பான கரும் பளிங்குக் கற்களிலான அழகே உருவான கருவறையில் அம்பிகை அருள்வடிவாக கொலுவிருந்து தன் பக்தகோடிகளுக்கு நல்லருளை வழங்கிக் கொண்டிருக்கின்றாள்.

இந்த அன்னையின் அருட்பார்வை படும்படியாக மண்டபத்தின் முன்பகுதியில் 50 அடி நீளமுள்ள திருக்கொண்டமும், கொண்டத்தின் துவக்கத்தில் நெடிதுயர்ந்த விளக்குக் கம்பமும் காணப்படுகின்றன.

அதனை அடுத்து நேரே ஒரு மண்டபமும், வடக்கு வாயிலும் உள்ளன. மேற்கே கல்யாண விநாயகர் எழுந்தருளிக் கன்னியர்க்கும், காளையர்க்கும் திருமணம் கைகூட அருள்பாலிக்கின்றார்!

கோயிலின் உள்ளே நுழைந்தால் அர்த்த மண்டபம். இதன் முன்பகுதியில் எதிர் எதிராக நான்கு கல்தூண்கள் மிகப் பொலிவோடு காட்சி தருகின்றன. அத்தூண்களில் மேற்கு பார்த்த மகாலட்சுமி, சரஸ்வதி சிலைகளும், கிழக்குப் பார்த்த ராஜ ராஜேஸ்வரி, பத்ரகாளி உருவச் சிலைகளும்



நமது கண்ணைக் கவரும் விதமாக இருக்கின்றன. இச்சிலைகள் கரும்பளிங்கால் ஆனவை.

கொண்டத்துக் காளியம்மன் கருவறையில் ஆயிரம் கோடி சூர்யப் பிரகாச ஒளியாக எழுந்தருளியிருக்கிறாள். அன்னையை வணங்கி வலம் வந்தும், இடப்பக்கம் ஐம்பொன்னால் ஆன உற்சவமூர்த்தியான சின்னம்மனைத் தரிசிக்கிறோம்.

பல ஆண்டுகளுக்கு முன்பு சித்தர்போல் ஒருவர் பாரியூர் பகுதியில் வாழ்ந்து வந்தார். அவர் பாரியூர் அம்மனின் அருள் பெற்றிருந்தார்! அதோடு மந்திர சக்தியும், அன்னைமீது அளவு கடந்த பக்தியும் படைத்தவராக விளங்கினார் என்பதைப் பாரியூர் கொண்டத்துக் காளியம்மன் ஆற்றுப்படை என்ற பழங்கால நூல் ஒன்று விவரிக்கின்றது. இவர் தமது மந்திர சக்தியின் திறனால் அன்னையை வேண்டி நிற்க, அன்னை இவருக்குக் காட்சி கொடுத்ததாகவும் சொல்லப்படுகிறது!

இந்த சித்தர் அக்காலத்தில் பக்தர்களின் மனநோய்களையும், சஞ்சலத்தையும் போக்கும் பணியை அன்னை பாரியூர் அம்மனின் சன்னதியில் வெகு காலத்திற்கு மேற்கொண்டிருந்திருக்கிறார். இதனால் இச்சித்தர் இங்கு சமாதிநிலையில் இருப்பதாக கருதப்படுகிறது!

கொங்கு நாட்டில் வாழ்ந்திருந்த மிகச் சிறந்த கொடை வள்ளல்களில் கோபிசெட்டிப் பிள்ளான் என்பவர் முக்கியமானவர். தன்னை நாடி வந்தவர் யாருக்கும் எப்போதும் இல்லை என்று கூறாது வாரி வழங்கியே ஏழையானவர். ஒரு சமயம் இந்த வள்ளலிடம் ஒரு புலவர் வந்தார். தமது தமிழ்ப் புலமையைப் பாடல்களால் வெளிப்படுத்தி, இந்த வள்ளலைப் புகழ்ந்து பாடி, ஏதாவது பொருள் தந்து தனது வறுமையைப் போக்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார். கோபிசெட்டிப் பிள்ளான் தனது அவல நிலையை எண்ணி மனம் வருந்தி ஒன்றும் கொடுக்க இயலாத நான் இருந்தென்ன பயன் என்று வேதனையுற்றார். உடனே பாரியூர் பகுதியிலிருந்த புலிப்புதர் ஒன்றுக்குச் சென்றார். பாரியூர் அன்னையை மனதில் இருத்தி வழிபட்டவாறு புலியை எதிர்நோக்கினார். ஆனால் புலி வரவில்லை! மிகவும் மனம் வருந்திய அவர் சோர்ந்து நின்றபோது அந்தப் புதரில் திருடர்கள் விட்டுச் சென்ற பொற்குவியல் ஒன்றைக் கண்டார்.

தனது வள்ளல் தன்மைக்குப் பங்கம் ஏற்பட்டு விடக் கூடாது என்பதற்காக பாரியூர் அம்மன் நிகழ்த்தும் திருவிளையாடலே இது என்று கருதிய அவர், அந்தப் பொக்கிஷத்தை எடுத்து வந்து புலவர்க்கும் மற்றும் தன்னை நாடி வந்து உதவி கேட்ட அனைவர்க்கும் தந்து இன்புற்றார். இத்தகவல் பாரியூர் அம்மனின் தல வரலாற்றில் காணப்படுகிறது. அந்தப் பகுதிக்கு கோபிசெட்டிபாளையம் என்ற பெயர் அந்த வள்ளலின் பெயரால் இன்றும் வழங்கப்பட்டு வருகிறது.

ஒரு பெண் சிறு வயது முதலே இந்தப் பாரியூர் அன்னையை வணங்கி வழிபட்டு வந்தாள். அவளுக்கு வெகுநாட்களாகத் திருமணம் நடக்கவில்லை. வேண்டிக் கொண்டு பூக்குழி இறங்கினாள். திருமணம் நடந்தது. திருமணத்திற்குப் பிறகு பல ஆண்டுகள் ஓடியும் குழந்தை பிறக்கவில்லை.

"அம்மா உன் பக்தையை ஏன் இப்படிச் சோதிக்கின்றாய்?.." என்று அந்தப் பெண் இரவும் பகலும் கண்ணீர் விட்டுக் கதறி அழுதாள். ஊரார் ஏச்சுக்கும் பேச்சுக்கும் ஆளானாள். கணவனோ சிறிதும் இரக்கமில்லாமல் இன்னொரு கல்யாணம் செய்து கொள்ளத் தயாரானான். இதனால் அந்தப் பெண் மனம் உடைந்தாள். பாரியூர் வந்தாள். காளிகோயில் முன் அவளே தீ மூட்டினாள். "இனி நான் வாழ்ந்து பயனில்லை.." என்று வேதனையோடு கதறியவள் நெருப்பில் குதித்தாள்.

குண்டத்தின் நடுவே காளி தோன்றி அவளைத் தடுத்து ஆட்கொண்டாள். "மகளே! உனக்கு நாக





தோஷம் இருக்கிறது. ஒன்பது வெள்ளிக்கிழமைகள் என் கோயிலுக்கு வந்து, பாலாபிஷேகம் செய். குழந்தை பிறக்கும்..." என்று அருள்பாலித்தாள். அதன்படி அந்தப் பெண்ணும் ஒன்பது வெள்ளிக் கிழமை கோயிலுக்கு வந்து காளியம்மைக்குப் பாலாபிஷேகம் செய்து வழிபட்டாள். அதன் பலனாக ஒரு அழகான ஆண் குழந்தையும் பெற்றெடுத்தாள்.

பாரியூரில் உள்ள கல்வெட்டுக்களில் 'ஸ்வஸ்திஸ்ரீ' என்ற சொல்லைக் காணலாம். இதற்கு மங்களம் உண்டாகட்டும் என்று பொருள். இந்தக் கோயிலுக்கு வந்து யார் வணங்கினாலும் மங்களம் யாவும் கிட்டும் என்பது நன்னம்பிக்கையாக உள்ளது.

ஈரோட்டிலிருந்து கோபிசெட்டிபாளையம் வந்து இறங்கி, அங்கிருந்து அந்தியூர் செல்லும் பேருந்து வழித் தடத்தில் மூன்று கி.மீ. பயணித்தால் பாரியூர் திருக்கோயிலை வந்தடையலாம். அடிக்கடி பேருந்து வசதி உள்ளது.

❖❖❖

## அட்ட வீரட்டத் தலங்கள்

திருக்கண்டியூர் - பிரம்மன் சிரம் கொய்தது
திருக்கோவலூர் - அந்தகாசுரனை அழித்தது
திருவதிகை - திரிபுரத்தை எரித்தது
திருப்பறியலூர் - தக்கன் சிரம் கொய்தது
திருவிற்குடி - சலந்தரா சுரனை அழித்தது
வழுவூர் - யானையை உரித்தது
திருக்குறுக்கை - மன்மதனை எரித்தது
திருக்கடவூர் - எமனை உதைத்தது

## முக்தி தரும் தலங்கள்

திருவாரூர் - பிறக்க முக்தி
சிதம்பரம் - தரிசிக்க முக்தி
திருவண்ணாமலை - நினைக்க முக்தி
காசி - இறக்க முக்தி
ஆலவாய் (மதுரை) - சொல்ல முக்தி
அவிநாசி - கேட்க முக்தி

"மனமது செம்மையானால் மந்திரம் செபிக்க வேண்டாம்" என்பது அகத்தியர் வாக்கு. மனிதர்கள் படும் இன்ப துன்பங்களுக்கெல்லாம் அடிப்படைக் காரணமாக அமைவது அவரவர் மனமே ஆகும். மனம் அமைதி பெறுமானால் வாழ்வில் மகிழ்ச்சி தானே வந்து அமையும். கற்றுணர்ந்த சான்றோர்களையும் மனம் அலைக்கழித்திருக்கிறது.

இந்த மனம் பலவற்றைத் தானே கற்பித்துக் கொள்ளுகிறது. இன்பமடைவதாகக் கற்பனையில் நினைத்து நினைத்து இன்படைகிறது. துன்பமடைவதாகக் கற்பனையில் நினைத்து அதாவது இப்படி நடந்திருக்குமோ அல்லது அப்படி நடந்திருக்குமோ எனப் பலவாறு நினைத்து நினைத்துத் துன்பம் அடைகிறது. இவ்வாறு கோடிக்கணக்காக, எண்ணங்களை எண்ணியெண்ணி மனம் சலிப்படைகிறது. ஆனால் ஒரு கணப் பொழுதேனும் நான் யார்? என் உண்மை நிலை என்ன என்பது பற்றி எண்ணிப் பார்க்க மனம் முயற்சிப்பதில்லை. இந்நிலையினை,

ஒருபொழுதும் வாழ்வது அறியார் கருதுப
கோடியும் அல்ல பல. (337)

எனக் குறிப்பிடுகிறார் திருவள்ளுவர். இவ்வாறு பயனற்ற எண்ணங்களைக் கற்பனையில் எண்ணி, எண்ணி மனம் புண்பட்டதை,

எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி எண்ணி ஏழைநெஞ்சம்
புண்ணாகச் செய்ததினி போதும் பராபரமே

என்கிறார் தாயுமானவர். தத்துவங்கள் பலவற்றைப் பயின்று அதனால் சினம் அடக்கக் கற்றிருந்தாலும் பல்லாண்டுகள் செய்த தவத்தின் பயனாய்ச் சித்திகள் பலவற்றைப் பெற்றிருந்தாலும் மனத்தை ஒரு நிலைப்படுத்தும் ஆற்றலைப் பெறவில்லையானால் மேற்குறிப்பிட்டவைகளைப் பெற்றிருந்தாலும் அதனால் பயனில்லை என்கிறார் தாயுமானவர்.

நெஞ்சகமே கோயில்நினைவே சுகந்தம் அன்பே
மஞ்சனநீர் பூசைகொள்ள வாராய் பராபரமே

எனத் தாயுமானவர்போல் நாமும் இறைவனை நம் மனத்தகத்தே எழுந்தருளச் செய்யலாம். அப்பொழுது நம் உள்ளமே பெருங்கோயிலாக மாறிவிடும்.

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளல் பிரானார்க்கு வாய்கோபுர வாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப்புலனைந்தும் காளா மணிவிளக்கே

என்கிறார் திருமூலர்.

இவ்வாறு பக்குவப்பட்டு - பண்பட்ட மன நிலையை 'யோகம்' எனக் கூறுவர். மனிதன்



# மனம்

- பேரா. அரங்க இராமலிங்கம்

என்பவன் அவன் மனமேதான். மனத்துக்கண் மாசிலன் ஆதலாகிய இம்மாபெரும் அறத்தைச் செய்வதற்குப் பொன் வேண்டியதில்லை. பொருள் வேண்டியதில்லை. உடல் உழைப்போ, இன்ன பிற முயற்சிகளோ வேண்டியதில்லை. எளிமையாகச் செய்யக்கூடிய மனத் தூய்மையாகிய அறத்தை யாரும் செய்ய முயற்சிப்பதில்லை. உலகத்தைத் திருத்தப் பலர் முன்வருகின்றனர். ஆனால் தம் உள்ளத்தைத் திருத்திப் பக்குவப்படுத்திக் கொள்ள யாரும் நினைப்பதில்லை. நினைத்தாலே போதும். நினைப்பே மனத்தை விழிப்பு நிலைக்குக் கொண்டு வந்துவிடும். பின் மனமே அறிவாகிவிடும். மனம், உள்ளம், நெஞ்சம், நினைவு, எண்ணம் என்று சொல்வதெல்லாம் ஒரு பொருளைத்தான் குறிக்கின்றன. செயல்படும் நிலைநோக்கி ஒவ்வொரு பெயரைப் பெறுகின்றன. ஒரு மனிதனே, தாத்தா, தந்தை, தனையன், மகன், கணவன் எனப் பல நிலைகளிலும் வாழ்வதுபோல, இருக்கும் ஒன்றே பல நிலைகளில் அது செயல்படும் நிலைநோக்கிப் பெயர்பெறுகிறது. மாறிப் பிறக்கும் வழிதெரிந்தவர்க்கு மனமே அறிவாகி நிற்கும். அறிவே தெய்வமென்றார் தாயுமானவர். அந்த அறிவும் அகத்ததுதான் என்பதை,

ஐயப் படாஅது அகத்தது உணர்வானைத்
தெய்வத்தொடு ஒப்பக் கொளல் (702)

எனச் சுட்டிக் காட்டியுள்ளார் திருவள்ளுவர்.

மனம் தன் நிலை உணர்ந்து தன்னுள் அடங்கு மானால் அந்நிலையிலே அம்மனம் அறிவாகி வாலறி வாகச் செயல்படும். நாணயத்தின் இரண்டு பக்கம் போல் மனமும் அறிவும் செயல்படுகின்றன. கீழ் நிலையில் செயல்படும்போது மனமாகவும், மேல் நிலையில் செயல்படும்போது அறிவாகவும் ஒரு பொருளே அணுவாய் அமைந்து அண்டத்தையும் பிண்டத்தையும் ஆள்கின்றது. என் செய்ய இயலும்? அறிந்தவர் அறிவித்தால் அறிந்து கொள்ளலாம். உணர்ந்தவர் உணர்த்தினால் உணர்ந்து கொள்ளலாம். வான் அமிழ்தத்தைப் பருகியவர், எண்ணத்தில் மலர்ந்த வாய்மையைச் செவிமடுத்தவர் பெருநிலை பெற்றவர். இந்நிலை கைவரப் பெற்றவரையே சித்தர் என்றும், ஞானி என்றும் சாகாநிலை கைவசப்படுத்தியவர் என்றும், மூச்சோடா தவத்திற்குரியவர் என்றும், மாறிப் பிறக்கும்/பிறப்பிக்கும் நிலையைக் கைவசப்படுத்தியவர் என்றும் பலவாறாகக் கூறுவர். எண்ணங்களின் தொகுதிதான் மனம்.

அலையும் மனத்தை அறிந்து அடக்கும் அவனே சரியை சூத்திரனாம்
அலையும் மனத்தை அறிந்து அடக்கும் அவனே கிரியை முற்றினோனாம்
அலையும் மனத்தை அறிந்து அடக்கும் அவனே யோகத்தானாம்
அலையும் மனத்தை அறிந்து அடக்கும் அவனே ஞானி அறிஞன்

மனமது செம்மையானால் மந்திரம் செபிக்க வேண்டாம்
மனமது செம்மையானால் வாயுவை உயர்த்த வேண்டாம்
மனமது செம்மையானால் வாசியை நிறுத்த வேண்டாம்
மனமது செம்மையானால் மந்திரம் செம்மை யாமே.

- அகத்தியர் ஞானம் 2:1

எனச் சான்றோரும் கூறியருளியுள்ளனர் இப் பேருண்மைகளைச் சுருக்கமாகத் தெய்வப் புலவர் மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்தறன் என்றார். அதாவது அனைத்து அறன் எனப்பட்டது மனம் மாசில்லாமல் இருத்தலே ஆகும்.

❖❖❖

# பாண்டுரங்கா! பண்டரிநாதா!!



வெள்ளித்திருப்பூர் சுபாஷ

பாண்டுரங்கா! பாண்டரிநாதா! என்ற கோஷம் விண்ணை பிளக்கிறது. ஆம். பண்டரிபுரம் என்ற திருத்தலத்தில்தான் பாண்டுரங்கனின் பக்தர்கள் உணர்வு பூர்வமாக அப்பெருமானின் நாமாவளி சொல்லி வழிபடுகிறார்கள்.

பண்டரிநாதர் திருக்கோயிலின் மூலவர் - பாண்டுரங்கன். பாண்டுரங்கர் கிருஷ்ண பகவானின் மறு அவதாரம். தாயார் ருக்மணி. 26 கடவுள் சன்னதிகளில் பல்வேறு தெய்வங்களின் மூர்த்தங்கள் அருள்பாலித்து வருகின்றனர். ராசிகா, பாமா, சூரிய நாராயணன், பாலாஜி, மகாலட்சுமி, அன்னபூரணி போன்றவை அதில் சிலவாகும். இங்குள்ள தெய்வ திருமேனியை திருவடியை தொட்டு வணங்குவதும், போற்றிப் பாடுவதும் நன்மை பயக்கும்.

பண்டரிநாதர் திருக்கோயில் "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்ற தாரக மந்திரத்தின் தத்துவத்தை - பெருமையை விளக்கும் தலபுராணத்தை கொண்டது.

ஒரு தம்பதியருக்கு நீண்ட காலமாக மகப்பேறு இல்லாமை காரணமாக, பாண்டுரங்கனின் அருளால் ஆண் குழந்தை பிறந்தது. புண்டரீகன் எனப் பெயரிட்டு அளவுக்கு மீறி செல்லமாக வளர்த்தமை காரணமாக புண்டரீகன் தடம் மாறினான். மனம் வருந்திய பெற்றோர் - திருமணம் செய்துவித்தால் திருப்பம் ஏற்படலாம் என எண்ணி மணம் செய்வித்தனர். ஆனால் மாறாக மனைவி வந்ததும் பெற்றோரை வீட்டை விட்டு விரட்டி விடுகிறான்.

மண வாழ்க்கையில் மகிழ்வோடு இருந்த புண்டரீகன், நாடு முழுவதும் சுற்றுலா செல்கிறான். காசி யாத்திரை குழுவிலே தாய் தந்தையரைக் கண்டும் காணாதவனாக உதாசீனப்படுத்தி விடுகிறான். இதன் பயனாக பயணத்தில் வழிதவறி காட்டுக்குள் மனைவியோடு வந்தவன், எதிர்பாராதவிதமாக ஒரு ஆசிரமத்தில் தங்கும் வாய்ப்பு உண்டாகிறது.

புண்டரீகன் வாழ்க்கையில் மறுமலர்ச்சியை உண்டாக்கும் விநோதமான காட்சி, அந்த ஆசிரமத்தில் நள்ளிரவில் நடக்கிறது. நள்ளிரவில் கோரமான வடிவத்தை பெற்ற மூன்று பெண்கள் உள்ளே செல்கின்றனர். பொழுது விடிந்ததும் தேவதைகளாக வெளியே வருகின்றார்கள். மண்டியிட்டு விவரம் கேட்கிறான். அவர்களின் கூற்று இதோ... "நாங்கள் மூவரும் கங்கை, யமுனை, சரஸ்வதி என புனித நதிகள் ஆவோம். உலகத்தவர் நதியில் குளிப்பதால் அவர்களுக்கு புண்ணியப்பேறு அளிக்கும் வண்ணம், அவர்களின் பாவங்களை ஏற்று விகார உருவை

“

**நாங்கள் மூவரும் கங்கை, யமுனை, சரஸ்வதி என புனித நதிகள் ஆவோம். உலகத்தவர் நதியில் குளிப்பதால் அவர்களுக்கு புண்ணியப்பேறு அளிக்கும் வண்ணம், அவர்களின் பாவங்களை ஏற்று விகார உருவை அடைகின்றோம். நாள்தோறும் இந்த குக்குட முனிவரின் ஆசிரமத்திற்கு வந்து பணிவிடை புரிவதன் மூலம், விகாரமான உருவம் மாறி புனிதமாக மாறும் சக்தி இந்த ஆசிரமத்தில் உள்ளது. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என எண்ணி உயிராக கருதி போற்றி பணிவிடை செய்து அவர்களின் பரிபூரணமான ஆசியைப் பெற்று விளங்குவதால், மகத்தான ஆற்றலை உடையவராக திகழ்கின்றார் என்கின்றனர்.**

”

அடைகின்றோம். நாள்தோறும் இந்த குக்குட முனிவரின் ஆசிரமத்திற்கு வந்து பணிவிடை புரிவதன் மூலம், விகாரமான உருவம் மாறி புனிதமாக மாறும் சக்தி இந்த ஆசிரமத்தில் உள்ளது” என்றிட புண்டரீகன் இம்முனிவருக்கு இத்தனை சக்திகள் எங்ஙனம் உண்டாயிற்று என வினவ, அவர்கள் அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என எண்ணி உயிராக கருதி போற்றி பணிவிடை செய்து அவர்களின் பரிபூரணமான ஆசியைப் பெற்று விளங்குவதால், மகத்தான ஆற்றலை உடையவராக திகழ்கின்றார் என்கின்றனர். இதனைக் கேட்ட புண்டரீகன், மனம் வருந்தி, திருந்தி தன் பெற்றோர்களை நாடிச் சென்று அவர்களின் திருவடிகளில் விழுந்து கதறி பிழை பொறுக்குமாறு வேண்டுகிறான். தன் மகன் திருந்தியதை அறிந்த பெற்றோரும் அவனை வாழ்த்தி ஆசி வழங்குவதாக வரலாறு தெரிவிக்கின்றது.

இந்த நிகழ்வுக்குப் பின்னர் புண்டரீகன் இல்லத்திலேயே நடைபெற்ற உண்மை நிகழ்ச்சி ஒருமுறை பாண்டுரங்கனே, மாறுபட்ட துறவி வேடத்தில் வந்து அழைக்கிறார். வெளியில் வந்து பார்த்த அவன், எனது தாய் தந்தையருக்கான பணிவிடைகளில் உள்ளதால், அதனை நிறைவேற்றி விட்டு வருகிறேன் எனவும், அதுவரை இந்த செங்கல் மேல் நில்லுங்கள் எனக் கூறி உள்ளே சென்று பெற்றோர்களுக்கு செய்ய வேண்டிய பணிவிடைகளில் ஈடுபடுகிறார். எதிர்பாராத விதமாக புண்டரீகன் பெற்றோர் வெளியே வர துறவியாக வந்தவர் பண்டரிநாதனே என ஞானத்தால் உணர்ந்து பதறுகின்றனர். விழுந்து வணங்கி குற்றத்தை பொறுக்குமாறு வேண்டுகின்றனர். அவர்களை அமைதிப்படுத்தி - சாந்தப்படுத்தி.

“அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்”

“தாயிற் சிறந்ததோர் கோயிலுமில்லை
தந்தை சொல் மிக்க மந்திரமில்லை”

என்பதை உலகுக்கு உணர்த்தி நல்வழிப்படுத்தவும் இந்த திருவிளையாடலை நடத்தினோம் எனவும் உங்கள் மகனை வாழ்வித்து திருவருள் புரிந்தோம் எனக் கூறி அருள்பாலிக்கிறார்.

உலகியல் நடைமுறை வாழ்க்கையில் அடிப்படையில் அற வாழ்க்கையின் உன்னத கருத்தை வெளிப்படுத்தும் அருள்நிலையமாக விளங்கும் பண்டரிநாதனின் திருவடி சிந்தித்துப் போற்றி மகிழ்வோமாக!

❖❖❖

## தமிழ் மாதங்கள்

| வடமொழி | | தமிழ் |
|---|---|---|
| சித்திரை | - | மேழம் |
| வைகாசி | - | விடை |
| ஆனி | - | இரட்டை, ஆடவை |
| ஆடி | - | கடகம் |
| ஆவணி | - | மடங்கல் |
| புரட்டாசி | - | கன்னி |
| ஐப்பாசி | - | துலை, துலாம் |
| கார்த்திகை | - | நளி |
| மார்கழி | - | சிலை |
| தை | - | சுறவம் |
| மாசி | - | கும்பம் |
| பங்குனி | - | மீனம் |

### கிழமைகள்

| | | |
|---|---|---|
| பானுவாரம் | - | ஞாயிற்றுக்கிழமை |
| சோமவாரம் | - | திங்கள்கிழமை |
| மங்களவாரம் | - | செவ்வாய்க்கிழமை |
| புதவாரம் | - | அறிவன்கிழமை |
| குருவாரம் | - | வியாழக்கிழமை |
| சுக்கிரவாரம் | - | வெள்ளிக்கிழமை |
| சனிவாரம் | - | காரிக்கிழமை |



# திருநாராயணபுரம்

*வேணுகோபால நாயகர்*

இராமாநுசர் வைணவ மதத்திற்குச் செய்த சேவை மிகவும் மகத்தானது. ஆழ்வார்களுடைய பாடல்களை எல்லாக் கோயில்களிலும் விசேஷங்களிலும் ஓதும்படி நியமித்தார்.

ஆழ்வார்கள் பாடியுள்ள தலங்களே திவ்ய தேசங்கள் என்று சிறப்பித்துக் கூறுவார்கள்.

இப்படியாக திவ்விய தேசங்கள் என்று போற்றப்படுபவை 108 தலங்களாகும். இவற்றுள்ளும் மிகச் சிறப்பாகப் போற்றப்படும் தலங்கள் நான்கு.

அவையே 1. திருவரங்கம்; 2. திருமலை; 3. பெருமாள்கோயில் எனப்படும் காஞ்சி அல்லது கச்சியம்பதி; 4. மேல்கோட்டை என்று பொது மக்களால் அழைக்கப்படும் திருநாராயணபுரம். திருவரங்கத்தை - போக மண்டபம் என்றும், திருமலையை - புட்ப மண்டபம் என்றும், காஞ்சியை - யாகமண்டபம் என்றும் திருநாராயணபுரத்தை - ஞான மண்டபம் என்றும் வைணவர்கள் போற்றுவார்கள்.

இந்த நான்கு திவ்ய தேசங்களும் மிகச் சிறப்படைந்தமைக்குக் காரணம் நம் இராமாநுசரே. இராமாநுசர் இந்த நான்கு திவ்ய தேசங்களில் பல காலம் வாசம்புரிந்து இத்தலங்களை மிகவும் சிறப்பாகப் பரிபாலித்து வந்தார். அவர் ஏற்படுத்திய நடைமுறைகளின் படியே இன்றும் இத்தலங்களை நிருவாகம் செய்து வருகிறார்கள்.

திருநாராயணபுரம், கருநாடக மாநிலத்தில் - பெங்களூரிலிருந்து மைசூர் செல்லும் நெடுஞ்சாலையில் மைசூருக்கு அருகில் உள்ளது. இராமாநுசரால் திருநாராயணபுரம் சிறப்படைந்ததைப் பற்றிக் காணலாம். ஸ்ரீரங்கத்தை ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் ஆண்ட சோழ மன்னன் வைணவ விரோதி. நம் இராமாநுசரைக் கொடுமைப்படுத்த முயன்றார். எனவே சீடர்களின் வேண்டுகோளின்படி இராமாநுசர் சோழ நாட்டைவிட்டு கருநாடக தேசத்தில் உள்ள திருநாராயணபுரம் சேர்ந்தார்.

கருநாடக மன்னன் ஜைன மதத்தில் சேர்ந்திருந்தான். ஜைனர்கள் ஆதிக்கம் மேலோங்கி இருந்தது. அவர்களை வாதில் வென்று அவர்களையும், கருநாடக மன்னனையும் வைணவராக்கினார் இராமாநுசர்.

இராமாநுசர் ஜைனர்களை வென்றதற்குச் சான்றாக இன்றும் திருநாராயணபுரத்தை அடுத்த தொண்டனூரில் ஆதிசேடனின் விரித்த படங்களுடன் இராமாநுசர் எழுந்தருளியிருப்பதைக் காணலாம். மன்னனும் வைணவனாகி விஷ்ணுவர்த்தனன் என்று பெயர்சூட்டிக் கொண்டான்.

விஷ்ணுவர்த்தன் அரசனின் துணையுடனும், வைணவத்தைத் தழுவிய ஜைனர்கள் பல்லாயிரக் கணக்கானவர் உதவியுடனும் தொண்டனூரில் மிகப்பெரிய ஏரியை இராமாநுசர் ஏற்படுத்தினார்.

வைணவ பக்தர்கள் குறைந்துவிட்ட காரணத்தால் திருநாராயணபுரம் கோயில் மிகவும் சேதமாகி, பூசையற்றுக் கிடந்தது. இராமாநுசருடைய கனவில் திருநாராயணப்பெருமாள் தோன்றி தாம் இருக்கும் இடத்தைக் குறிப்பிட்டு தமது கோயிலைத்திருப்பணி செய்து புதுப்பிக்க நியமித்தார்.

இராமாநுசரும் புற்று மூடப்பட்டு இருந்த திருநாராயணப்பெருமாள் சந்நிதியைப் புதுப்பித்தார்.

திருநாராயணப் பெருமாளும், அடுத்துள்ள யதுகிரி நாச்சியாரும் மிக்க அழகாகச் சேவை சாதிப்பார்கள். கருநாடக தேச அலங்காரபாணியின் அம்சங்களை இத்தலத்தில் பெருமாளையும், தாயாரையும் காணும் காட்சி பேரின்பம் பயக்கும்.

திருநாராயணபுரத்தில் உள்ள திருக்குளத்திற்கு கல்யாண தீர்த்தம் எனப் பெயர். இத்திருக்குளத்தில் இராமானுசர் நீராடி வந்தனைகள் செய்துகொண்டிருந்த சமயம், சோழ தேசத்தில் தம்மை வருத்திய கிருமி கண்ட சோழன் இறந்துபோன சேதி எட்டியது. அதை மங்களகரமான சேதியாக ஏற்று உடையவர் "கல்யாண்" என்றபடியால் இத்திருக்குளத்திற்குக் கல்யாண தீர்த்தம் எனப் பெயர்.

திருநாராயணபுரத்தைச் சூழ்ந்தபடி எட்டு தீர்த்தங்கள் உள்ளன. அந்தத் தீர்த்தங்கள் அட்ட தீர்த்தங்கள் என அழைக்கப்படுகின்றன.

திருநாராயணபுரத்தில் நம் எம்பெருமானார் 12 ஆண்டுகள் தங்கியிருந்தார். ஒரு சமயம் வெள்ளைத் திருமண் கிடைக்கவில்லை. கவலையுடன் துயில்கையில் திருநாராயணப் பெருமாள், திருநாராயணபுரத்தைச் சூழ்ந்துள்ள மலையடிவாரத்தில் வெள்ளைத் திருமண் கிடைக்கக் கூடிய இடத்தைக் குறிப்பிடவும், அவ்விதமே தோண்டிப் பார்த்ததில் வெள்ளைத் திருமண் கிடைத்ததாம். இன்றும் திருநாராயணபுரம் வெள்ளைத் திருமண் உயர்ந்ததாக உள்ளது.

திருவீதியில் வாகனங்களில் எழுந்தருளி விழாக் கண்டருளிய உற்சவ மூர்த்தியை முகலாய மன்னன் திருநாராயணபுரத்தைக் கொள்ளையடித்த சமயம் டில்லிக்கு எடுத்துச் சென்றுவிட்டதாக கேள்விப்பட்டார்.

உடனே உடையவர் பல்லாயிரக்கணக்கான பக்தர்களுடன் டில்லிக்குச் சென்று முகலாய மன்னனைக் கண்டு அவனை மகிழச் செய்து உற்சவ மூர்த்தியைத் தரும்படி வேண்டினார்.

உற்சவமூர்த்தியை முகலாய மன்னன் மகள் மிக்க காதலுடன் பாராட்டி வந்தாள். உடையவரும் அவ்விளவரசியின் அந்தப்புரம் சென்று உற்சவப் பொருளை "என் செல்லப் பிள்ளாய்! வாராய்!" என அழைக்கவும், செல்லப் பிள்ளையும் ஓடி குதித்து வந்து நம் உடையவர் மடியில் அமர்ந்துகொண்டார் ஒரு குழந்தைபோல.

இப்படி நம் இராமானுசர் செல்லப்பிள்ளையே! என அன்புடன் அழைத்ததால் இந்த உற்சவமூர்த்திக்கும் செல்லப்பிள்ளை என்று தமிழிலும், சம்பத்குமாரர் என்று வடமொழியிலும் திருநாமங்கள் ஏற்பட்டன.



இம்மூர்த்திக்கு ராமப்பிரியர் எனவும் ஒரு திருப்பெயர் உண்டு. அயோத்தியில் ஸ்ரீராமபிரானால் பூசிக்கப் பட்டதால் இப்பெயர் உண்டாயிற்றாம்.

செல்லப்பிள்ளையின் விழாக்களில்வைர முடிசேவை மிகவும் சிறப்பானது. அன்று செல்லப் பெருமாள் கருடன்மீது ஏறி மிக விலையுயர்ந்த திரு முடியைச் சாற்றிக்கொண்டு இரவில் எழுந்தருளுவார். வைனதேயன் என்றால் கருடன். வைனதேயன் மீது காட்சியளிக்கையில் அணியும் முடி வைனமுடி. பிறகு இதை வைரமுடி என்று பொதுமக்கள் கூறுவார்கள்.

மைசூர் மன்னன் அளித்த இராசமுடியை அணிந்து பெருமாள் எழுந்தருளுகையில் இராசமுடி சேவை என்பார்கள்.

நம் உடையவர் இத்தலத்தில் மிகப்பெரிய புரட்சியை ஏற்படுத்தினார். தீண்டப்படாத மக்கள் என்று கூறப்பட்டவர்கட்கு இராமானுசர் திருக்குலத்து அடியார்கள் எனப் பெயரிட்டு, அவர்களுக்கு ஆலயப் பிரவேச உரிமையும் அளித்தார். அவருக்குப் பின் இந்த உரிமை கால வழக்கில் தேய்ந்து வைர முடிசேவை சமயம் மட்டும் மூன்று நாட்களுக்கு திருச்சுற்றுகளில் மட்டும் செல்லும் வழக்கம் ஏற்பட்டது.

திருநாராயணபுர ஆலயத்தின் எதிரில் உள்ள மலையில் யோக நரசிங்கப் பெருமாள் எழுந்தருளி யுள்ளார். மலை ஏறுவது கடினம்தான். யோக நரசிம்மப் பெருமாள் மிகக் கம்பீரமாகக் காட்சி தருகிறார். இந்த மலையில் உச்சியில் இருந்து பார்த்தால் திருநாராயணபுரமும், தொலைவில் மைசூரும் தெரியும்.

நம் எம்பெருமானார் திருநாராயணபுரத்தில் தமது கைங்கரியங்கள் முடிவு பெற்றதும் திருவரங்கம் செல்ல விரும்பினார். சீடர்கள் மிகவும் வருத்தமுற்று அவரைப் போன்ற ஒரு திவ்விய திருமேனியை

ஏற்படுத்தித் தரும்படி வேண்டினர். அவ்விதமே அவரைப் போன்ற அழகான வடிவம் ஏற்படுத்தப் பட்டது சீடர்களுக்குத் திருப்தி இல்லை. இராமாநுசரைப் போன்றே அவரது திருவடிவும் தம்முடன் பேசவேண்டும் எனச் சீடர்கள் வேண்டினர்.

தமது திருவடிவிற்கு முன் ஒரு திரையை இடச்செய்து 'அருளப்பாடு' நம் இராமாநுசன்! என்று அர்ச்சகரைக் கொண்டு அழைக்கவும், உள்ளிருந்த இராமாநுச வடிவும் நாயந்தேன்! நாயந்தேன்! என்று பதில் தந்தது. பெருமாள் சார்பில் மரியாதை செய்ய அர்ச்சகர் இப்படி அழைப்பதும் அழைக்கப்பட்டவர் பரம பக்தியுடனும் பணிவுடனும் இப்படி பதில் உரைத்துக் கொண்டு வருவதும் வழக்கமாக இருந்து வருகிறது.

இப்படியாக இத்தலத்து இராமாநுசர் பேசியபடி யால் இவரைப் "பேசும் எதிராஜர்" என்று போற்று வார்கள். இராமாநுசரின் சீடர்கள், அதாவது தமர்கள் மிகவும் மகிழ்ந்து- ஏற்றுக்கொண்டபடியால் இத் தலத்தில் எழுந்தருளியுள்ள இராமாநுசரின் வடிவை "தமர் உகந்த திருமேனி" எனக் கொண்டாடுகின்றனர்.

இன்னும் ஒரு குறையிருந்தது. இத்தலத்திற்கு ஆழ்வார்கள் பாடல் இருந்தால்தான் திவ்விய தேசம் எனச் சிறப்பிக்கப்படும். எனவே அக்குறையும் தீர இராமாநுசர் இத்தலத்திற்கு, நம்மாழ்வார், திருவாய் மொழியில் 'ஒரு நாயகமாய்' என்று தொடங்கும் பத்துப் பாடல்களை அளித்தருளினார்.

அதன் முதல் பாசுரம் இதுவே.

"ஒரு நாயகமாய் ஓட உலகுடன் ஆண்டவர்
கருநாய் கவர்ந்த காலர் சிதைகிய பானையர்
பெருநாடு காண இம்மையிலே பிச்சைதாம் கொள்வர்
திருநாராயணன் தாள்காலம் பெறச் சிந்தித்து உய்ம்மினோ"

நம் வைணவ தரிசனம் மிக எளியது. இதனைக் கடைபிடிக்க மிகச் சுலபமான வழிகளைத் தம் சீடர் களுக்கு உபதேசித்துக் கொண்டுவந்த நம் உடையவர் கடைசியாகச் சொன்ன அறிவுரை இதுதான்.

ஒரு நாளாகிலும், திருநாராயணபுரத்தில் குடிசை போடுங்கள்! ஒரு நாள் திருநாராயணபுர வாசம் செய்தால் போதுமாம். சகல வைணவ சம்பந்தமும் கிடைக்குமாம். எனவே இதுவரை திருநாராயணபுரம் சென்று சேவிக்காதவர்கள், எப்படியாவது ஒருமுறையாவது திருநாராயணபுரம் சென்று ஸ்ரீ நாராயணப் பெருமானையும், யதுகிரி நாச்சியாரையும், ஸ்ரீயோக நரசிம்மரையும், ஸ்ரீசெல்வப் பிள்ளையையும் பேசும் எதிராஜரையும் சேவித்து மகிழும்படி வேண்டிக் கொள்கிறோம்.

❖❖❖

கந்தனுக்குப் ப்ரீதியான விரதங்கள் மூன்று! அவை: வார விரதம், நட்சத்திர விரதம், திதி விரதம்.

ஒவ்வொரு வாரமும் வெள்ளிக்கிழமை தோறும் விரதமிருந்து வேலவனின் தாள் பணிவது - வார விரதம்!

மாதந்தோறும் வரும் கார்த்திகை நட்சத்திரத்தில் கந்த பெருமானைப் போற்றித் துதித்து விரதமிருப்பது - நட்சத்திர விரதம்!

ஐப்பசி மாதம் சுக்கில பட்ச வளர்பிறை அன்று சஷ்டி திதியில் விரதமிருந்து கொண்டாடப்படுவது - சஷ்டி விரதம்!

இராவணனை அடக்க இராமன்; கம்சனை அழிக்க கிருஷ்ணன்; சூரனை வெல்ல வேலன்! இப்படி துஷ்ட சம்ஹார சிஷ்ட பரிபாலகராக விளங்கும் இந்த வேலன் விரும்பி, எழுந்தருளி யிருக்கும் படை வீடுகள் ஆறு. அவை - திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், பழநி, சுவாமிமலை, பழமுதிர்ச்சோலை, திருத்தணி.

சூரனை முருகப்பெருமான் வதம் செய்த நாள் கந்தசஷ்டி. இது நடைபெற்ற திருத்தலம் திருச்செந்தூர்.

சூரசம்ஹார விழா எல்லா முருகன் கோவில் களிலும் நடைபெறுகிறது. ஆனால் திருத்தணியில் மட்டும் கிடையாது. அங்கே போருக்குப் பின் அமைதி நிலவுகிறது.

பிரணவ சொரூபியான முருகப் பெருமானிடம் மும்மூர்த்திகளுமே அடக்கம். அதாவது, காக்கும் கடவுளாகிய முகுந்தன்; அழிக்கும் கடவுளாகிய ருத்ரன்; படைக்கும் தெய்வமாகிய கமலோற்பவன். இம்மூன்று மூர்த்திகளின் திருநாமங்களில் முதல் எழுத்துக்களின் ஒன்றான ஒப்பற்ற வடிவே "முருகா" என்பதன் தாரக மந்திரம்!

**"கந்த சஷ்டி விரதமிருந்து முறையாக வழிபடுவோருக்கு இச்சா சக்தி, கிரியா சக்தி, ஞான சக்தி என்ற மூன்று சக்திகளுக்கும் தலைவனான முருகப் பெருமானது பேரருள் கிட்டும். ஞானம் பிறக்கும் அடியவர்கள் வாழ்வு எப்போதும் நலம் பெறும்."**



# கவலைகள் போக்கும் கந்தசஷ்டி விரதம்

- சம்பத்குமார்

முருகப் பெருமான் சூரபத்மாதியரை அழிக்கப் போர் புரிந்த திருவிளையாடலைத்தான் கந்த சஷ்டி விழாவாக நாம் அனுஷ்டித்துக் கொண்டாடி வருகிறோம். இந்தப் போர் ஐப்பசித் திங்கள் வளர்பிறையில் நடந்தது.

சூரபத்மனின் ஒரு பாதி "நான்" என்கிற அகங்காரம். மற்றொரு பாதி "எனது" என்கிற மமகாரம். இவைதான் சேவலும், மயிலுமாக உருக்கொண்டு முருகப் பெருமானை எதிர்க்க வந்தது.

போரின் இறுதிநாள் சஷ்டி திதியன்று, சூரபத்மனை சம்ஹாரம் செய்த முருகப்பெருமான் தனது வேலாயுதத்தால் அவனை இரு கூறாக்கினார். அவரது பேரருளால் ஒன்று சேவலானது, மற்றொன்று மயிலானது. மால் முருகன் மயிலை வாகனமாகக் கொண்டார். சேவலைக் கொடியிலே கொண்டார். சூரபத்மன் முருகன் திருவருளால் பகைமை நீங்கி ஞானம் பெற்றான்.

இந்தப் போர் மொத்தம் பத்து நாட்கள் நடைபெற்றது. முதல் நான்கு நாட்கள் சூரபத்மனைச் சேர்ந்த வீரர்களைத் தோல்வியுறச் செய்த நாள். அடுத்த ஆறு நாட்கள் பானுகோபன், சிங்கமுகன், சூரபத்மன் போன்றோரை முருகன் வென்று வாகை சூடியத் திருநாள்!


இந்த ஆறு நாட்களும் தேவர்கள் முருகனை வழிபட்டனர். அந்த ஆறு நாட்களே சஷ்டி விரதம்! எனவேதான் ஐப்பசி மாதம் வளர்பிறையில் வரும் 6 நாட்களும் சஷ்டி விரதமாகக் கொண்டாடப்படுகிறது.

கந்த சஷ்டி விரதமிருந்து முறையாக வழிபடுவோருக்கு இச்சா சக்தி, கிரியா சக்தி, ஞான சக்தி என்ற மூன்று சக்திகளுக்கும் தலைவனான முருகப் பெருமானது பேரருள் கிட்டும். ஞானம் பிறக்கும். அடியவர்கள் வாழ்வு எப்போதும் நலம் பெறும்.

சஷ்டியன்று கந்தனுக்கு அபிஷேகம் செய்த பாலைப் பருகுவோர்க்கு புத்திர பாக்கியம் உண்டாகும் என்ற நம்பிக்கையில் மக்கள் கூட்டம் தொடர்கிறது.

❖❖❖

திருக்கோயில் மாத இதழ்
இப்போது இணையத்தளத்திலும்...
www.tnhrce.org





# கொண்டாடுவோம் தீப ஒளியோடு

இறைவனின் நாமங்களை வரிசையாகச் சொன்னால் அது நாமாவளி; அதுபோல தீபங்களை வரிசையாக ஏற்றி வைத்தால் அது தீபாவளி. "தீபம்" என்றால் எண்ணெயில் எரிகின்ற விளக்கு. 'ஆவளி' என்றால் வரிசை.

ஐப்பசி மாதத்தில் வரும் த்ரயோதசி, சதுர்த்தசி, அமாவாசை, சுக்கில பிரதமை என்னும் நாட்களும் தீபாவளியோடு தொடர்புடைய நாட்கள் என்பதால் முதல் இரண்டு நாட்களை முதன்மையாகக் கொண்டு தென்னாட்டவரும், அடுத்த இரண்டு நாட்களை இலக்காகக் கொண்டு வட நாட்டவரும் 'தீபாவளி' என்ற பெயரால் விமரிசையாகக் கொண்டாடுகின்றனர்.

தீபாவளி கொண்டாடுவதின் பின்னணி அனைவரும் அறிந்த ஒன்றுதான். "நாம் துன்பப்பட்டாலும் உலகம் இன்புற்றிருக்க வேண்டும் என்கிற மனப்பான்மையை வளர்த்துக் கொள்வதுதான் தீபாவளி கொண்டாடுவதின் பயன்" என்கின்றனர்.

இந்த தீபாவளி பண்டிகையை முதலில் கொண்டாடியவனே நரகாசுரனின் மைந்தன் தானாம்! என்ன ஆச்சர்யமாக இருக்கிறதா? தந்தை இறந்த தினத்தன்று பகதத்தன் வண்ண விளக்குகளாலும், வான வேடிக்கைகளாலும் தன் அரண்மனையை அலங்கரித்து கண்ணபிரானுக்கும் அவனது ராஜகன்னிகைகளுக்கும் பெரும் வரவேற்பு அளித்து, எண்ணெய் தேய்த்து, கங்கை நீராடி, பட்டு வஸ்திரம் தரிக்கச் செய்து, அதேபோல் அனைவரையும் செய்ய வைத்து கண்ணனின் பேரருளைப் பெற்றிருக்கிறான்.

தீபாவளித் திருநாளை இந்துக்கள் என்று மட்டுமில்லாமல் ஜைனர்கள், பௌத்தர்கள், சீக்கியர்கள் என வடநாட்டிலுள்ள அனைவருமே கொண்டாடி வருகின்றனர்.

ராஜஸ்தானிலுள்ள பெண்கள் தங்கள் உடல் முழுக்க 'எனாமல்' நகைகளை அணிந்துகொண்டு, வண்ண வண்ண உடைகளை உடுத்திக் கொண்டு, தீபாவளியன்று ராமபிரானை பக்தியுடன் கொண்டாடுகின்றனர்.

மகாராஷ்டிரத்தில் இப்பண்டிகையை "தாம்பூலம் போடும் திருநாள்" என்று விசேஷமாக அழைக்கின்றனர்.

"பக்தி" என்னும் தீபத்தை நம் அன்பு உள்ளங்களில் ஏற்றி வைக்கும் இந்த ஒளித் திருநாளைக் குறித்து ஏராளமான புராண, இதிகாச, வரலாற்று

நிகழ்ச்சிகள் நடைபெற்று இருக்கின்றன.

சந்திரகுப்த விக்ரமாதித்தன் தர்மத்தை நிலைநாட்டும் பொருட்டு, ஐப்பசி மாதம் அமாவாசையன்று அதாவது தீபாவளித் திருநாளன்று ரத்ன சிம்மாசனம் ஏறியதாகவும், இதனை முன்னிட்டே விக்ரம சகாப்தம் ஏற்பட்டதாகவும் சரித்திர ஆராய்ச்சியாளர்கள் சொல்கின்றனர்.

17ம் நூற்றாண்டில் அரசாண்ட முகலாயச் சக்கரவர்த்தி அக்பர் தீபாவளி பண்டிகையில் கலந்து கொண்டதாக 'அயினி அக்பரி' என்ற நூல் தெரிவிக்கிறது. தீபாவளியன்று பட்டாசு வெடிக்கும் வழக்கத்தை ஏற்படுத்தியதே பாபர் தானாம்!

பிரகலாதனுடைய பேரனான மகாபலிச் சக்கரவர்த்தி தீபாவளியன்று முடிசூட்டிக் கொண்டு அரியணை ஏறியதோடு, அந்நாளில் ஒளியூட்டப்பட்ட தீபமே "யமதீபம்' என்று அழைக்கப்படுகிறது. இன்னும் வடநாட்டில் உள்ள சில பகுதியினர் மகாபலியின் உருவத்தைச் செய்து "தீபாவளி" அன்று வழிபடுகின்றனர்.

மகாவீரர் முக்தி அடைந்த நாள் தீபாவளித் திருநாள்! ஆதிசங்கரர் ஞான பீடத்தை ஏற்படுத்திய நாள் தீபாவளிப் பெருநாள்! குருநானக் வீடுபேறு அடைந்த நாள் தீபாவளி ஒளிநாள்! சுவாமி தயானந்த சரஸ்வதி இப்பூவுலகை விட்டு புகழுலகு சென்றநாள் இத்தீபாவளி நன்னாளில்தான்!

வனவாசத்தை முடித்துக் கொண்டு அயோத்தி திரும்பிய ராமன் அரியணை ஏறியது தீபாவளி நாளன்று. பொன் விளக்குகளை அரண்மனை எங்கும் ஏற்றி வைத்ததாக இதிகாசங்கள் கூறுகின்றன.

குபேரன் இந்திரனுக்குப் பொக்கிஷதாரி என்பதால், தீபாவளி அன்று சில இடங்களில் குபேர பூஜையும் நடைபெறுகிறது.

நம் நாட்டில் மட்டுமல்லாமல், வெளிநாடுகளிலும் குபேரனை வழிபடுகின்றனர். இலங்கை, ஜப்பான், ஜாவா, இந்தோனேஷியா, இந்தோசீனா, தென் அமெரிக்கா போன்ற நாடுகளில் குபேர பூஜை நடைபெறுகிறது.

நமக்கு ஏற்படும் துக்கத்தையும், துயரத்தையும் பொருட்படுத்தாமல், உலகம் நன்மையும், அமைதியும் பெற வேண்டும் என்கிற தத்துவத்தை உணர்த்துவதே தீபாவளிப் பண்டிகையின் நோக்கமாகும்.

தமிழர்கள் வாழத் தெரிந்தவர்கள். உணவும், உடையும் வாழ்வதற்கு அவசியம் என்பதை உணர்ந்தவர்கள். இதனால்தான் உணவிற்காகப் பொங்கல் பண்டிகையையும், உடைக்காக தீபாவளிப் பண்டிகையையும் கொண்டாடி வருகின்றனர் போலிருக்கிறது!

நாம் குளிப்பது குழாய் நீராக இருந்தாலும் சரி, கிணற்று நீராக இருந்தாலும் சரி, கேட்பது என்னவோ "கங்கா ஸ்நானம் ஆச்சா?" என்றுதான்.

அது சரி... நிஜமாகவே கங்கைக்கரையில் இருப்பவர்கள் எப்படி நீராடுகிறார்கள்? காசியிலுள்ள "அனுமான் காட்" என்னும் கங்கைப் படித்துறையில் தமிழர்கள் அதிகம் வாழ்கின்றனர். இந்த கங்கை நதிக்கரையில் மொத்தம் 64 ஸ்நானக் கட்டங்கள் இருக்கின்றன. இவைகளில் மிக முக்கியமானவை கனி, தாசுவ, மேத, அசுவமேத, வருணா, மணிகர்ணிகா என்னும் கட்டங்களாகும்.

தீபாவளியன்று கங்கையில் ஸ்நானம் செய்யும் மக்களுக்கு காசி விஸ்வநாதர், விசாலாட்சி, அன்னபூரணி ஆகியோரின் அருள் கிடைப்பதோடு ஏழு ஜென்ம புண்ணியமும் கிடைப்பதாக நம்புகின்றனர்!

பொதுவாகவே காசி ஆலய கருவறையில் கொலு வீற்றிருக்கும் அன்னபூரணியை ஆலயக் கதவின் துவாரம் வழியாகத்தான் பார்க்க முடியும். ஆனால் தீபாவளித் திருநாளன்று நேரிலேயே காணலாம். அதோடு மட்டும் அல்லாமல் காசி விஸ்வநாதர் கோயிலில் உள்ள லிங்கத்திற்கு நாமே அபிஷேகம் செய்து வழிபடலாம்.

தீபாவளித் திருநாளை ஒட்டி காசி கங்கைக் கரையிலுள்ள இந்த ஆலயங்களில் மூன்று நாட்கள் விசேஷமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

❖❖❖

## காப்பியப் பாத்திரங்களும் வைணவப் பெயர்களும்

| | | |
|---|---|---|
| அங்கதன் | - | அங்கதப்பெருமாள் |
| அனுமன் | - | திருவடி |
| இராமன் | - | சக்ரவர்த்தித் திருமகன் |
| இலக்குவன் | - | இளைய பெருமாள் |
| குகன் | - | குகப் பெருமாள் |
| கைகேயி | - | நடுவிலாய்ச்சி |
| சடாயு | - | பெரிய உடையார் |
| சீதை | - | பிராட்டி, மைதிலி |




# சங்கத் தமிழில் முருகன்

முனைவர் மா.கி. இரமணன்

## செந்தமிழ்க் கடவுள் முருகன்! தமிழே முருகன்! முருகனே தமிழ்!

குறிஞ்சித் திணைக் கடவுளாகத் தொல்காப்பியர் கூறினார்!

"சேயோன் மேய மைவரை உலகம்" என்கிறது தொல்காப்பியம்.

முருகு என்றால், இளமை, எழுச்சி, அழகு, முருகன் என்று பல பொருள் உண்டு.

மெல்லினம் = மு; இடையினம் = ரு; வல்லினம் = கு; என்று மூவினமும் சேர்ந்தவன் முருகன்! இன எழுத்துகள் 6; முருகன் திருமுகமும் 6, உயிர் எழுத்துகள் 12, முருகன் கைகளும் 12, மெய் எழுத்துகள் 18, முருகன் கண்களும் 18, தமிழின் ஆயுத எழுத்து ஃ, முருகன் ஆயுதம் வேல் ஆகும்.

"ஐந்து தமிழ் மாலை கோடி கோடி
சந்தமொடு நீடு பாடிப் பாடி"

என்று சந்தத் திருப்புகழ் பாடிய அருணகிரிநாதர், தமிழினில் உருகி முருகனைப் பாடுவோருக்கு சனனம், மரணம் இரண்டுமே இல்லை என்கிறார்.

"தமிழினில் உருகிய அடியவர், சனன, மரணம் தவிர்ப்பவனே" – திருப்புகழ்

### சங்கத் தமிழ் இலக்கியம்

பத்துப் பாட்டு, எட்டுத் தொகையிலும், முருகன் சிறப்பாகப் போற்றப்பட்டுள்ளார்.

சங்கம் மருவிய காலத்தில் கி.பி. 200இல் தோன்றிய சிலப்பதிகாரத்தில் முருகன் ஆலய வழிபாடும், பெருமையும் பேசப்பட்டுள்ளது.

முருகன் அகத்தியருக்கு தமிழை உபதேசித்ததை முருகர் அந்தாதி பாடுகிறது.

"மாலைக் குறுமுனிக்கும், திருப்புகழ் பண்ணவர்க்கும்
ஆலாலம் உண்டவர்க்கும் உபதேசித்த என் ஆண்டவ"

முனிவரில் சிறந்த அகத்தியருக்கும், மனிதரில் சிறந்த அருணகிரிநாதருக்கும், தெய்வத்தில் சிறந்த சிவபெருமானுக்கும் 'ஓம்' என்ற பிரணவ உபதேசத்தை முருகன் செய்துள்ளார்.

### திருமுருகாற்றுப்படை

மதுரை கணக்காயர் மகனார் நக்கீரர், கடைச் சங்கத் தலைமைப் புலவராய் இருந்து தமிழை வளர்த்தவர்.

புலவர் ஆற்றுப்படை என்று போற்றப்படுகின்ற திருமுருகாற்றுப்படையும், நெடுநல்வாடையும் பாடியவர். நற்றிணையில் 7, குறுந்தொகை 8, அகநானூற்றில் 17 பாடல்கள் பாடியவர்.

'கீத இசை கூட்டி வேதமொழி சூட்டு கீரர்'

என்று திருப்புகழ் இவரைப் போற்றுகிறது.

இவர் தமிழைப் பழித்த குயக் கொண்டானைப் பாடிஇறப்பித்து, மீண்டும் உயிர்தந்து பிழைப்பித்தவர்.

### திருப்பரங்குன்றம்

திருப்பரங்குன்றத்தில், தன்னை சிறையிலிருந்து விடுவிக்க வேண்டி முருகன் மேல் 'திருமுருகாற்றுப் படை' பாடி விடுவிக்கப் பெற்றவர்.

ஆறுபடை வீட்டுப் பாகுபாடுகளை முருகனுக்கு அளித்தவர்.

"கைபுனைந்து இயற்றாக் கவின்பெறு வனப்பின்" தமிழைப் பாடியவர்.

"சூரர மகளிர் ஆடும் சோலை", "சூர் முதல் தடிந்த சுடர்இலை நெடுவேல்", "குன்று அமர்ந்து உறைதலும் உரியன்" என்று தெய்வயானையை மணந்த பரங்குன்றைப் போற்றுகிறார்.

### திருச்சீரலைவாய்

"ஏறுமயிலேறி விளையாடு முகம் ஒன்றே" என்று அருணகிரி பாடுவதற்கு முன், திருச்செந்தூர் கடல் அலைகள் போற்றும் திருச்சீர் அலைவாய் முருகனின் முகங்களைப் பாடினார் நக்கீரர்.

"மாஇருள் ஞாலம் மறுஇன்றி விளங்கப்
பல்கதிர் விரிந்தன்று ஒருமுகம், ஒருமுகம்
ஆர்வலர் ஏத்த அமர்ந்து இனிது ஒழுகி
காதலின் உவந்து வரம் கொடுத்தன்றே ஒருமுகம்"

உலகம் புகழும் அலைவாய் முருகன் பெருமையைப் பாடுகிறார்.

"உலகம் புகழ்ந்த ஓங்குயர் விழுச்சீர்
அலைவாய்ச் சேறலும் நிலைஇய பண்பே"

– திருமுருகாற்றுப்படை

### திருஆவினன்குடி

திருஆவினன்குடி பழனியில், முனிவர்கள் உணவின்றி தவமிருந்து முருகனைக் காண்கின்றதைப் பாடினார்.

'செற்றம் நீங்கிய மனத்தினர்', 'மென்மொழி மேலவர்', 'தீஎழுந்தன்ன திறலினர்', 'காமமொடு கடுஞ்சினம் கடிந்த காட்சியர்', 'என்பு எழுந்து இயங்கும் யாக்கையர்' பழனிமலை சித்தர்கள் பூமி. போகர் இருந்த இடம். எனவே ஞானியர்கள் போற்றும் பழனிமலை என்று பாடினார் நக்கீரர்.

### திருவேரகம்

சுவாமிமலையில் அந்தணர், காவிரியில் நீராடி வந்து சுவாமிநாதனைப் போற்றுகின்றனர். 'ஆறு எழுத்து அடங்கிய அருமறை கேள்வி', 'சரவணபவ'

என்ற மந்திரம் அறிந்தவரின் பெருமைகளைப் பாடினார்.

'குன்றுதோறாடல்' ஐந்தாம் படைவீடு. தற்போது இதை திருத்தணி என்பர். நக்கீரர் இதைக் குறிப்பிடாமல், குன்றுதோறும் குமரன் கோயில் என்றார்.

## பழமுதிர்ச்சோலை

அருவிகள் கொட்டும் மலைசூழ்ந்த சோலை.

'இழுமென இழிதரும் அருவி,
பழமுதிர் சோலைமலை கிழவோனே

ஔவையாருக்கு நாவல் கனிதந்து அருள்செய்த இடம் இது.

அறுபடை வீடுகளில் மட்டுமா? முருகன் வேண்டும் அடியவர் வேண்டிய இடந்தோறும் ஆங்காங்கு செல்வதை அழகுற நக்கீரர் பாடினார்.

"வேண்டுநர் வேண்டியாங்கு எய்தினர் வழிபட
ஆண்டாண்டு உறைதலும் அறிந்தவாறே
ஆண்டாண்டு ஆயினும் ஆக"

– திருமுருகாற்றுப்படை

## புறநானூற்றில் முருகன்

நக்கீரர் புறநானூற்றிலும் முருகனைப் போற்றியுள்ளார். நினைத்ததை முடித்துக் காட்டும் கடவுள் முருகன். எனவே நினைத்ததை முடித்துக் காட்டியவரை முருகனை ஒத்தவராகப் போற்றுகிறார்.

"முன்னியது முடித்தலின் முருகு ஒத்தீயே"

"மணிமயில் உயரிய மாறா வென்றிப்
பிணிமுக ஊர்தி ஒண் செய்யோன்"

– புறநானூறு 56.

சீற்றம் மிக்கவரை முருகன் எனப் போற்றுகிறார் பாண்டரங்கண்ணார்.

"முருகன் சீற்றத்து உருகெழு குருசில்"

– புறநானூறு 16.

பெண் புலவர் பொன்முடியார், தன் பெண்மை அனுபவத்தை மிக அழகாக உவமை ஆக்கினார். பகைவனின் படையில் உள்ள குதிரைகள் மோதி மிதித்துப் போராடாமல் பயந்து பயந்து பின்வாங்குவது எதைப் போல் தெரியுமா? ஆலய மகளிர் தூய்மையற்ற காலங்களில் முருகன் ஆலயத்தில் உள்ள பாத்திரங்களைத் தொடாமல் விலகுவது போல என்று பாடியுள்ளார். முருகன் கோட்டம் என்பது முருகன் ஆலயம். இன்றும் கந்தக் கோட்டம், குமரிக் கோட்டம் என்பவை உள்ளன.

'அணங்குடை முருகன் கோட்டத்துக்
கலம் தொடா மகளிரின் இகழ்ந்து நின்றவ்வே'

– புறநானூறு 299

'வல்வேல் கந்தன்' – புறம் 380.

## குறுந்தொகை

குறுந்தொகையின் முதல் பாடலே குமரனைப் போற்றும் துதிப்பாடல். இதை எழுதியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார். முருகன், மயில், சேவல், கொடி பாடப்படுகின்றன.

"நெஞ்சு பகஎறிந்த அஞ்சுடர் நெடுவேல்
சேவலங் கொடியோன் காப்ப
ஏம வைகல் எய்தின்றால்" – குறுந்தொகை 1

குறுந்தொகையில் முருகன் பற்றிய நக்கீரர் பாடல் எழுச்சிமிக்கது. முருகனுக்கு வெறியாட்டு நிகழ்த்துவர். சாமி வந்து ஆடும் மரபு அன்றும் இருந்தது. முருகன் படையலுக்காக காய வைத்த தினையை மயில் உண்டு; பக்தி ஆவேசம் கொண்டு ஆடிய காட்சியைப் பாடலாகப் பதிவுசெய்துள்ளார்.

"கடவுட்கு இட்ட செழுங்குரல் சிறுதினை
அறியாது உண்ட மஞ்ஞை, ஆடு மகள்
வெறிஉறு வனப்பின் வெய்துற்று நடுங்கும்
சூர்மலை நாடன்' – குறுந்தொகை 105

## பரிபாடல்

முருகன், திருமால், துர்க்கை, வைகை ஆகியோர் மேல் பரிபாடல் இசையோடு பாடப்பட்டுள்ளது. 70 பாடல்களில் 22 மட்டுமே கிடைத்துள்ளன. இதில் முருகனைப் போற்றும் பழம்சங்கப் பாடல்கள் 8.

திருப்பரங்குன்ற முருகன் மேல் நல்லச்சுதனார் பாடி, கண்ணகனார் இசையமைத்து காந்தாரப் பண்ணில் அமைத்த பாடல்.

'ஆறு இரு தோள்அவை, ஆறுமுகம் விரிந்தவை
இன்றுபோல் இயைக எம் பரவலும்'

நப்பண்ணனார் பாடலிது.

'வெஞ்சுடர் வேல்வேள், மயில்மேல் ஞாயிறு'

கடுவன் இளவெயினனார் முருகனிடம் பொன்னும், பொருளும், போகமும் வேண்டாம். அன்பும், அருளும், அறனும் வேண்டுமெனக் கேட்கிறார்.

"காஅய் கடவுள் சேஎய் செவ்வேள்
யாஅம் இரப்பவை
பொருளும், பொன்னும், போகமும் அல்லநின்பால்
அருளும், அன்பும், அறனும் மூன்றும்" – பரிபாடல்

சிலப்பதிகாரத்தில் சீர்கெழு செந்திலும், திருச்செங்கோடும், திருப்பரங்குன்றும், ஏரகமும் நீங்கா வேலவனை இளங்கோ அடிகள் பாடியுள்ளார்.

பல்லாயிரம் ஆண்டுகளாகத் தமிழ்க் கடவுள் முருகனைச் சங்கப் புலவர் போற்றி அருள்பெற்றனர். நாமும் முருகனை வேண்டி யாவையும் பெற்று மகிழ்வோம்.

❖❖❖

# கடவுள் கொடுக்க ஆரம்பித்தால்...

*வைரம் ராஜகோபால்*

தெய்வ தரிசனம் செய்வது என்பதை தினசரி வழக்கமாகக் கொண்டுள்ளவர்கள் பலர் உண்டு. எப்போதோ சமயம் நேரும்போது தெய்வ தரிசனம் செய்பவர்களும் உண்டு. அப்படியும் செய்ய முடியாதவர்கள் இருந்த இடத்திலிருந்தே தியானம் செய்வதுமுண்டு. எப்படியாயினும் தெய்வத்துடன் தொடர்பு கொண்டிருப்பது நல்லது என்பது நம்பிக்கை. எதையெல்லாமோ சதா நினைத்துக் கொண்டிருக்கும்போது தெய்வத்தையும் நினைத்து வைத்தால் நன்மை உண்டு. நன்மை என்று எதுவும் தெரியாவிட்டாலும் தீமை அல்லது நஷ்டம் என்று எதுவும் ஏற்படாது.

சாதாரணமாக, வயதானவர்கள், பெரியோர்கள், குழந்தைகள், ஆலயம் இருக்குமிடங்களுக்குச் செல்லும்போது கையில் ஏதாவது எடுத்துச் செல்ல வேண்டும். வெறுங்கையுடன் போகக்கூடாது என்று சொல்வார்கள். இதனால் தெய்வத்துக்கோ, பெரியோர்களுக்கோ நம்மீது ஒரு பிரியம் ஏற்படும் என்பது கருத்து. குறிப்பாக ஆலயங்களுக்குப் போகும்போது, ஏதாவது எடுத்துச் செல்ல வேண்டும். விளக்குத் திரி, எண்ணெய், நெய், தேங்காய், பழம், கற்பூரம் இப்படி ஏதாவது ஒன்று, சிறிய புஷ்பம் என்று எடுத்துச் செல்வது வழக்கம்.

சிலர் பிரார்த்தனை செய்துகொண்டு, அதைச் செலுத்திவிட்டு வருவதற்கும் செல்வதுண்டு. இப்படி கடவுளுக்கு எதையாவது அளிப்பதில் இரண்டு வகை உண்டு. ஏதாவது காரியம் சாதகமானால் எதையாவது அளிக்கிறேன் என்பது ஒருவிதம். எதையும் விரும்பாது நாம் ஏதாவது கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தில் கொடுப்பது ஒரு விதம். எப்படிக் கொடுத்தாலும் உள்ளன்போடு எதைக் கொடுத்தாலும் கடவுள் ஏற்றுக் கொள்கிறார். அனுக்கிரகம் செய்கிறார் என்று பலர் சொல்வது உண்டு.

ஒரு சமயம் ஒரு கூனன், ஒரு நொண்டி, ஒரு குருடன், ஒரு ஊமை ஆகிய நால்வரும் இறைவனைத் தரிசிக்க வேண்டி, படிகளின் வழியாக நடந்தே சென்றார்கள். அப்போது இவர்கள் பேசிக் கொண்டார்கள். நாம் கடவுளை தரிசிக்கப் போகிறோமே! அவரிடம் கொடுப்பதற்கு நம்மிடம் ஒன்றுமில்லையே. என்ன செய்வது என்றான் ஒருவன். அதற்கு மற்ற மூவரில் குருடன், என் குருட்டுத் தன்மையைக் கொடுத்து விடுகிறேன் என்றான். கூனன் கூனலைக் கொடுத்து விடுவதாகச் சொன்னான். நொண்டி, தன் நொண்டித் தன்மையைக் கொடுப்பதாகச் சொன்னான். ஊமையும் தன் ஊமைத் தன்மையைக் கொடுத்துவிடட்டும் என்றார்கள்.

இவர்கள் மனமார இதைச் சொல்லிக் கொண்டே மலை ஏறினார்கள்.

இவர்கள் படிகள் ஏறும்போது ஒரு இடத்தில் கால் தடுக்கி விழுந்து உருண்டார்கள். உருண்டதில் குருடனுக்கும் ஊமைக்கும் மண்டையில் ஓரிடத்தில் பலமான அடிபட்டதில் குருடனுக்குக் கண் தெரிய ஆரம்பித்துவிட்டது ஊமைக்குப் பேசும் சக்தி வந்தது "அடக் கடவுளே!" என்று கூறினான் ஊமையன். கூனனுக்கு முதுகில்சரியான அடிபட்டதில் கூன் நிமிர்ந்து எழுந்து நேராக நின்றான். கீழே விழுந்த நொண்டி பக்கத்தில் மரத்திலிருந்த தேன் கூட்டைப் பார்த்துவிட்டு, அதோ தேன் கூடு. அதிலிருந்து தேன் எடுத்தால் ஏழுமலையானுக்கு சமர்ப்பிக்கலாமென்று எண்ணி, தான் ஒரு நொண்டி என்பதையும் மறந்து எழுந்து ஓடலானான். நொண்டியாக இருந்த கால் சரியாகிவிட்டது. ஓடிப்போய் தேனையும் எடுத்தான்.

இந்த நால்வருக்கும் இப்போது ஒரே ஆச்சரியம். அடடா! என் கூன் நிமிர்ந்துவிட்டதே! என்றான் கூனன். எனக்குக் கண் தெரிகிறதே! என்றான் குருடன். எனக்குப் பேச வருகிறதே! என்றான் ஊமை. உன் கால்கள் நொண்டாமல் நேராகிவிட்டதே என்றான் நொண்டி.

ஆகா! நம்மிடம் கடவுளுக்குக் கொடுக்க எதுவுமில்லாததால் நம்மிடமிருந்த குறைகளை, ஊனங்களை அவருக்குக் கொடுப்பதாகப் பிரார்த்தித்துக் கொண்டோம். வேறு ஒன்றுமில்லையே என்று வருந்தினோம்.

நாம் எது கொடுத்தாலும் ஏற்றுக் கொண்டு அருள் செய்வான் கடவுள் என்று சொல்வார்களே! அது இப்போது உண்மையாகிவிட்டது பார்! மாசில்லா மனத்தோடு நாம் எது கொடுத்தாலும் பெற்றுக் கொள்கிறவனல்லவா அவன். நாம் கொடுத்ததை ஏற்றுக் கொண்டு விட்டான் அருளும் செய்துவிட்டான்! இதுவும் ஒரு அதிசயமல்லவா என்று புகழ்ந்து பேசினார்கள். கோவிந்தா கோவிந்தா என்று வாய் ஓயாமல் கூவிக்கொண்டே மலையேறி கடவுளை வீழ்ந்து வணங்கினார்கள்.

இப்படி கடவுளின் கருணைக்கு எடுத்துக்காட்டாக ஒரு கதை உண்டு. பகவானுக்குக் கொடுப்பது என்பது நஷ்டமே இல்லாதது. அவன் கருணை செய்ய ஆரம்பித்துவிட்டால் அதற்கு ஈடாக அவனுக்குக் கொடுக்க நம்மிடம் என்ன இருக்கிறது?

❖❖❖



# நன்னெறி காட்டிடும் திருஇராமேச்சுரம்

- சுபாசு

"நாடும் நகரமும் நற்றிருக் கோயிலும்
தேடித் திரிந்து சிவபெரு மானென்று
பாடுமின் பாடிப் பணிமின் பணிந்தபின்
கூடிய நெஞ்சத்துக் கோயிலாய்க் கொள்வனே!"

திருமூலர் அருளிய வாக்கு. எங்கெல்லாம் சிவாலயம் உள்ளதோ அங்கெல்லாம் சென்று வழிபாடு செய்யுங்கள் என பொருள் அமைந்த பாடல். இதனை தற்போது புனித யாத்திரை என அழைப்பர். தமிழகத்தில் நால்வர் பெருமக்களால் பாடப்பெற்ற ஆலயங்கள் 276 உள்ளவாக நமது பெரியோர் வாக்கு. அவற்றில் பாண்டிய நாட்டில் மட்டும் 14 திருக்கோயில்கள் உள்ளன. அதில் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூவகையாலும் சிறப்புப் பெற்றதும், இந்திய ஒருமைப்பாட்டின் உறைவிடமாகத் திகழும் இராமேஸ்வரம் பற்றிய ஒவ்வொரு இந்துவும் அறிந்து இன்புற வேண்டிய செய்தியாகும்.

பன்னிரெண்டாம் நூற்றாண்டு வரை ஒரு துறவியின் பராமரிப்பில் - கூரைக் கொட்டகையாக இருந்த இவ்வாலயம், பலராலும் திருப்பணி செய்யப்பட்டு வளர்ச்சி பெற்று இருந்தாலும் பெரும்பங்கை இராமநாதபுரம் சேதுபதி மன்னர்களும், தேவகோட்டை நிலப்பிரபுக்களாலும் செய்துள்ளனர் என்பதை ஆய்வின் மூலம் அறிய வருகின்றது.

இராமேசுவரம் என்ற புண்ணியப் பெயர் ஸ்ரீஇராமரால் பிரதிஷ்டை செய்யப்பட்ட சிவபெருமான் எழுந்தருளியுள்ள திருக்கோயில் என இயல்பாகவே பெயர் குறிக்கின்றது. மூலவரின் திருநாமங்களாக இராமேசுவரர், இராமலிங்கம், இராமநாதசுவாமி என பலவாறாக அழைப்பர். இராமேசுவரத்தில் வழிபாடும் தனுஷ்கோடியில் முழுக்கும் செய்தால்தான் காசி யாத்திரை பூர்த்தியாகும். சேது என்றால் பாலம் எனப் பொருள்படும். விபீஷணனின் வேண்டுகோளுக் கிணங்கி, இராமன் சேது அணையை வில்நுனியில் உடைத்ததால் தனுஷ்கோடி என்ற பெயர் ஏற்பட்டது. முன்னும் பின்னும் இரண்டு கடல்கள் சங்கமமாகும் சேது தீர்த்தத்தில் நீராடிய பின்பே இராமேசுவரத்தில் 22 புனித தீர்த்தத்தில் முழுக வேண்டும் என்பது சம்பிரதாயம். 1964ம் வருடம் வீசிய கடும்புயல் காரணமாக மேற்கண்ட நடைமுறை மாற்றப்பட்டு விட்டது.

"

**முன்னும் பின்னும் இரண்டு கடல்கள் சங்கமமாகும் சேது தீர்த்தத்தில் நீராடிய பின்பே இராமேசுவரத்தில் 22 புனித தீர்த்தத்தில் முழுக வேண்டும் என்பது சம்பிரதாயம். 1964ம் வருடம் வீசிய கடும்புயல் காரணமாக மேற்கண்ட நடைமுறை மாற்றப்பட்டுவிட்டது.**

"





இராமநாத சுவாமியின் தேவியார் அருள்மிகு பர்வதவர்த்தினி சந்நிதி இராமலிங்கரின் வலப்பக்கம் தெற்கே அமைந்துள்ளது. ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் இரவு தங்கப் பல்லக்கில் பர்வதவர்த்தினி அம்பிகை மூன்றாம் பிராகாரத்தில் வலம் வரும் நிகழ்ச்சியைக் காணும்பொழுது, திருஞானசம்பந்தர் அருளியவாறு "கண்ணினால் நல்விழாப் பொலிவு கண்டு ஆர்தல்" என்ற வாக்குதான் நினைவுக்கு வருகின்றது.



இராவண சம்ஹாரம் நிறைவடைந்ததும் குல குருக்களின் ஆலோசனைக்கிணங்க - இராவணனைக் கொன்றதால் பிரம்மஹத்தி தோஷம் உள்ளது எனவும், அதனை நீக்கிட இராமேஸ்வரத்தில் சிவலிங்கத்தை பிரதிஷ்டை செய்து வழிபட வேண்டும் என்ற நியதியில் - ஸ்ரீஇராமர், கைலாயத்திலிருந்து லிங்கம் கொண்டு வரும்படி ஆஞ்சநேயரிடம் தெரிவித்ததன் பேரில், ஆஞ்சநேயர் கைலாயம் சென்றார். இந்நிலையில் சீதாப்பிராட்டி அங்கு மணலால் ஒரு லிங்கத்தை ஏற்படுத்தி வழிபாடு செய்தாள். இச்சூழ்நிலையில், ஆஞ்சநேயர் லிங்கம் கொண்டுவர தாமதம் ஏற்படவே, மணலால் செய்த லிங்கத்தைப் பிரதிட்டை செய்து வழிபடுகின்றனர். லிங்கத்துடன் திரும்பி வந்த அனுமன் இக்காட்சியைக் காணவே கோபம் கொண்டு மணலால் செய்யப்பெற்ற லிங்கத்தை அகற்ற முயன்றும் இயலவில்லை. அனுமனை ஆறுதல்படுத்தும் வண்ணம், அந்த லிங்கத்தை இராமலிங்கத்தின் பக்கத்தில் வைத்து நிறுவி, அதற்கே பூசை முதலில் செய்ய வேண்டும் என்று ஆணையிட்டதன் பேரில், இன்றளவும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இவ்வாறு இராமபிரானால் பிரதிஷ்டை செய்யப்பட்டதால் அன்று முதல் ஸ்ரீ இராமரால் உண்டாக்கப்பட்ட ஈஸ்வரனை உடைய ஊர் என்ற பொருளில் இராமேஸ்வரம் எனப் பெயர் பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

❖❖❖

# புன்னை வனத்தில் அருள்பாலிக்கும் அன்னை கோமதி

- ச. முத்துச்சாமி



அன்னையுமை கௌரி ஆவுடையநீர்மிந்தப்
புன்னை வனமே விழைதென் பூதலத்தானே
நின்னையெப்பொழுதுமன்னலே நீங்காதுணர்ந்திருந்து
தன்னையறிவதென்றோ சங்கர சதாசிவமே

**சங்கரசதாசிவமாலை**

தென்பாண்டிச்சீமையில் திருநெல்வேலி மாவட்டத்தில் சிறப்போடு விளங்குகின்ற திருக்கோயில் களில் சங்கரன்கோயில் ஒன்று. இது பஞ்சபூத தலங்களில் மண் தலமாக விளங்குகின்றது. இத்தலத் திற்கு பூகைலாயம், புன்னை வனம், சீராபுரம், வாராசை புரம், சீராசை என வேறு பெயர்களும் உண்டு.

வரலாறு: பொருநையாற்றின் கரையிலுள்ள மணலூரில் அரசாண்ட உக்கிர பாண்டியன் என்ற மன்னன் மதுரை சென்று அருள்மிகு மீனாட்சியையும், சொக்கலிங்க பெருமானையும் வழிபடுவது வழக்கம். ஒரு நாள் இவ்வனத்தில் புற்றிலிருந்து சிவலிங்கம் வெளிப்பட்டது. அதே நேரம் மன்னனின் பட்டத்து யானை கொம்பினால் தரையைக் குத்திக் கீழே விழுந்து புரண்டது. பாண்டியன் திகைத்து நின்றான். காவலன் ஓடிவந்து அரசனிடம் செய்தி கூறி அவனை அழைத்தான். மன்னன் உடன் சென்று புற்றிடங் கொண்டாரைக்கண்டான். அது சமயம் சங்கரனார் அசரீரியாக ஆணையிடப் பாண்டியன் காட்டை

அழித்து நகராக்கி கோயில் கட்டியதாக வரலாறு. உமா தேவியார் சிவபெருமானிடத்தில் விஷ்ணு மூர்த்தியுடன் நீர் சேர்ந்திருக்கின்ற திருக்கோலத்தைக் காட்ட வேண்டும் என வேண்ட, பெருமானும் வேண்டுகோளுக்கு இணங்கி அம்மையை நோக்கி புன்னைவனம் சென்று தவம் செய்வாயாக என ஆணையிட்டார். புன்னைவனத்தில் தவஞ்செய்த தேவிக்கு ஆடிமாதம் பௌர்ணமியன்று சங்கரலிங்கமாகவும், சங்கரநாராயணராகவும் காட்சி தந்ததாக புராண வரலாறு கூறுகிறது.

## கோயில் அமைப்பு

கோயில் மூன்று பெரும் பகுதிகளைக் கொண்டது. ஸ்ரீ சங்கரலிங்க சுவாமி சன்னதி, ஸ்ரீகோமதி அம்பிகை சன்னதி, ஸ்ரீசங்கர நாராயணர் சன்னிதி என அமைந்துள்ளது. கோயில் முகப்பில் நூற்றியிருபத்து ஐந்து அடி உயரமுள்ள ஒன்பது நிலைகள் கொண்ட பெரிய கோபுரம் ஒன்று உள்ளது. கோயில் தலைவாசலுக்கு நேரே இருப்பது சங்கரலிங்க சுவாமி சன்னதி. இது தென்பகுதியில் உள்ளது. வடபகுதியில் கோமதி அம்பிகையின் சன்னிதி உள்ளது. இரண்டிற்கும் நடுவில் சங்கரநாராயணர் சன்னிதி உள்ளது. சங்கரலிங்கப் பெருமானுக்கு வன்மீகநாதர் என்ற பெயரும் உண்டு. வன்மீகம் என்பது புற்று. புற்றிலிருந்து தோன்றியபடியால் அவருக்கு வன்மீக நாதர் என்ற திருநாமம் உண்டாயிற்று. திருக்கோயில் கர்ப்ப கிரகத்தில் பெருமான் சிறிய உருவமாய் எழுந்தருளி தன்னை வழிபடுபவர்களுக்கு பெருங்கருணை பாலித்து வருகின்றார்.

## சங்கரநாராயணர்

சிவபெருமானை விட்டுப் பிரியாத அருட்சக்தியாம் உமையம்மை உலகத்தில் உயிர்களாகிய நாம் சிவன் வேறு விஷ்ணுவேறு என்ற பிளவுபடுத்துவது தவறு என்பதை உணர்த்தும் பொருட்டு திருக்கயிலைமலையில் பெருமானிடம் தாங்கள் நாராயணமூர்த்தியுடன் பொருந்தியிருக்கும் திருக்கோலத்தைக் காட்டியருள வேண்டும் என்று வேண்டினார். அதற்கு இணங்கி சிவபெருமான் அம்மையை நோக்கி பூலோகத்தில் பொதிகை மலைச்சாரலில் உள்ள புன்னைவனத் தல மாகிய சங்கரநயினார் கோயில் என்னும் பதியில் தவம் செய்து நீ விரும்பிய கோலத்தை தரிசிப்பாயாக என அருளினார். அதன்படி உமையம்மை தம்மை சூழ்ந்து பசுக்களாகி வந்த தேவமாதர்களுடன் தவம் செய்தார். அம்மையின் தவத்திற்கு இணங்கி பெருமான் சிவன்பாதியாகவும், விஷ்ணு பாதியாகவும் அமைந்த திருக்கோலக் காட்சியை காட்டியருளினார். இது பற்றிய ஒரு பாடல் பதினோராம் திருமுறையில் இடம்பெற்றுள்ளது.

"இடபாகம் வலந்தான் இடபிரான் தழலார் வண்ணம் ஒன்னொன்றை"

எனும் பாடல் வரிகள் மூலம் அறிய முடிகிறது.

இடப்பாகம் நாராயண மூர்த்தியாகவும், வலப் பாகம் சங்கரனாகவும் அமைந்து சங்கரநாராயணராகவும் வீற்றிருக்கிறார்.

## கோமதி அம்பிகை

கோயிலில் வடபகுதியில் ஸ்ரீகோமதி அம்பிகை அழகுடன் வீற்றிருந்து அருளாட்சி செய்து வருகின்றாள். திங்கள்கிழமை தோறும் பூப்பாவாடையும், வெள்ளிக்கிழமை தோறும் தங்கப்பாவாடையும் தரித்து காட்சி தருகின்ற திருக்கோலம் கண்டு மகிழத்தக்கது. கோயிலின் முன்பு ஸ்ரீசக்கரம் எழுதி ஸ்தாபிக்கப் பட்டுள்ளது. இங்கே பிணியாளர்கள் அமர்ந்து அம்மையை நோக்கி தவஞ்செய்து பிணி நீக்கம் பெறுவார்கள். நறுநெய் ஊற்றி மாவிளக்கு ஏற்றி வழிபாடு செய்கிறார்கள். அம்மையின் திருவுருவம் கல் மனதையும் கரைக்கும் பேரழகு வாய்ந்தது என்றும் மறக்க முடியாத திருக்கோலமும், அவள் திருக்கண் நோக்கும் உள்ள இவ்வம்பிகையே இக்கோயிலின் பெருமைக்கு முக்கியக் காரணம்.

## தீர்த்தம் தலம் மூர்த்தி

மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற பெருமைகளுடைய இக்கோயிலில் ஐந்து தீர்த்தங்கள் உள்ளன. அவை அக்கினி தீர்த்தம், அகத்திய தீர்த்தம், சூரிய தீர்த்தம், வைரவ தீர்த்தம், கௌரி தீர்த்தம் என அழைக்கப் படுகின்றன. சங்கன், பதுமன் என்னும் பாம்பரசர்களால் முழுக்கப்பெற்றதும், அவர்களால் தோண்டப்பெற்றது மாகிய நாகசுனை கோவிலுக்குள் நுழையும் இடத்தில் கோமதியம்மை திருமுன்பு அழகானதோர் நடு மண்டபத்துடன் விளங்குகிறது. ஊருக்கு தெப்பக்கம் உள்ளது ஆவுடையப் பொய்கை என்னும் குளம். இவ்வூரின் தலமரம் புன்னைமரம். இம்மரம் மேற்குப் பிரகாரத்தில் உள்ளது. விழாக்கள் சித்திரை திருவிழா, ஆடித்த பசுவிழா, தை கடைசி வெள்ளி தெப்பத் திருவிழா, வசந்த விழா, நவராத்திரி விழா, கந்த சஷ்டி விழா ஆகிய விழாக்கள் கொண்டாடப்படுகின்றன. ஆடித்தபசு திருவிழா இங்கு நடைபெறும் விழாக் களில் மிகப்பெரியது. திரளாக மக்கள் கூடுவர். அன்று மாலை இறைவன் வீதியுலா வரும்போது அம்மை விரும்பியவாறு மாலையில் சங்கரநாராயண ராகவும், இரவில் சிவபெருமானாகவும் காட்சி தந்து அருளுகின்றார்.

கோமதி அம்பிகையின் பெருமைகளை கோமதி சதரத்னமாலை, கோமதியம்மை பிள்ளைத் தமிழ், சங்கர சதாசிவமாலை போன்ற நூல்கள் எடுத்துக் கூறுகின்றன. ஒவ்வொரு மாதமும் கடைசி வெள்ளி யன்று மக்கள் திரளாக வந்து மாவிளக்கு ஏற்றியும், முடி காணிக்கை தந்தும் தங்கள் நேர்த்திக்கடனை செலுத்தி வழிபடுகின்றனர். விவசாயிகள், தங்கள் விளை நிலங்களில் விளையும் பொருள்கள் மற்றும்

காத்தைடகளையும் காணிக்கையாக செலுத்துகின்றனர். புற்று மண்ணில் பிணிதீர்க்கும் அம்மையாக அவள் இருக்கிறாள் எனும் நம்பிக்கைக்கேற்ப வடக்கு பிரகாரத்தில் புற்றுமண் இருக்கிறது. பிணி தீர்க்கும் நன்மருந்து புற்றுமண்ணாகவும் அதை நீக்கும் மருத்துவராக கோமதி அம்பிகையைப் பாவித்து பாடப்பட்ட பாடல்.

நற்கூறுடைச் சினிதீர நன்மருந்தாக புற்றுமருந்தாக நாளும்
கொடுக்கும் வைத்தியர் ஈறணி வதும் நீளிணை
அருள் மருந்தால் கொண்டுரெய்துமால்
நற்கும் வைத்தியரான சங்கரர் கோமதிவைச்சீராசைத் தன்மை
அருக்குமரான் முனிவராரனும் புகழ்அடங்காதன்றே

– தலபுராணம்

சர்வ வல்லமை கொண்ட அன்னை ஸ்ரீ கோமதி அம்பிகையின் இரு சக்திகளில் ஒன்று அம்பிகையின் சன்னதியில் உள்ள சக்திபீடம். இன்னொன்று பிரகாரத்தில் பெறப்படும் புற்றுமண் ஆகும். அம்பிகையின் சன்னதியில் உள்ள ஸ்ரீ சக்கரபீடத்தின் மகிமை தனி மகத்துவம் வாய்ந்தது ஆகும். வாழ்வில் குலம் தழைக்கவேண்டுவோரும், மாங்கல்ய பலம் வேண்டுவோரும், கெட்ட ஆவிகளால் பாதிக்கப்படுவோரும், சித்தப் பிரமையால் நினைவு இழந்தோரும் ஸ்ரீ சக்கர பீடத்தில் அமர்ந்து வழிபட்டு நலம் பெறுகிறார்கள். இவ்வாறு பக்தர்களின் பாவங்களைப் போக்கி அன்பர்கள் அனைவருக்கும் அருளை அளவின்றி வழங்கும் அன்னை ஸ்ரீ கோமதி அம்பாளின் மகிமைகளைப் போற்றி...

தேனே வருக சீராசைத்திருவே வருக திருநெற்திர
சிவசங்கரருக்க வகை நம்மும் செல்வக்கனியே வருக
அன்னையின் ஆனே பரவத்தவம் புரியும் அழுதே வருக
குழுதவாய் அமரே வருக விசைவரிதுணை அங்கும்
திரணக்கதிர் வருக பாவேர் மொழிப் பார்வதி வருக
பனிமாமலையின் சேய்வருக பன்னாங்களிரண்டும்
வழிபாடு புரியும் புன்னைவனமாமயிலேவருக உயிரனைத்தும்
வணங்கும் அனையே வருகவே! மன்றல் கமழும்
மலர் குழற்கோமதியே வருக வருகவே

- கோமதியம்மை பிள்ளைத்தமிழ் 61வது பாடல் என்னும் கோமதியம்மை பிள்ளைத் தமிழ் பாடல் விளக்குகிறது.

வாழ்வில் வளமும் நலமும் பெற அவள் நாமத்தைப் போற்றி வணங்குவோம்.

திங்கள் ஈராம் திங்கள் ஒருநாளும் திருக்காவை
எங்கிருந்தாலும் புகல்வேன் நான் செல்லும் இடங்களெல்லாம்
மங்களம் வாங்கி மருவாங்கி வாழ்வரும் தவைவர்
நங்கை கோமதி அம்மா அன்னையை நாயகியே

**அன்னை கோமதி திருவடிகள் போற்றி...**

❖❖❖

# இரவியே

தசரத மன்னனிடம் இராமனையும், இலக்குவனையும் விசுவாமித்திர மகரிஷி தனது யாக சாலையைக் காக்க அழைத்துச் சென்றார். இராமனும், இலக்குவனும் விசுவாமித்திரருடைய யாக சாலையைக் "கண்ணை இமைக் காப்பது போல" காத்தனர் என்று கம்பர் கூறுவார்.

இதில் ஒரு நயம் உள்ளது. கண்களின் இமைகள் எவ்வாறு பணி செய்யும் என ஆய்ந்தால் மேல் இமை அசையும் கீழ் இமை அசையாது. அதுபோல் இராமன் யாகசாலையைச் சுற்றி வந்து காக்க, இலக்குவன் நின்ற இடத்திலிருந்தே அசையாது அரக்கர்கள் வருகையை நோக்கினான் என்பர்.

தாடகை வதத்திற்கு பின்பு யாகம் நிறைவேறிய பின்னர் விசுவாமித்திரர் இருவரையும் அழைத்துக் கொண்டு மிதிலை மாநகருக்குச் சென்றார். மகரிஷியுடன் வரும் இளைஞர்களின் அழகைக் கண்டு வியந்தனர் ஊரார். இச்செய்தி அந்தப்புரத்திற்கும் சென்றது. சீதை தன் சகோதரிகளுடன் மாடத்தில் வந்து நின்று பார்த்தாள். இராமனின் ஒளிமயமான அழகினைக் கண்டு சீதை அவனது தோளைக் கண்டாள். உடன் கண்களையும் கண்டாள். அப்போது இராமன் சீதையை நோக்கினான். இதைத்தான் "அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்" என்று கம்பர் கூறுகிறார். நோக்குதல் என்பது காரண காரிய தொடர்புடன் பார்ப்பதாகும். பார்த்தல் என்பது பார்த்து பரவசமடைந்து பின் மறந்து விடுதல் ஆகும். இவையே நோக்குதலுக்கும், பார்த்தலுக்கும் உள்ள வித்தியாசங்கள் ஆகும். தனது அவதார நோக்கம் நிறைவேற பிராட்டியும் தனக்குத் துணை சேர அவதாரம் எடுத்ததை எண்ணி இராமனும் மனமகிழ்ந்தான்.

மிதிலை அரசன் ஜனகரின் அன்பான வரவேற்பில் அகமகிழ்ந்த மூவரும் அவர் தந்த விருந்தினை ஏற்றனர். பின்னர் ஓய்வு கொள்ளச் சென்றனர். இராமனுக்கு உறக்கம் வரவில்லை. சீதையை எண்ணியவாறு மனம் அமைந்த காரணத்தால் இரவு வெகுநேரம் உறங்காமல் பின்னரே துயில்கொண்டான்.

அருணன் தோன்றும் முன்னரே அதிகாலைப் பொழுதில் எழும் பழக்கம் உடையவன் இராமன். ஆனால் இரவில் வெகுநேரம் விழித்திருந்த காரணத்தால் கதிரவன் தோன்றும் வரை இராமன் கண்ணயர்ந்திருந்தான்.

கதிரவனுக்கு மனத்தில் ஓர் ஆசை. பரம்பொருளாகிய திருமால் தனது குலத் தோன்றலாக

# இரவிகுல இராமனை வணங்கிய காட்சி



ஹரிணிப்ரியா

அவதாரம் செய்ததால் இராமனின் திருவடிகளை வணங்க இதுவரை நேரம் கிடைக்கவில்லை. கண்ணயர்ந்திருக்கும் இராமனின் திருவடிகளைக் கண்டு கதிரவன் ஆனந்தம் கொண்டான். தனது கிரணங்கள் மூலமாக இராமனின் திருவடிகளைத் தீண்டி, வணங்கி இன்புற்றான்.

இரவியே இரவிகுலத் தோன்றல் ஸ்ரீராமனை வணங்கிய காட்சியை கம்பநாட்டார் பாடிய பாடலைக் காணலாம்.

"செல்லாழி நீந்து அங்கைக் குளிவாரிச்
சிவைதுடக்கை கொண்ட கொண்டல்
எல்லாழித் தேர் இரவி இளங்கரத்தால்
அடிவருடி அனந்தம் தீர்ப்ப
அல்லாழிக் கரைகண்டான் ஆயிரம் வாய்
மணிவிளக்கம் அழலும் சேக்கைத்
தொல்லாழித் துயிலாதே துயராழி
இடைக்கிடந்து துயில்கின்றானே"

ரவி தனது இளங்கரத்தால் ராமனின் திருவடி களைத் தழுவி வணங்கிய நிலை உணர்த்தப்பட்டது. இராமனின் திருவடிகளை காலம் தவறாது கடமையாற்றும் கதிரவனே வணங்கினான். அதுபோல் தெய்வத் திருவடிகளை நாமும் வணங்க வேண்டு மென்று மறை பொருளாக இப்பாடல் உணர்த்துகிறது.

இறைவன் திருவடிகளே சரணம். நாமும் ராமனின் திருவடிகளைத் தொழுவோம். நலம் பல நிறைப்போம்.

❖❖❖



வெ. சுந்தரம்

# வனம் உயிரினங்களின் வரம்

பாரதத் திருநாட்டில் மூன்று பங்கு வனச் செழுமையும், ஒரு பங்கு மாந்தர் வாழும் பகுதியாகவும் இருந்தது. அதன் காரணமாகவே உயிரினச் சமநிலை அமைந்து இன்புற வாழ்ந்த நிலையிருந்தது. சைவ உணவு உண்பவை, அசைவ உணவு உண்பவை, இரண்டும் உண்பவை என முப்பிரிவுகள் எல்லா உயிரினங்களிலும் இருப்பது இயற்கை. உயிரினச் சமன்பாடு நிலை பெற இறைவகுத்தளித்த வாழ்வியல் நுட்பம். இச்சமநிலை மாறுபடும்போது பல்வேறு இயற்கைத் தன்மை மாறுகிறது.

பாரதி பாடிய பாடலிலே "30 கோடி ஜனங்களின் சங்க முழுமைக்கும் பொதுவுடைமை" என்றார். பாரதி வாழ்ந்த காலத்தே பாகிஸ்தான், வங்கதேசம், மியான்மர் எனப்படும் பர்மா ஆகியன இணைந்து ஒன்றாக இருந்தபோத 30 கோடி மாந்தர் என்றார். பிரிந்த நாடுகளை அப்போது அங்கு வாழ்ந்த மாந்தரை நீக்கித் தோராயமாக இன்றைய பாரதம், பாரதியின் காலத்தே இருபது கோடி எனக் கொள்ளலாம். காடுகளே கணக்கற்ற செல்வம் தந்திடும் என்பதை மறந்து, வனத்தை அழிக்கும்போது, வன உயிரினங்கள் இடம்பெயர்ந்து, மக்கள் வாழும் பகுதிகளில் உலாவர மக்களின் அன்றாட நிகழ்வுகள் பாதிக்கப்பட்டு, வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது.

பண்டைய காலத்தில் வனங்களில் மக்கள் கூட்டங்கூட்டமாக வாழ்ந்ததும், முனிவர்கள்

> **நீண்ட நெடிய வாழ்முறை சந்ததிகட்கு வன மேம்பாட்டை உணர்த்துவதற்கு உரிய நடைமுறையை கைக்கொள்ள வேண்டும். வனமே உயிரினங்கட்கு வரமே என்பதை உணர்ந்தால் நாடு நலம் பெறும். நற்பொருள் நாளும் அமையும்.**

ஆசிரமங்கள் வனத்துள் அமைந்த நிலையும், பண்டைய இதிகாச, புராண, வரலாறுகளின் மூலம் அறிகிறோம். அவர்கட்கு வன விலங்குகளால் தீங்கு நேரவில்லையே! மற்ற உயிரிகள் உணவு கிடைத்த மகிழ்வில் உயிர்களைத் துன்புறுத்தாது என்ற உண்மை புலனாகிறது.

மனிதனின் ஆசை பேராசையாக மாறியதே முக்கிய காரணியாகும். "உழைப்பிற்கேற்ற ஊதியம் - உணவுக்கான உழைப்பு" என்பதை மறந்து, பேராசையாக பேய் பிடித்து அலைவதால் ஏற்படும் விளைவுகள் விபரீத முடிவுகளாகி விடுவதைக் காணமுடிகிறது. முற்கால விலங்குகள், பறவைகள், ஊர்வன போன்றவை ஏடுகளில், கல்வெட்டுக்களில் மட்டும் காணமுடிகின்றது. முற்றாக அழிந்தவை பலவாகும். இனி இருப்பதைக் காக்க வேண்டாமா? தாவரங்கள் இல்லா வனம் "பாலைவனம்" என்று நம் மூதாதையர் கூறியதை நினைக்க மறந்தோம். சில தாவரங்கள் தானாக வளராது. பறவைகள் கனிகள் உண்டபின் எச்சத்தால் பூமியில் வீழ்ந்த விதைகளால் மற்றும் தாவர உண்ணிகளான ஆடு, மாடு, குதிரை, யானை போன்றவை உண்டு அவற்றில் செரிமானம் ஆகாமல் கழிவுகளோடு வரும் விதைகளால் மட்டும் விளையும் தாவரங்கள் பல உண்டு. தவிர ஊன் உண்ணும் தாவரங்கள் உண்டு. தாவரங்களில் சில பூமிக்குள் புதையுண்ட பல்லாயிரம் ஆண்டுகளுக்குப் பின் கல்மரம் என விளங்குவதை அறிவியல் கூறும். மற்றும் புதையுண்ட மரங்கள் பூமிக்குள் ரசாயன மாற்றம் கண்டு அமைந்தவையே நவரத்தினங்களில் முத்து, பவளம் நீங்கலாக பிற யாவும் தாவரங்களால் மாறுபாடு கொண்ட நிலையாகும்.

ஐவகை நிலங்களில் பாலை நிலம் தவிர பிற நால்வகை நிலங்களும் மாந்தருக்கு கடவுள் தந்த வரமாகும். வரம் தரும் கற்பகமாம் மரங்கள், செடி, கொடிகள் தாவரம் என மனிதனை 'வாழவைக்கும் வரம் பெற்றதால்' தாவரம் எனப் பெயர் பெற்றதை சற்றே சிந்திக்க வேண்டும்.

காற்றும், நீரும் (மழை) கனிச்செல்வங்களும் தாவரங்கள் தரும் வரமல்லவா? எத்தனையோ மருந்துகள் மனிதரால் கண்டுபிடித்ததாக பெருமை கொண்டாலும் அவையாவும் மூலிகைப் பொருட்களான தாவரங்கள் தந்த மூலப்பொருட்களே அல்லவா? மரங்களுக்கும் உயிர் உண்டு. அவை உணவு உட்கொள்ளல், வளர்தல், சுவாசித்தல், செய்வது பற்றி அறிந்தும், அழிக்கும்போது வனங்கள் வளம் குன்றுவதை உணர மறந்த மாந்தர், தனக்குத்தானே அழிவை ஏற்படுத்திக் கொள்வதாகும்.

குறிஞ்சி நில மலைகள், குன்றுகளை சுயஇலாபத்திற்காக வெட்டி எடுத்து மடுவாக மாற்றும்பொழுது இயற்கை தரும் செல்வத்தை அழித்துத் தனக்குத்தானே அழிவை விரும்பி ஏற்பதாகும்.

பலமாடி கட்டிடங்களாக கிராமங்கள் நகரமயமாகும்போது, தாவர இனங்கள் அழிவது கண்கூடாகக் காண முடிகிறது. நில வளமும், நீர்வளமும் குறையும் போது வாழ்வாதாரமான தாவரங்கள் குறைந்து வளம் குறைகிறது. கதிரின் வெப்பம் மிகவாகி நிலவின் குளிர்ச்சியும் குறைகின்றது.

கதிரவன் வெப்பத்தால் தாவரங்கள் அழிவதில்லை. மாறாக தூய காற்றையும், குளிர்ச்சியையும் தந்து பிற உயிரினத்தை வாழ வைக்கும் வரமருளும் தெய்வமாகும். அதுபோன்றே நிலவின் குளிர்ச்சியால் மருத்துவ மூலிகைகள் செழிப்பாக வளரும். குறிப்பாக குன்றுகளின் மீது மூலிகைகள் சிறப்புற வளரும். சித்தர்களும், யோகிகளும், ஞானியரும் தங்கள் வாழ்விடமான வனங்களையும், குன்றுகளின் குகைகளையும் கொண்டமைந்த நிலைகளை நூல்கள் மூலம் உணர முடிகிறது. இயற்கையை எதிர்த்து செயற்கை முறைகளால் வாழ முற்படுவதால் சொற்ப கால அற்ப சுகமே காணமுடியும்.

நீண்ட நெடிய வாழ்முறை சந்ததிகட்கு வன மேம்பாட்டை உணர்த்துவதற்கு உரிய நடைமுறையை கைக்கொள்ள வேண்டும். வனமே உயிரினங்கட்கு வரம் என்பதை உணர்ந்தால் நாடு நலம் பெறும். நற்பொருள் நாளும் அமையும். வனங்கள் வளமுற மண்ணில் உயிரினங்கள் சமநிலையோங்க வேண்டும். திருக்கோயில்களில் தலவிருட்சம் தீர்த்தக் குளங்களை கொண்டிருப்பதைக் காண்கிறோம். நீர், மரம் அவசியம் என்பதை சுட்டிக்காட்டும் முறையை உணர்ந்து செயல்படுவோம். வளம்தரும் வனம் நமக்கு இறை தந்த வரம். வாழ்க வையகம்.

❖❖❖



# பிரார்த்தனை

சிதம்பரம் ரவிச்சந்திரன்

இன்றைய காலகட்டத்தில் இந்தச் சொல் சில பேருக்கு ஏதோ நமக்குச் சம்பந்தமில்லாத ஒன்றைப்போல கருதிக் கொள்கிறார்கள். குறிப்பாக இளைஞர்கள் இவ்வாறு பெரும்பாலும் நினைக்கிறார்கள். கடவுள் என்பதும், பிரார்த்தனை என்பதும் எல்லாம் ஏதோ வயதானவர்களோடு தொடர்புடைய விஷயங்கள்போல அவர்கள் கருதுகிறார்கள். ஆனால் இளமையின் துடிப்பில் இப்போது வாழும் இவர்களே நாளை முதுமை வரும்போது, தாங்களாகவே தெய்வத்தைத் தேடத் தொடங்கிவிடுகிறார்கள். ஆனால் இதற்கெல்லாம் மாறாக நற்சிந்தனைகளையும், நல்ல செயல்களைச் செய்வதற்குரிய பலத்தைத் தரும் உடல், மன வலிமையைத் தரும் ஒரு மகாசக்தி, எது இந்த அண்ட சராசரங்களையெல்லாம் துல்லிய மானக் கணக்கில் ஒவ்வொரு நுண்ணிய விநாடியிலும் இயக்கிக் கொண்டிருக்கிறதோ அந்த மகாசக்தி தனக்கு வழிகாட்டியாக வைத்துக் கொண்டு அர்த்த முள்ள வாழ்வை வாழ இளைஞர்கள் பழகிக் கொள்ள வேண்டும்.

வேதத்திலும், புராணங்களிலும், இதிகாசங் களிலும் பிரார்த்தனையைப் பற்றிக் குறிப்பிடப் பட்டுள்ளது. பிரார்த்தனையின் பண்புகள் பற்றி 'நாரதீய பக்தி சூத்திரம்' என்ற நூல் விரிவாக்க எடுத்துக் கூறுகிறது. அறிவியல் உலகமும் இன்று பிரார்த்தனையின் மகத்துவத்தைப் பற்றி அங்கீகரித் துள்ளது. உலகில் சிறப்பான கருத்துக்களைக் கூறும் எந்த மதமும் பிரார்த்தனையினைப் பற்றிக் குறிப் பிடாமல் இல்லை. கிறித்துவத்திலும், இஸ்லாத்திலும் பிரார்த்தனை, திருப்பலி, ஜெபம் என்ற பெயர்களிலும், தொழுகை என்ற பெயரிலும் அறியப்படுகிறது. தூய்மையான இதயத்துடன் நாம் இறைவனை நோக்கிச் செய்யும் பிரார்த்தனைக்கு மதிப்பும், பயனும் கிடைக்கிறது. நூற்றுக்கணக்கான வருடங்களாக பிரார்த்தனையைப் பற்றிய ஆராய்ச்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன. மகான்கள், அவர் களுடைய எண்ணங்களிலும், சொற்பொழிவுகளிலும் பிரார்த்தனை கைவிடமுடியாத கடவுளோடு உள்ள உறவாக, இறைவனை அடையும் வழியாகக் கருதுகிறார்கள். பிரார்த்தனையுடைய குணங்கள், அடிப்படை அம்சங்கள், லட்சியங்கள், பயன்கள் போன்றவற்றைப் பற்றி புனித நூல்கள் நமக்குச் சொல்கிறது. இந்து மதத்தில் உள்ள உபநிடதங்கள்

பிரார்த்தனையைப் பற்றி விவரமாகக் கூறியுள்ளது. பிரார்த்தனை மனதோடு நெருங்கிய தொடர்புடைய ஒன்றாகும். அங்கு மனித அறிவுக்கூர்மைக்கும், புத்திசாலித்தனத்திற்க்கும் வேலையில்லை. மனப்பூர்வமாக ஒரு நிமிடமாவது கடவுளை நோக்கி பிரார்த்தனை செய்பவர்களும் உண்டு. பிரார்த்தனையின் மூலம் வேண்டுவது நாம் செய்யும் காரியங்கள் நமக்கும், மற்றவர்களுக்கும் பயன்தருவதாக இருக்க வேண்டும் என்பதே ஆகும். பிரார்த்தனைக்கு ஜாதி, மத, பணக்காரன், ஏழை போன்ற வேறுபாடுகள் எதுவும் இல்லை. பூசல நாயனார் சரித்திரத்தில் இருந்து மனதில் உண்மையாக கோயில் கட்டி வாழ்ந்த அவருக்கு காஞ்சியில் ஏகாம்பரநாதர் கோடிகள் செலவழித்து கும்பாபிஷேகம் செய்ய நினைத்த பல்லவ மன்னனை புறக்கணித்து ஏழை நாயன்மார் மனதால் கட்டிய கோயிலுக்கு சென்று அமர்ந்து கொண்ட கதை நமக்குத் தெரியும். படாடோபத்திற்காகவோ, ஆடம்பரத்திற்காகவோ செய்யும் பிரார்த்தனைகளுக்கும், பூசை, தான, தரும காரியங்களுக்கெல்லாம் எந்தப் பயனும் கிடைக்காது. வாகனம் ஓட்டுபவர்களில் இருந்து ஆரம்பித்து அறுவை சிகிச்சைக்குக் கத்தியை எடுக்கும் டாக்டரும், தேர்வு எழுதப்போகும் மாணவனும் எல்லோரும் பிரார்த்தனை செய்தபிறகே தங்களுடைய வேலைகளைத் தொடங்குகிறார்கள். உண்மையாகச் செய்யப்படும் பிரார்த்தனை ஒரு வெட்டித்தனமான காரியம் இல்லை. அது நமக்குள் ஊற்றெடுக்கும் ஆற்றலை ஒழுங்கு படுத்தவும், உறுதியான மனதையும் அளிக்கும் ஒரு பாதையாகும்.

பிரார்த்தனையில் ஈடுபடுபவன் எவ்வாறு தன் செயல்களை சரியாகச் செய்ய முடிகிறது என்பதை உளவியல் ஆராய்ந்து கொண்டிருக்கிறது. உபநிடதங்கள் இதைப் பற்றி முன்பே கூறியுள்ளது. அன்றாட வாழ்வை சுகமாக ஆக்குவதற்காகவே நாம் கோயில்களுக்குச் செல்கிறோம். ஒவ்வொருவருக்கும் அவரவர்களுடைய குடும்பத்தில் இருந்தும், சமுதாயத்தில் இருந்தும், எதிர்கொள்ளவேண்டிய பலவிதமான பிரச்சனைகள் உருவாகலாம். இவைகள் எல்லாம் அவனுடைய அமைதியை குலைப்பதும், தூக்கத்தைக் கெடுப்பதுமாக அமையலாம். இந்தப் பிரச்சனைகளை எப்படித் தீர்ப்பது என்பதைப் பற்றித் தெளிவான முடிவு எடுக்க முடியாமல் போகலாம். பதட்டமான மனதுடனும், பாரமான இதயத்துடனும் துயரத்தில் உழலும் மனிதனுக்கு பிரார்த்தனை கடவுளோடு பேசும் ஒரு வாய்ப்பாக, இறைவனோடு தொடர்புகொள்ளும் ஒரு தொடர்பு சாதனமாக அமைகிறது. தன்னுடைய கஷ்டங்களை எல்லாம் கண்ணீர் விட்டு மனமுருகி தெய்வத்திடம் சொல்லி முறையிடும் போது இறைவன் எல்லாப் பிரச்சனைகளுக்கும் தீர்வைச் சொல்கிறார் என்பதே பிரார்த்தனையின் ஆழமான அடிப்படைத் தத்துவமாகும். காரண காரியங்களைப் பற்றி அறிந்து கொள்ள முடியாத, அறிவியலுக்கும் மனிதனுடைய புத்திக்கும் எட்டாத எவ்வளவோ விஷயங்கள் பூமியில் நடந்து கொண்டிருக்கும் போது பிரார்த்தனையின் வழியாக கடவுள் மனிதனுடைய பிரச்சனைகளுக்கும் தீர்வு சொல்கிறார். மனதில் பாரங்கள் அழுத்தும்போது மனிதர்களிடம் சொல்வதைக் காட்டிலும் அவற்றை கடவுளிடம் சொல்லும்போது நமது மனதின் பாரமும் குறைகிறது. எல்லாவற்றையும் நம்மால் மனம் திறந்து சொல்லவும் முடிகிறது. இதனால் மனதின் துயரங்களின் அழுத்தத்தினால் தற்கொலைக்கு பிரார்த்தனை செய்பவர்கள் தூண்டப்படுவதில்லை. சிலர் மதுவிலும் இன்னும் மற்ற தீயவழிகளிலும் சென்று பிரச்சனைகளை எதிர்கொள்ள முடியாமல் தங்களைத் தாங்களே புதைகுழிக்குள் போட்டுப் புதைத்துக் கொள்கிறார்கள். இறுதியில் இவர்களை மரணதேவன் வந்து தேடும்போதுதான் திருந்துகிறார்கள்.

பிரார்த்தனை செய்வதற்கு என்று எந்த நேரமும், எந்த இடமும், எந்த மொழியும் சிறந்தது என்று கிடையாது. எந்த நேரத்திலும், எந்த இடத்திலும், எந்த மொழியிலும் இறைவனிடம் பிரார்த்தனையின் வழியாக நம் மனக்கஷ்டங்களை எடுத்துச் சொல்லலாம். ஒன்றே ஒன்று மட்டுமே பிரார்த்தனைக்குத் தேவை. அது தூய்மையான இதயம்தான். உலகத்தின் எல்லாவற்றிலும் சிறந்த பிரார்த்தனை பாரதம் நல்கிய கீதையில் உள்ள 'லோகா சமஸ்தா சுகினோ பவந்து' என்பது தான். 'உலகமே இன்புற்றிருக்க இறைவனை வேண்டும்' பிரார்த்தனை தான் இது. தாயுமானவரும், வள்ளலாரும் வேண்டியதும் இதுவே ஆகும்.

பிரார்த்தனை கேள்வி கேட்பதற்காக இல்லை. செல்வத்தைப் பெருக்குவதற்காகவும் இல்லை. நம்முடைய இதயத்தை அமைதிப்படுத்த உதவும் அமிர்த மழையாகும் அது. தற்கொலையைத் தடுக்கும் மிகச் சிறந்த மருந்தாகும் அது. 'நன்றாகப் பிரார்த்தனை செய்பவர்கள் அழுவது இல்லை' என்ற ரஷ்யப்பழமொழி அர்த்தமுள்ளது ஆகும். தேவைகள் எதுவாக வேண்டுமானாலும் இருந்துவிட்டுப் போகட்டும். அவற்றையெல்லாம் தெய்வத்தின் சந்நிதியில் சமர்ப்பிப்போம். நமக்குக் கிடைக்க வேண்டியது கிடைத்தே தீரும். அதற்காக பிரார்த்தனையை செய்யாமல் விடக்கூடாது. எல்லோரும் பிரார்த்திப்போம். மனதை சாந்தமாக்குவோம். மனம் அமைதியடைந்தால் வெறுப்பு தோன்றாது. கோபம் மாறி விட்டால் ஆனந்தம் ஏற்படும். பிராத்தனை என்பது ஆனந்தமாகும். பக்தியாகும். சுகமாகும்.

❖❖❖

# உணர்வும்

மானுடம் தழைத்த நாள் தொட்டு, நாம் கண்ட அனுபவத்தில் சில எதிர்பார்க்க இயலாத நிகழ்வுகளே வியக்கும் சிந்தனைக் களங்களாக அமையத் தொடங்கியுள்ளன. அதன் தேடலில் விடை காண இயலாத களங்கள்தான் இயற்கை அமைப்புகளாகப் போற்றப்படும் ஐம்பூதங்கள். உலகின் ஓரறிவு உயிர் முதல் ஆறறிவு உயிர்வரை உணர முடியாத களங்கள் பல இருப்பினும் ஆறறிவு உயிராகிய மானுடத்திற்குச் சவாலாக இன்றும் ஐம்பூதங்களே உள்ளன.

மானுடர்கள் விரும்பியவை கிடைக்க வேண்டுமென்று நிலையற்றவைகளின் மீது மீண்டும் மீண்டும் ஆசைகொண்டு மனமெனும் பூதத்திற்கு ஆட்பட்டு அழியவேண்டிய நிலை ஏற்படுகிறது பின்னர் மீண்டும் மீண்டும் பிறவிப் பயனை அடைந்து அழுந்தவேண்டியுள்ளது. ஒரு மனிதன் துன்பத்திற்கு ஆளாகும்போது அடைக்கலமாக யாரும் துணை நில்லாதபோதே துணைக்கு இறைவனைத் தேட வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகிறான். அதுவரை அவனிடத்தில் இருக்கிற தன்முனைப்பு அடங்குவதில்லை என்பது உலகியல்.

இயற்கை முழுவதும் இறைவனின் உடல். நம்முடைய சக்தி நம் அங்கங்களின் மூலம் வெளிப்படுவதுபோலவே இறைவனின் சக்தி இயற்கைகளின் வழி வெளிப்படுகிறது. இயற்கையில் ஏற்படும் விளைப்பயன்களே வாழ்வியலைத் தீர்மானிக்கின்றன என்பதை சிற்றின்பப்பயன் முதல் பேரின்பப்பயன் வரை உணர வைக்கின்றன.

இதிலிருந்து உலக இன்பங்களில் திளைத் திருந்த இந்த சமூகம் தேடலுக்கு எட்டாத சில இயற்கை நிகழ்வுகளைக் கண்டு புதிய அனுபவத்தைத் தேடும் நிலை ஏற்படுகிறது. காலம் கடந்த தேடல் இருந்துள்ளதை சில பதிவுகள்வழி நாம் உணரவேண்டியுள்ளது. தன் அறிவுக்கு எட்டியதெல்லாம் தன் கட்டுக்குள் கொண்டுவந்த மானுட சக்தி அறிவின் எல்லைக்கு எட்டாத ஒரு நிகழ்வைக் கண்டு பயம் ஏற்படத் தொடங்கின. அதில் உள்ள உணர்வுக் களங்கள் பல்வேறு நிலைகளில் வெளிப்படத் தொடங்கியுள்ளன.

இன்பமும் துன்பமும் வண்டிச்சக்கரம் போல வருபவை என்ற எண்ணத்தில் துன்பத்தை அனுபவித்தால்தான் இன்பம் கிடைக்கும் என்று துன்பத்தைத் தேடி அனுபவிப்பவர்களும் உண்டு. இவர்கள் வாழ்க்கை என்பது அடுத்த உலகிற்கு ஆன்மாவைக் கொண்டுசெல்லும் சாதனம் என்று கருதி வாழ்கின்றனர். பொறிபுலன்களை அடக்கி ஆள்வதற்கும் மனத்தை ஒருநிலைப் படுத்துவதற்கும் ஏற்ற வழி துன்பங்களைத் தேடிப்பிடித்து அனுபவிப்பதே என்று கருது கின்றனர். துன்பங்கள் தொடரும்போது ஓரளவிற்கு புலனடக்கம் ஏற்படுவது இயற்கை. அளவைக் கடக்கும்போது மனம் ஒருநிலைப் படாமல் கவலையில் ஆழ்ந்து மனம் பேதலித்து அலைவதும் சாத்தியமாகிறது.

வாழ்க்கையில் இன்பம் துன்பம் இரண்டை யும் கொடுப்பவன் படைத்தவனாகத்தானே இருக்கவேண்டும். படைத்தவன் இதனை எவ்வாறு தீர்மானிக்கிறான் என்ற வினாக்களுக்கு விடைதேடும்போதே வினைப்பயனாக இருக்கலாம் என எண்ணத்தோன்றுகிறது. சிலர் நன்மை கிடைக்கும்போது முன்னோர்கள் செய்த புண்ணியமாகவும், துன்பம் நேரும்போது பூர்வ ஜென்ம புண்ணியங்கள் என அலுத்துக் கொள்வதைப் பார்க்க முடிகிறது. இதையே இன்றைய ஆன்மிக நெறிகள் உறுதி செய் கின்றன. தனு, கரண, புவன, போகம் என்று கூறப்படும் அனுபவப் பொருள்கள் இறை வனாலேயே படைக்கப்பட்டுள்ளதால் இதற்கான அனுபவத்தைக் கொடுப்பதும் படைத்தவ னாகத்தானே இருக்க முடியும். மனித உணர்வுகள் ஏதாவது ஒன்றின் மீது பற்றுக்கொண்டு செயல்படுவது இயற்கை. அதனால் தான் சார்ந்ததன் வண்ணமாதல் உயிர்களின் இயற்கை என சித்தாந்தம் கூறுகிறது.

இதனடிப்படையில்தான் ஆன்மீக நெறிகளும் வகுக்கப்பட்டுள்ளன. உலகத்தில் தோன்றிய எல்லா சமயங்களும் உயிர்கள் எதன்மீதாவது பற்றுக்கொண்டு இயங்கும் என்பதை ஏற்றுக்கொள்கின்றன. 'அற்றது பற்றெனில் உற்றது வீடு' பிறந்தும் 'பற்றுக

# நெறியும்

முனைவர் ஜெ. தமிழ்ச்செல்வி

பற்றற்றான் பற்றினை அப்பற்றைப் பற்றுக பற்றுவிடற்கு" (குறள்) "ஆசை அறுமின்கள் ஆசை அறுமின்கள், ஈசனோடாயினும் ஆசை அறுமின்கள்(திருமந்திரம்) என்று வகுத்துக்காட்டும் நெறிகளின் வாயிலாக பற்றறுத்தலே மன அமைதிக்கான அடிப்படை என்பதை உணர்ந்துள்ளனர்.

இதனை அறிந்த குமரகுருபரர்,

"பல்லுயிர் தொகுதியும் பயம்கெடவன்று உய்கெனக்
குழவை என்றும் குடவயல் நாப்பண்
அருள்விழித் திட்டுக் கருணைநீர் பாய்ச்சி
வேதம் என்றும் பயிர்வளர்த்தனை"

என்று பாடுகிறார். ஆன்மிக நெறியை வளர்க்க வேதங்கள் தோன்றின. ஆனால் பற்றறுத்தலை அடியார்கள் மேற்கொண்ட செயல்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வழியை உடையன வேதம் ஒரு வழியாயினும் இவர்கள் கையாண்ட நெறிகள் வேறு வழியில் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

அடியார்களின் வரலாறு தம்முள் மிகப்பெரிய மாறுபாடுகளைப் பெற்றுள்ளன என்பது மிகப்பெரிய ஆய்வுக்குரியது. கோயில் தொண்டு செய்தவர் ஆறு பேர். பாடிப் பதம் பெற்றவர் இருவர். மனத்தில் கோயில் கட்டியவர் இருவர். மந்திரஞ் செபித்தவர் நால்வர். அடியார்களுக்குத் தொண்டுசெய்தவர் பத்துப்பேர். வேற்றுச் சமயத்தாரோடு போரிட்டவர் ஏழு பேர். கோயில் கட்டியவர் இருவர். தலயாத்திரை செய்தவர் ஒன்பது பேர். அடியார் வேடங்களுக்கு மதிப்புத் தந்து அதனால் இறந்தவர் இருவர். செயற்கரிய செயல்கள் செய்தவர்கள் பதினொரு பேர். பெருஞ்சோதனைக்கு ஆளானவர் எட்டுப்பேர் எனப் பெரியபுராணம் கூறுகிறது.

இதில் மிக எளிதான செயல்களால் பூசலார், ஆனாயர், முருகர் ஆகியோரும் மிகக் கடுமையான செயல்களாக நம்மால் நினைக்கப் படுகிற இயற்பகையார், கண்ணப்பர், சண்டேசர், சிறுத்தொண்டர் ஆகியோர்களையும் எண்ணும் போது பற்று அறுத்தலாகிய ஒரே பயனுக்குத்தான் இவ்வனைவரும் முயன்றுள்ளனர்.

ஆதிமனிதன் முதல் இன்றைய மனிதன் வரை மனக்கூறுபாட்டை ஆய்ந்து அதனை அடக்கி ஆள முயன்றுள்ளான். பற்று அறுதல்தான் மனத்தை அடக்குவதற்கு ஒரேவழி. அது ஒருநாள் நிகழ்வல்ல. வாழ்வில் அவரவருக்கு ஏற்படும் அனுபவமே அவர்களை ஆற்றுப்படுத்தும். செவிவழிச் செய்தியில் திருந்திவிடும் செயல் அல்ல இது.

சினம் அடங்கக் கற்றாலும் சித்திஎல்லாம் பெற்றாலும்
மனம் அடங்கக் கல்லார்க்கு வாயேன் பராபரமே

என்று தாயுமானவரும், 'மணிவெளுக்கச் சாணையுண்டு, மனம் வெளுக்க வழியிலேயே என்று பாரதியாரும் பாடுவதின் உட்பொருளே அனுபவமே வாழ்க்கையை திசைதிருப்பும் துடுப்புகளாகும் என்பதை அறிய வைக்கிறது.

இவ்வுலகில் சில அனுபவங்கள் நமக்கு ஏற்பட்டிருக்கும். உடலுக்கு நோயோ தீங்கோ ஏற்பட்டால் அந்த உடற்கூறு அறிந்த மருத்து வரை நாடுகிறோம். பொருளாதார நெருக்கடியோ பணப் பற்றாக்குறையோ ஏற்பட்டால் செல்வந்தரை நாடுகிறோம். மனத்தை அடக்கவேண்டு மானால் 'பொறிவாயில் ஐந்தவித்தான்' எனப்படும் இறைவனை நாடவேண்டியுள்ளது. அவனை வணங்குவதற்கே அவன் அருள்தான் துணைநிற்க வேண்டும். அதுகருதியே 'அவன் அருளாலே அவன் தாள் வணங்கி' என்று அருளி யுள்ளனர்.

"மாசற்ற கொள்கை மனத்தில் அடைந்தக்கால்
ஈசனைக் காட்டும் உடம்பு"

என்ற ஔவையின் குரல்காட்டும் எதார்த்தம் மாசற்ற கொள்கை என்பது ஆன்மாவின் பரிசுத்தத்தைப் பறைசாற்றுகிறது. ஆன்மாவின் பரிசுத்த நிலையை உணர வைப்பது ஆன்மிக நெறியாகக் கொள்ளப் பெறுகின்றன.

நல்ல வாக்கும் நல்ல மனமும் கொண்டு நடைமுறை எதார்த்தங்களைக் கடந்த உணர்வுகளே இறை பக்திக்கு வழிவகுக்கும் என்று தமிழ்த் திருமறைகள் பல நெறிப்படுத்திச் சென்றுள்ளன.

❖❖❖

# ஆனாய நாயனார்

- சிவ. சண்முகதிரவியம்

மனம் உள்ளவன் மனிதன். அந்த மனதில்தான் எத்தனை எத்தனை வகைகள்? அந்த வகைகளுக்குத் தகுந்தவாறுதான் மனிதர்களுடைய சீலமும் வாழ்வும் அமைந்திருக்கின்றன. மனிதன் மனிதனாக வாழ்வது அவ்வளவு எளிதான காரியம் இல்லை. மனிதப் பண்பு என்ற மாண்புதான் மனிதனை மனித னாக உயர்த்துகிறது. மனிதனை மனிதன் ஆக்கு வதற்கு சில அடிப்படையான பயிற்சிகள் வேண்டும்.

அந்தப் பயிற்சிகளை மனித சமுதாயத்திற்கு வழங்கி, அவர்களை மனிதர்களாக்கி பின் அவர்களை உயர்ந்த நெறியுடன் வாழச் செய்வதற்காகவே தோன்றியவர்கள் நாயன்மார்கள்.

தமிழ்நாட்டில் கடவுள் நம்பிக்கையில்லாத சமணர்களின் பிடிக்குள் தமிழ்நாட்டு மன்னர்கள் அகப்பட்டுக் கொண்டார்கள். தமிழ்நாட்டு மக்கள் தங்கள் சமயத்தை வாழ்க்கையில் மேற்கொள்ள முடியவில்லை. பெண்களுக்குச் சுதந்திரம் இல்லாமல் போய்விட்டது. தங்கள் சமயச் சின்னமான திரு நீற்றை நெற்றியிலே பூசிக்கொள்ள முடியவில்லை. பெண் பிறவியின் மூலமாக முக்திபெற முடியாது என்ற தவறான கொள்கையை சமணர்கள் பரப்பி வந்தார்கள்.

இந்த அடிமை நிலையில் இருந்து மக்களுக்கும், அவர்கள் கடைபிடிக்கும் சமயத்திற்கும் சுதந்திரம் கொடுப்பதற்காகவே தோன்றியவர்கள் நாயன்மார்கள். அப்படித் தோன்றிய நாயன்மார்களில் ஆனாயர் ஒரு சித்தராக விளங்குகிறார்.

ஆனாயர் இசையையும் அதன்மீது நமசிவாயம் என்கிற பஞ்சாட்சர மந்திரத்தையும் ஏற்றி சித்தாடலே செய்கிறார். மனிதன் கற்பனை செய்து பார்க்க முடியாத அற்புதங்களை ஏழிசையில் பஞ்சாட்சர மந்திரத்தைப் ஏற்றி பிரபஞ்சத்தையே தம் வசப்படுத்து கிறார். ஏழு இசையோடு பஞ்சாட்சர மந்திரத்தையும் இணைத்து ஆனாயர் செய்திருக்கும் அற்புதத்தைப் பாருங்கள்.

சோழநாட்டில் மழவர்நாடு என்ற ஒரு பகுதி இருந்தது. அதை மேற்கு மழவர்நாடு, கிழக்கு மழவர் நாடு என்று பிரித்து இருந்தனர். இவற்றில் மேற்கு



ஆனாய நாயனார்

மழவர் நாட்டின் தலைநகரான திருமங்கலத்தில் தோன்றியவர் ஆனாயர். ஆனாயர் ஒரு குறுநில மன்னன். அந்த நாளில் மன்னர்களுக்கு செல்வமே பசுக்கள்தான். எனவே ஆனாயர் பசு காத்தலையும் செய்து வந்தார். பசுக்களை பாதுகாத்தி அவைகளை ஊருக்கு வெளியில் காட்டுப்பகுதியில் மேய்ப்பதற்காக ஓட்டிச் செல்வார். இவ்வாறு பசுக்காத்தால் தொழில்புரிபவர்களின் தலைவராகவும் செயல்பட்டார்.

பசுக்களை காட்டு மிருகங்களிடமிருந்தும், நோய்களிடமிருந்தும் காப்பாற்றி வந்தார். பசுக்கள் பயமில்லாமல் காட்டு வெளியில் மேய்ந்து வந்தன. நல்ல தண்ணீரை பசுக்கள் அருந்தி ஆனந்தமாக ஓய்வெடுத்துக் கொண்டன.

பசுக்களை மேய்ப்பதற்கு ஆனாயர் புல்லாங்குழல் வாத்தியத்தைப் பயன்படுத்தி வந்தார். தம்முடைய குழல் இசை மூலமாக பசுக்களுக்கு நல்ல புல்வெளி இருக்கும் இடங்களையும், நல்ல தண்ணீர் இருக்கும் இடங்களையும், ஓய்வெடுத்துக் கொண்டு அசை போடுவதற்கான அருமையான நிழல் சூழ்ந்த இடங்களையும் ஆனாய நாயனார் காட்டி வந்தார்.

ஆனாயர் சிவபக்தி நிறைந்தவர். நெற்றியில் சிவச்சின்னமாகிய திருநீற்றை அணிந்து விளங்குவார். எப்பொழுதும் 'நமசிவாய' என்ற ஐந்தெழுத்து மந்திரத்தை குழல் இசையில் வாசித்துக் கொண்டே இருப்பார். தொடர்ந்து வாசித்துக் கொண்டே இருப்பார்.

இறைவன் ஏழு இசையாகவும், இசையின் பயனாகவும் விளங்குவார். எனவே அவருடைய பெருமையை மந்திர தந்திர வடிவத்தில் குழலில் வாசித்த வண்ணம் இருப்பார். ஆனாயனார் குழல் இசையின் மூலமாக பஞ்சாட்சர மந்திரத்தை ஓதிக் கொண்டு தம்மை மறந்த லயம் தன்னில் இருப்பார். சராசரங்கள் எல்லாவற்றுக்கும் இசை அமுதத்தை அளித்து வந்தார்.

இதைப்பற்றி நம்பியாண்டார் நம்பி,

'தாம் அவன் பாதமும் தாழ்சடை மேல் தனித்திங்கள் வைத்த
தூயவன் பாதம் தொடர்ந்து தொல்சீர் துலையாயம் புரவும்
கோவலன்மேல் மறுநாட்டு விரிபுனல் மங்கலக்கோன்
ஆயவன் ஆனாயன் என்னை உவந்து ஆண்டு அருளினனே!'

என்று பாடி வியக்கிறார்.

தம் புல்லாங்குழல் இசையின் மூலமாக சிவபெருமானின் அருளைப் பெற்றவர் ஆனாயர்.

அவர் எல்லா உயிர்களுக்கும் தாயாக விளங்கும் பஞ்சாட்சர மந்திரத்தை ஏழ் இசையின் மீது ஏற்றி பிரபஞ்சத்தில் உள்ள உயிர்கள் இன்பம் அடையும்படிச் செய்து வந்தார்.

சுந்தரர், "அலைமலிந்த புனல் மங்கை ஆனாயருக்கு அடியேன்" என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் சொல்லி வணங்குகிறார்.

ஆனாய நாயனார் பெருமையை சேக்கிழார் சொல்வதைப் பாருங்கள். "மண்ணும் ஆனாயர் செய்கை அறிந்தவா வழுத்தல் உற்றேன்" என்கிறார். புல்லாங்குழல் இசையின் சக்தியால் நிலைக்காத பொருளையும் நிலைக்கச் செய்தவர் ஆனாயர் என்று வியக்கிறார்.

ஆனாயர் நாள்தோறும் குழல் இசையைக் கொண்டு, 'நமசிவாய' என்ற பஞ்சாட்சர மந்திரத்தின் ஆற்றலைக் கொண்டு பசுக்களைக் காத்து வந்தார்.

ஒருநாள் ஆனாயர் தம்முடைய சித்து ஆற்றலை இறைவன் அருளால் சுத்த சமாதியில் உணர்ந்துகொண்டார். சித்தர்களுக்கே உரிய உலகியலுக்கு முரண்பாடான செயலில் ஈடுபட ஆரம்பித்தார்.


இந்த உண்மையை திருமூலரும் தெரிவிக்கிறார்.

யோக சமாதியின் உள்ளே புவிடம்
யோக சமாதியின் உள்ளே உள் ஒளி
யோக சமாதியின் உள்ளே உள சக்தி
யோக சமாதி உகந்தவர் சித்தரே

சித்தர்களுடைய வாழ்க்கை அடிப்படையே இதுதான்.

இந்த உடம்பில் இருக்கும் தெய்வச் சக்தியால் வருங்காலத்தைத் தெரிந்துகொள்பவர்கள் சித்தர்கள். இந்த ஆற்றல் பெற்றவர்கள் தவயோகிகள். இந்த யோகமே சித்தர்களுடைய நெறியாகும். இந்த ஆற்றலை ஆனாயனார் பெற்று உயர்ந்து விடுகிறார்.

ஆனாயனார் இப்பொழுது அழகும், நளினமும் நிரம்பிய ஒரு பெண்மணியைப் போல் தன்னைக் காட்சிப்படுத்திக் கொள்வார்.



சித்தர்களின் தலைமைச் சித்தராகிய திருமூலர், சித்தர்களின் திருவிளையாடல்களைப் பற்றி ஒரே வரியில் தெரிவித்திருக்கிறார்.

"பெண் ஆக்கி தம்மைப் பிழைப்பித்த ஆரே!" என்கிறார். இறைவன் மட்டுமே ஆண் என்பதும், உயிர்கள் எல்லாம் பெண் என்பதும் இந்தச் செய்யுள் அடிக்குப் பொருள்.

ஞானச் சித்தர்கள் தங்கள் அனுபவத்தில் சொல்லி இருப்பதையே மூலர் சொல்லி இருக்கிறார்.

ஆனாயருடைய செயலுக்கும் இது பொருத்தமாக இருக்கிறது. கானகத்துப் பசுக் கூட்டங்களுடனும், இடையர்களுடனும் சென்ற

**“முரண்பாடுடைய புலிகளும், மான்களும், ஆடுகளும், பாம்புகளும், மயில்களும் ஒன்றுகூடி நின்று ஆனாயர் குழல் இசையில் பஞ்சாட்சர மந்திர ஒலியில் மயங்கி நின்றன ஓடுகின்ற நதிகளும், வீழ்ந்து கொண்டிருக்கின்ற அருவிகளும், வீசிக் கொண்டிருந்த காற்றும், வானத்தில் ஓடிக் கொண்டிருந்த மேகங்களும், அலை வீசிக் கொண்டிருந்த கடலும் அசைவற்று சித்திரம்போல் காட்சி அளித்தன.”**

ஆனாயர் பூத்துக் குலுங்கும் கொன்றை மரம் ஒன்றைப் பார்க்கிறார்.

அது தம் மனதில் இருந்துகொண்டு இருக்கும் சிவபெருமானைப் போலவே அவருக்கு காட்சி அளித்தது.

அடுத்த கணம் அவர் தம்மை மறந்தார். தம் உள் இருக்கும் இறைவனைக் கண்டார். ஆனந்த வெள்ளத்தில் மூழ்கினார். தம் கையில் இருந்த புல்லாங்குழலை எடுத்தார். மடை திறந்த வெள்ளம் போல் அவர் உள்ளத்தில் அன்பு பொங்கியது.

அது அமுத இசையாக குழலில் இருந்து வெளிப்பட்டது. இந்த இசையில் பஞ்சாட்சர மந்திரம் உள்பொருளாகிவிட்டது.

நமசிவாய என்ற மந்திரத்தின் உருவமாகவே ஆனாயனார் மாறிவிட்டார். இறைவன் திருவடிகளை தம் மனதில் இறுகப் பிடித்துக் கொண்டார்.

அவர் குழல் ஒலியில் இறைவன் சிக்கிக் கொண்டார். அடுத்த கணம் இறைவன் நாத உருவில் திருநடனம் செய்யத் தொடங்கிவிட்டார்.

கண்ணுக்குத் தெரியாத இறைவனின் திருநடனம் கானகத்தில் சித்தாடல் செய்ய ஆரம்பித்துவிட்டது.

கற்பகப் பூந்தேனும், தேவ அமுதமும் கலந்த ஒரு சுவர்ண விக்கிரகம் பரத நர்த்தனமே ஆடுவது போலிருந்தது.

இசையும் கூத்தும் இணைந்து சிவமாகியது. பசுக்கூட்டங்கள் புல்லை மேய மறந்தன. ஆனாயனார் முன்னால் தங்களை மறந்து பரவசத்தில் நின்றன. பறவைக் கூட்டங்கள் பறந்து ஆனாயரின் குழல் இசையில் சுழன்று சுழன்று வந்தன. மயில்கள் தோகை விரித்து ஆடின.

இடையவர்கள் சிற்பங்களைப் போல பல்வேறு நிலைகளில் அசைவற்று நின்றுகொண்டிருந்தனர். தங்களை மறந்து இன்ப வெள்ளத்தில் மூழ்கி இருந்தனர்.

நிலையாக நிற்கும் மலைபோன்ற பொருட்களும், ஓடிக்கொண்டிருக்கும் நதிகளும் எல்லாம் இசைமயமாகிவிட்டன. புலன்களும், பொறிகளும் கரணங்களும் ஒன்றுபட்டு நின்றன.

ஆனாயனார் இசையில் ஒலித்த பஞ்சாட்சர மந்திரம், ஐந்தெழுத்து மந்திரம் உலகத்தை நிரப்பியது. வானத்தையும் தன்வசமாக்கியது. இறைவனையும் ஈர்த்தது.

இந்த சமயத்தில் ஒரு வியப்பு நிகழ்ந்தது. ஆனாயனார் முன்னால் அம்மை அப்பன் காட்சி அளித்தார்.

இப்போது நீர் மேற்கொண்டிருக்கும் தோற்றத்துடனும், நாதமயத்துடனும் சிவமயமாக நம் உலகத்தில், பொன் அம்பலத்தில் எழுந்தருளி நிலைபெற்று இருப்பீராக! என்று அருளி ஆனாயநாயனாரை இறைவன் ஆட்கொண்டார்.

நமசிவாய வாழ்க! நாதன் தாள் வாழ்க! இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க! - திருவாசகம்

**ஆனாய நாயனார் தோன்றிய திருமங்கலம் திருச்சிராப்பள்ளிக்கு அருகில் இருக்கும் லால்குடிக்கு மேற்கில் எட்டு மைலுக்கு அப்பால் காவிரியின் வடகரையில் உள்ளது.**

திருமங்கலம் கோயிலின் உட்சுவற்றின் வடமேற்கில் ஆனாயனார் சிவப்பேறு பெற்ற இடம் இருக்கிறது.

அங்கு கொன்றை மர நிழலில் ஆனாயனார் குழல் இசை வாசிக்கும் திருவுருவங்கள் இருக்கின்றன. ஆனாயரை இன்று மக்கள் வழிபாடும் செய்து வருகின்றனர். இந்தக் கோயில் சோழ மன்னர்களால் கட்டப்பட்டது என்பதை கோயில் சுவற்றில் இருக்கும் கல்வெட்டுகள் மூலம் அறிய முடிகிறது.

இறைவன் திருநாமம் சாம வேதீஸ்வரர் - அம்பிகையின் திருநாமம் உலக நாயகி அம்மையார்.

இசைக்கலைக்கும், எல்லா கலைகளுக்கும் ஆதியந்தமானது சிவமே என்று இங்குள்ள கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.

இந்தத் தலத்தைப் பற்றிய வரலாற்றை உண்மைகளைக் கம்பரும் பாடி இருக்கிறார்.

“[illegible]”

❖❖❖

# மருதமலை

மருதமலை மேற்குத் தொடர்ச்சி மலையில் கோவையிலிருந்து 14 கி.மீ. தொலைவில் உள்ளது. முப்புறமும் மலைகளால் சூழப்பட்டு 500 அடி உயரத்தில் அழகிய இயற்கை சூழ்ந்த இடத்தில் உள்ளது. முருகனின் அருள்பெற்ற பாம்பாட்டிச் சித்தர் வடித்த சிலையே சுப்பிரமணியராக ஞானத் தண்டேந்தி அருள்பாலித்து வருகிறார். சூரசம்காரம் இங்கு நடைபெறுவதில்லை. படிகளில் ஏறும் வழியில் இடும்பன் சந்நிதி உள்ளது. வழியில் 837 படியேறி நடந்து செல்லும்போது காணப்படும் இயற்கை வளம் மனம் நிறைவான பயணமாக மாற்றும். ஈசுவரன், அன்னை இருவருக்கும் நடுவே சோமாஸ் கந்தராக மூலவர் எழுந்தருளியிருப்பது தனிச்சிறப்பு. மலைப்பாறைகளுக்கு இடையில் உள்ள குகை ஒன்றில் பாம்பாட்டிச் சித்தர் சந்நிதியும் உள்ளது. மொத்தத்தில் இயற்கைவளம் சூழ்ந்த குன்றில் வீற்றிருக்கும் சுப்பிரமணியரை மனம் நிறைவாக தரிசித்துத் திரும்பலாம்.

# அருள்மிகு அங்காளம்மன் திருக்கோயில் திருக்குட நன்னீராட்டு பெருவிழா



மேல்மலையனூர், செஞ்சி வட்டம், விழுப்புரம் மாவட்டம், அருள்மிகு அங்காளம்மன் திருக்கோயில் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா 18.11.2015, புதன்கிழமை காலை 9.00-10.25க்குள் நடைபெற உள்ளது. இறையன்பர்கள் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழாவில் கலந்துகொண்டு அம்மன் திருவருள் பெற பயனிப்போமாக.

# திருவண்ணாமலை



**மலை வல(ள)த்தின் சிறப்பு**

பெரும்பாலான திருத்தலங்களில் தெய்வங்கள் மலைமேல் இருப்பதுண்டு. ஆனால் திருவண்ணாமலையில் மலையே தெய்வமாகவும் வழிபாட்டிற்குரியதாகவும் உள்ளது. அருணன் என்றால் சூரியன் - நெருப்பின் நிறமான சிவப்பைக் குறிக்கும். அசலம் என்றால் கிரி என்றும் மலை என்றும் பொருள். எனவே அருணாசலம் என்றால் சிவந்த நிறத்தையுடைய மலை என்று பொருள். இம்மலையில் உயரம் 2688 அடி.

அண்ணாமலையானது கிருதா யுகத்தில் அக்னி மலையாகவும், திரேதாயுகத்தில் மாணிக்க மலையாகவும், துவாபர யுகத்தில் பொன் மலையாகவும், கலியுகத்தில் கல் மலையாகவும் மாறி வந்துள்ளது. எட்டு திக்கிலும் அஷ்டலிங்கங்களைக் கொண்ட எண்கோண அமைப்பில் திருவண்ணாமலை நகரம் காணப்படுகிறது. அஷ்டலிங்கங்கள் எனப்படுபவை இந்திர லிங்கம், அக்னி லிங்கம், யமலிங்கம், நிருதி லிங்கம், வாயு லிங்கம், குபேர லிங்கம் மற்றும் ஈசான்ய லிங்கம். தேவாரத்தில் புகழப்படும் ஆதி அண்ணாமலை திருக்கோயில் மலை வலப்பாதையில்தான் அமைந்துள்ளது.

இந்த மலையின் சுற்றளவு 14 கிலோமீட்டர் உள்ளது. இம்மலையில் இன்றும் பல சித்தர்கள் வாழ்ந்து வருவதாக வரலாறு. அதன் காரணமாக மலைவலம் வருவது சிறந்தது. குறிப்பாக பௌர்ணமி நாளன்று மலைவலம் வருவது மிகவும் சிறப்பான பலன்களைத்தரும். காரணம் பௌர்ணமி நாளில் விசேடமாக எண்ணற்ற சித்தர்கள் நடமாட்டம் இருப்பதாகவும், மூலிகைக் காற்றுகளின் மணம் வீசுவதால் மனத்திற்கு அமைதியும், உடல் நலத்திற்கு நன்மையும் ஏற்படுவதால், இன்றும் லட்சக்கணக்கான பக்தர்கள் பௌர்ணமியன்று மலைவலம் வந்தும் அருள்மிகு அண்ணாமலையாரை தரிசித்தும் எல்லா நலன்களும் பெறுகிறார்கள். அதிலும் எண்ணங்களை ஈடேற்றும் திருநாளாகும் கார்த்திகை மாதத்தில் வலம்வருவது தனிச்சிறப்பாகும்.

கூரார்வாளி சிலையிற்கோத்துக்
கொடிமதில்கூட்டழித்த
போரார்வில்லி மெல்லியலாளோர்
பால்மகிழ்ந்தானிடமாம்
ஆராஅன்பில் தென்னர்சேரர்
சோழர்கள்போற்றிசைப்பத்
தேரார்வீதி மாடம்நீடுந்
தென்திருப்பூவணமே — திருஞானசம்பந்தர்

படைமலிந்த மழுவாளும் மானும் தோன்றும்
பன்னிரண்டு கண்ணுடைய பிள்ளைதோன்றும்
நடைமலிந்த விடையொடு கொடியும் தோன்றும்
நான்மறையின் ஒலிதோன்றும் நயனந்தோன்றும்
உடைமலிந்த கோவணமுங் கீளுந்தோன்றும்
ஊரல்வெண் சிரமாலை உலாவித் தோன்றும்
புடைமலிந்த பூதத்தின் பொலிவு தோன்றும்
பொழில்திகழும் பூவணத்தெம் புனிதனார்க்கே

— திருநாவுக்கரசர்

மின்னனை யாள்திரு மேனி விளங்கவோர்
தன்னமர் பாகம தாகிய சங்கரன்
முன்னினை யார்புர மூன்றெரி யூட்டிய
பொன்னனை யானுறை பூவணம் ஈதோ — சுந்தரர்

**"இத்தலத்தின் தீர்த்தங்கள் ஆறு. பிரமதீர்த்தம் வையையின் வடகரையிலும், மணிகர்ணிகை அம்மன் சந்நிதியிலும், சூரியதீர்த்தம் வடபிரகாரத்திலும், சந்திரதீர்த்தம் மேற்குப் பிரகாரத்திலும், தேவிகுண்டம் அம்மன் கோயிலுக்குள்ளும், இலட்சுமிதீர்த்தம் தேரோடும் வீதியிலும் இருக்கின்றன. வையையாற்றில் போடப்படும் எலும்புகள் மலர் அல்லது கல்லாகின்றது என்பது ஐதீகம்."**

பாண்டிநாட்டே பழம்பதி யென்று பாராட்டப்படுவது. அந்நாட்டில் பதினாலு பாடல்பெற்ற சிவத்தலங்கள் உள்ளன. அவற்றில் ஒன்று திருப்பூவணம் என்பது. பாண்டி நாட்டில் இப்பதி யொன்றே மூவர் தேவாரப்பாடல் பெற்ற தனிச்சிறப்புடையது. மற்றவை ஒருவர் அல்லது இருவரால் பாடப் பெற்றவை. மாணிக்கவாசகர் திருவாசகத்திலும் இத்தலத்தைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார். இப்பதி மதுரைக்குக் கிழக்கே பன்னிரண்டு கல்தொலைவில் வையையாற்றின் கரையில் அமைந்திருக்கிறது. மதுரையிலிருந்து இராமநாதபுரம் செல்லும் நெடுஞ்சாலை இவ்வூர் வழியே போகிறது. திருப்புவனம் என்ற இருப்புப்பாதை நிலையத்திலிருந்து கோயில் அரைகல் தொலைவி லிருக்கிறது.

திருப்பூவணம் நான்கு பகுதிகளையுடையது. பழையூர், புதூர், கோட்டை, நெல்முடிக்கரை என்பன. கோட்டை என்ற பகுதியில்தான் திருப்பூவணநாதர் கோயில் இருக்கிறது. இவ்வூருக்கருகிலுள்ள மணலூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட குலசேகரபாண்டியன் இவ்விடத்தில் முடிசூட்டு விழாவில் நெற்கதிரை முடியாகச் சூட்டிக் கொண்டமையின் நெல்முடிக்கரை என்ற பெயர் ஏற்பட்டது. புஷ்பவனகாசி, பிதுர்மோட்சபுரம், பாஸ்கரபுரம், இலட்சுமிபுரம், பிரமபுரம், இரசவாதபுரம் என்ற வேறு பெயர்களும் இத்தலத்திற்கு உண்டு.

வையையாறு இவ்விடத்தே சிறிது வடக்கு தெற்காக வளைந்தே ஓடுகிறது. சுவாமி, அம்பாள் சந்நிதிகள் இரண்டும் கிழக்கு நோக்கியே இருக்கின்றன. இரண்டு சந்நிதிகளுக்கு நேரே கோபுரங்களையுடைய வாயில்கள் இருக்கின்றன. வெளிப்பிரகாரமும், இறைவன் கோயிலுக்கு உட்பிரகாரமும் இருக்கின்றன. அம்பிகையின் கோயில் வெளிப்பிரகாரத்தில் இறைவன் சந்நிதிக்கு வலப்பக்கம் அமைந்திருக்கிறது.

பெருமானின் திருப்பெயர்கள் திருப்பூவணநாதர், புஷ்பவனேசுவரர் என்பன. தேவியின் திருநாமங்கள் மின்னனையாளம்மை, சவுந்தரநாயகி என்பவை. பொன்னனையாள் என்னும் கணிகைமாதுக்காக சிவபெருமான் ஒரு சித்தராகிவந்து, இரசவாதம் செய்து பொன்கொடுக்க, அந்த தாசி அப்பொன்னால் இறைவன் திருவுருவம் அமைத்தாள். அதுவும் மிகவும் அழகாக அமைந்திருந்தபடியால் "அச்சோ அழகு", "அச்சோ பூவணமே" என்று கூறி உரு வத்தின் கன்னத்தைக் கிள்ளி அவள் முத்தமிட்டாள். ஆதலின் இறைவனுக்கு "அச்சோ அழகியபிரான்" என்றும் பேருண்டு. கிள்ளிய அடையாளமும் சிலையில் இருக்கிறது. இவ் வரலாறு திருவிளையாடற் புராணத்தில் இரசவாதம் செய்த படலத்தில் கூறப்பட்டிருக்கிறது. அப்புராணத்தின் அர்ச்சனைப் படலத்தில் "தவ சித்தர் இரதவாதம் செய்து சிவனுரு வங்கண்ட எழில் நகரும்" என்று குறிக்கப்பட்டிருக்கிறது. பொன்னனையாள், சித்தர் இவர்களின் பெரிய திருவுருவச்சிலைகள் கண்கவர் வனப்புடன் இக் கோயிலில் திகழ்கின்றன. இங்குள்ள நடராஜர் சிலாவுருவமும் அற்புதச் சிற்ப வேலைப்பாடுடையது.



இத்தலத்தின் தீர்த்தங்கள் ஆறு. பிரமதீர்த்தம் வையையின் வடகரையிலும், மணிகர்ணிகை அம்மன் சந்நிதியிலும், சூரியதீர்த்தம் வடபிரகாரத்திலும், சந்திரதீர்த்தம் மேற்குப் பிரகாரத்திலும், தேவிகுண்டம் அம்மன் கோயிலுக்குள்ளும், இலட்சுமிதீர்த்தம் தேரோடும் வீதியிலும் இருக்கின்றன. வையையாற்றில் போடப்படும் எலும்புகள் மலர் அல்லது கல்லாகின்றது என்பது ஐதீகம். பல இடங்களிலிருந்து இறந்தவர் களுடைய எலும்புகள் கொண்டுவரப்பட்டு கோயிலுக் கெதிரில் வையையாற்றில் புதைக்கப்படும் வழக்கம் இன்றும் இருக்கின்றது. தர்மக்யன் என்ற அந்தண னுடைய அஸ்தி புஷ்பமானதாகத் தலபுராணம் கூறு கிறது. இத்தல விருட்சம் பலா. பங்குனியில் பிரமோற் சவமும், ஆடியில் அம்பாள் உற்சவமும் நடை பெறுகின்றன.

வையையாற்றின் மணல் எல்லாம் சிவலிங்கமாகத் தோன்றினமையின் அவற்றை மிதித்தற்கஞ்சி அப்பர், சம்பந்தர், சுந்தரர் மூவரும் அக்கரையிலிருந்தே சிவபெருமானை வழிபட்டனர். அவர்களுக்காக இறைவன் நந்திதேவரைச் சிறிது சாய்ந்திருக்கும்படி

# திருப்பூவணம்

அமுதா

பணிக்க, அவ்வாறே சிறிது சாய்ந்தனர். அத்தோற்றத்தை இன்றும் காணலாம். இச்செய்தியை, புட்பவனநாதர் வண்ணம் என்ற நூலில்,

செப்புமூவர் சொற்றமிழ்த்துதிக்க
திருப்பொரு வந்துவை மணற்சிவலிங்கமென
மனத்தெண்ணியன்பு வடகரைக் கவர்நின்று
தமிழ் பாடியாமுதே இடமாதமுதே
சாயும்வகையே செய்து முன்
மூவர்தரிசிக்க மகிழ்சேர்

என்ற பாடற் பகுதியால் அறியலாம். இப்பொழுதும் மூவர் மண்டபம் என்ற பெயரால் வையையாற்றின் வடகரையில் ஒரு பழைய மண்டபம் இருக்கிறது. அதைச் சுற்றிலும் பலசிவலிங்கங்களும் நந்தியின் வடிவங்களும் புதையுண்டு காணப்படுகின்றன. பொன்னனையாள் மடம் என்றும், பொன்னனையாள் மண்டபம் என்றும் இரண்டு கட்டிடங்கள் இத்தலத்தில் உள்ளன. அவற்றுள் முன்னது பொன்னனையாள் சிவனடியார்களை அமுது செய்வித்த இடமென்றும், பின்னது அவள் பொருட்டு மதுரைச்சொக்கநாதர் வந்து இரசவாதம் செய்தருளிய இடம் என்றும் கூறுகின்றனர். இக்கோயிலிலுள்ள கொடுங்கைகள் திருப்பெருந்துறையிலிருப்பவை போன்று மிக்க அழகியவை.

திருஞானசம்பந்தப் பெருந்தகையார் இத்தலத் திற்கு 22 பாடல்களையுடைய இரண்டு பதிகங்கள் ஓதியருளியுள்ளார். "பாரார் வைகைப் புனல்வாய் பரப்பிப் பன்மணி பொன் கொழித்துச் சீரார் வாரிசேர நின்ற திருப்பூவணமே" என்று வையைக் கரையில் இப்பதியமைந்திருப்பதை அழகாகக் கூறுகிறார். "முறையால் முடிசேர் தென்னர் சேரர் சோழர்கள் தாம் வணங்கும் திறையாரொளி சேர் செம்மை யோங்குந் தென்திருப்பூவணமே" என்றும், "ஆரா அன்பில் தென்னர் சேரர் சோழர்கள் போற்றிசைப்பத் தேரார்வீதி மாடம் நீடுந்தென் திருப்பூவணமே"

என்றும் முடிமன்னர்மூவரும் இங்கு வழிபட்டதைக் குறிக்கிறார். இன்னும், 'பூவணத்துறை ஈசனை மலர்புனைந்தேத்துவார் வினைநாசனை அடிதொழ நன்மையாகுமே' என்றும், 'பூவணந்தனைப் பரவிய அடியவர்க்கில்லை பாவமே' என்றும் இத்தலத்திறை வனை வணங்கினால் பெறும் பயனை எடுத்துச் சொல்கிறார்.

அப்பமூர்த்திகள் இப்பதிக்கு ஒரு பதிகம் பணித் துள்ளார். வையை யாற்றின் வடகரையிலிருந்தே "வடிவேறு திரிசூலம் தோன்றும் தோன்றும்" என்று தொடங்கிப் பாடியருளியிருக்கிறார். சிவலிங்கப் பெருமான்மீது திரிசூலம் இருப்பதை இன்றும் காணலாம். 'பன்னிரண்டு கண்ணுடைய பிள்ளை தோன்றும்' என்று முருகப்பெருமானையும், 'மின்னனைய நுண்ணிடையாள் பாகம் தோன்றும்' என்று தேவியின் பெயரையும் குறிப்பிட்டிருக்கிறார். 'ஆரொருவர் உள்குவார் உள்ளத்துள்ளே அவ்வுருவாய் நிற்கின்ற அருளும் தோன்றும்' என்றும் அழகுபடக் கூறி யுள்ளனர்.

சுந்தரமூர்த்திசுவாமிகள் இத்தலத்திற்கு ஒரு பதிகம் பாடியருளியிருக்கின்றார். இவர் இப்பதியை வழிபட வரும்போது தமிழ்நாட்டு முடியுடை மவேந்தரும் உடன் இருந்தனர். 'எண்ணியிருந்து கிடந்து நடந்தும் அண்ணலெனா நினைவார் வினை தீர்ப்பார் புண்ணியனார் உறை பூவண மீதோ' என்று எந்த நிலையிலிருந்து இறைவனை எண்ணினாலும் அவர் இடர்தீர்ப்பார் என்று நமக்கு அறிவுரை பகர்கிறார். ஒரு பாட்டில் "மின்னனையாள் திருமேனி விளங்வோர் தன்னமர் பாகமதாகிய சங்கரன்" என்று இத்தலத்து இறைவியின் திருப்பெயரைக் குறிக்கிறார்.

மாணிக்கவாசகப்பெருமான் கீர்த்தித் திருவக வலில் 'பூவணமதனில் பொலிந்திருந்தருளித் தூவணமேனி காட்டிய தொன்மையும்' என்றும், போற்றித் திருவகவலில் 'பொருப்பமர் பூவணத்தரனே போற்றி' என்றும் கூறியிருக்கிறார்.

கருவூர்த்தேவர் திருவிசைப்பாவில் திருப்பூவணத் திற்கு ஒரு பதிகம்பாடியிருக்கின்றனர். அது ஒன்பதாம் திருமுறையில் இடம்பெற்றிருக்கிறது. ஒவ்வொரு பாடலிலும் 'ஆவணவீதிப் பூவணங்கோயில் கொண் டாயே' என்று முடிக்கிறார். "பாம்பணைத் துயின் றோன் அயன்முதல்தேவர் பன்னெடுங்காலம் நிற் காண்பான் ஏம்பலித்திருக்க என்னுளம் புகுந்த எளிமையை என்றும் நான் மறக்கேன்" என்றும், "கடுவினைப் பாசக்கடல் கடந்து ஐவர் கள்ளரை மெள்ளவே துறந்துன் அடியிணையிரண்டும் அடையுமாறடைந்தேன் அருள் செய்வாய் அருள் செய்யாதொழிவாய்" என்றும், "செம்மனக்கிழவோர் அன்புதாவென்றுன் சேவடி பார்த்திருந்தலச எம்மனங்குடி கொண்டிருப்பதற்கு திருந்தலச எம்மனங்குடிகொண்டிருப்பதற்குயானார் என்னுடை அடிமைதான் யாதே" என்றும், "கம்நனில் மனத்தென் கண்வலைப் படுமிக் கருணையிற் பெரிய தொன்றுளதே" என்றும் இறைவன் அவர் மனத்தைக் கோயிலாக்கொண்ட எளிமையைப் போற்றுகிறார்.

சேக்கிழார்பெருமான், திருநாவுக்கரசர் புராணத்தில் 'கொடிமாடம் நிலவு திருப்பூவணத்துக் கோயிலினுள் நெடியானுக் கறிவரியார் நேர் தோன்றக்கண்டி றைஞ்சி வடிவேறுதிரிசூலத் தாண்டகத் தால் வழுத்தினார்' என்று கூறுகிறார். திருஞானசம்பந்தர் புராணத்தில் 'புற்றரவும் பணிபூண்ட புனிதனார்தம் பூவணத்தைப் புக்கிறைஞ்சிப் புகழ்ந்து பாடினார்' என்று சொல்கிறார். சுந்தரர் அடியார்களுடனும் மூவேந்தருடனும் மதுரையிலிருந்து திருப்பூவணத்துக்கு அண்மையில் வர, தொண்டர்கள் அப்பதியைக் காட்ட 'திருவுடையார்' என்று தொடங்கி 'பூவணமீதோ' என்று பணிந்தார். முடியுடை மூவேந்தருடன் இறைவனை வணங்கினார் என்றும், அப்பதியில் சிலநாள் தங்கியிருந்தார் என்றும் சேரமான் பெருமாள் நாயனார் புராணத்தில் சேக்கிழாரடிகள் சொல்லி யிருக்கிறார்.

அருணகிரிநாதர் இப்பதிக்கு மூன்று திருப்புகழ்ப் பாடல்களை அருளியிருக்கிறார். ஒரு வீதிகள்தோறும் நனிமேவு பூவணமான மாநகர்வாழு நாதகுகேச பெருமாளே" என்று கூறுகிறார்.

திருப்பூவணம் - கந்தசாமிப்புலவர் என்பார் தலபுராணம் ஒன்று இயற்றியிருக்கிறார். அது 20 சருக்கங்களும், 1137 பாடல்களையும் கொண்டது. இவரே புட்பவனநாதர் வண்ணம், திருப்பூவணத் தலவகுப்பு, தீர்த்த வகுப்பு, மூர்த்திவகுப்பு, திருப்பூவணநாதர் உலா முதலிய நூல்களையும் பாடியுள்ளார். உலா, மிகுந்த இலக்கியச் சுவையுடையது. பூவணம் முதலிய தலச்சிறப்பும், நாயன்மார் அருமைச் செயல்களும், கோயிலில் நடைபெற்ற திருப்பணிகளும் இந்நூலில் கூறப்பட்டிருக்கிறது. "போதத் திருவுருவாம் பொன்னனையாட் கிரதவாதத் திருவுருவாய் வந்துதித்தோன்" என்று புலவர் பொன்னனையாளுக்கு இறைவன் இரசவாதம் செய்த அற்புதத்தைக் குறிக்கிறார். இத்தலத்திற்கு வடமொழியிலும் ஒரு புராணமிருக்கிறதென்பர்.

இவ்வூரில் முருகன்கோயில், பெருமாள் கோயில், மாரியம்மன்கோயில், வீரபத்திர சுவாமி கோயில், முனியாண்டிகோயில் எனப் பிற தொன்மை யான கோயில்களும் இருக்கின்றன.

❖❖❖

**Published** by Commissioner on behalf of Hindu Religious and Charitable Endowments, Published from 119, Uthamar Gandhi Salai, Nungambakkam, Chennai - 34 and **Printed** by V. Ramesh at Chennai Micro Print (P) Ltd, New No. 130, Old No. 34, Nelson Manickam Road, Aminjikarai, Chennai - 29. **Editor:** Dr.J. Sasikumar.




மதுரை மீனாட்சி அம்மன் திருக்கோயிலில் நடைபெற்ற நவராத்திரிப் பெருவிழாவில் பக்தர்களுக்கு அருள்பாலித்தபோது...





சென்னை பெசன்ட் நகர் அஷ்டலட்சுமி திருக்கோயிலில் நடைபெற்ற நவராத்திரிப் பெருவிழாவில் திரளாகக் கலந்துகொண்ட பக்தர்கள்.

Regd. of Newspaper for India under No. TNTAM/2013/52432
Thirukkoil monthly postal Reg. No. TN/CH(C)/489/14-16 TN/PMG(CCR) WPP - 368/14-16 Publication: 1st of Every Month Posted at Patrika Chennai Egmore RMS

